




# நாளை

May 15, 2010 இதழ் 4 www.naalai.com
NAALAI - FREE NEWS PAPER







# தமிழ் கூறு நல்லுலகங்களில் பன்மைத்துவம், ஒடுக்குமுறை, சிந்தனைச் சுற்றோட்டங்கள்

## ஐந்தாவது தமிழியல் மாநாடு மே 13-15, 2010 ரொறொன்ரோ பல்கலைக்கழகம்.



ரொறொன்ரோப் பல்கலைக் கழகத்தின் தென்னாசியாக் கற்கைகளுக்கான நிறுவனமும் வின்சர் பல்கலைக் கழகமும் இணைந்து ஆண்டுதோறும் நடத்தும் தமிழியல் மாநாடு இந்த ஆண்டும் மே மாதம் 13-15 தேதிகளில் நடைபெற உள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்த வரை இந்தக் காலகட்டம் மிகவும் நெருக்கடிகளையும் சவால்களையும் அள்ளி எறிகிற காலகட்டமாக அமைகிறது. தென்னாசிய நாடுகளிலும் இது ஒரு சிக்கல் மிகுந்த காலமாகவே இருக்கிறது. இந்த நிலையில் 'தமிழ்கூறும் நல்லுலகங்களைக் கட்டி எழுப்புதல்: பன்மைப்பாடு, ஒடுக்குமுறை, சிந்தனைச் சுற்றோட்டங்கள்" என்னும் பொருளில் ஐந்தாவது தமிழியல் மாநாடு இடம் பெறுவது மிகவும் பொருத்தமானதும் தேவையானதுமாகும். புலமையாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள் போன்றோர் ஆய்வுத் தளத்தில் ஒன்றுகூடும் அரங்காகவும் இது அமைகிறது. தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாகப் பல்வேறு தமிழ்ச் சமூக அமைப்புக்களும் பல்கலைக் கழக சமூகமும் ஒன்றிணைந்து இந்த மாநாட்டை நடத்தி வருகின்றனர்.

தமிழ் உலகங்களைக் கட்டியமைப்பதில் பன்முகப்பாடு அல்லது பன்மைத்துவத்தின் வகிபாகம் என்ன? பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகள் தமிழ் உலகங்களில் எவ்வாறு தொழில்படுகின்றன? இவற்றின் அகப், புறப் பரிமாணங்கள் யாவை? சிந்தனைகள், பண்டங்கள், மனிதர்கள் நாடு விட்டு நாடு மாறி மாறிச் சுற்றோடி வருகிறமையும், புலம் பெயர்வும் எத்தகைய தாக்கங்களை நமது அடையாளங்களிலும் உலகங்களிலும் ஏற்படுத்துகின்றன? ஆகிய கேள்விகளை முன்னிலைப்படுத்துகிறது இந்த மாநாடு.

சமூகவியல், நுண்கலைகள், வரலாறு, மானுடவியல்,அரசியல், புலம்பெயர்வியல், பெண்ணியம், இலக்கியம் போன்ற பல்வேறு துறைகள் சார்ந்து மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட உள்ளன. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அறுபதுக்கு மேற்பட்ட புலமையாளர்களும் கலைஞர்களும் பங்கேற்கிறார்கள். சிறப்புப் பேருரைகளையாற்றப் பேராசிரியர் சஞ்சே சுப்பிரமணியம் (வரலாற்றுத் துறை, கலிபோர்ணியாப் பல்கலைக் கழகம், லொஸ் ஏஞ்சலிஸ்), பேராசிரியர் ராஜ் கௌதமன் (மேல் நிலைப் பட்டப் படிப்புகள் நிறுவனம், பாண்டிச்சேரி) ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

www.tamilstudiesconference.ca - Pg 14


கனேடிய வழக்கறிஞர்
Raphael Maharaja
Law Office



IMMIGRATION LAW, REAL ESTATE LAW
STUDENT VISA & WORK PERMITS
GTA SQUARE
5215 Finch Ave, East, Unit 219
Toronto, Ontario, M1S 0C2
(Middlefield & Finch)

Tel: 416-847-7077 416-847-7093 (Injury Claims) Fax: 416-847-7088
www.maharajalaw.com

# ஆயுட்காப்புறுதி

நிம்மதியான வாழ்க்கைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு

**RESP, RSP Funds**

**Non-Medical Insurance, Life Insurance,**

**Disability, Critical-Illness, Mortgage Insurance,**

**மருத்துவ பரிசோதனை அற்ற காப்புறுதி**

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

ROYAL BROKERS
INSURANCE & INVESTMENT SOLUTIONS

**Menan Rasanayagam**

**மேனன் இராசநாயகம்**

காப்புறுதி முகவர்

**416-564-2008**



Canada Life™ Manulife Financial Assumption Life Unity Life of Canada

# Come and See Mr. Punch

## Open House - Sat May 15th, 1 - 6 pm




## 56 Ascolda Blvd.

### Bellamy & Eglinton













**பஞ் சொக்கலிங்கம்** Broker

Century 21
Affiliate Realty Inc. Brokerage *
Tel : 416-290-1200

**416 PUNCH ME**
**416.786.2463**



- 3+2 Bedrooms
- Raised Bungalow

## ஆசிரியர் தலையங்கம்

# நாங்கள் பறிக்க முனைவது ‘அதிகாரம்” என்ற கனியைத்தான்

இது வலி சுமந்த மாதமெனில் மீதி மாதங்கள் யாவும் வலி சுமக்காதவையா என்றொரு கேள்வியும் எழுகின்றது. எல்லா மாதங்களுமே நாம் வலி சுமந்த மாதங்களே. ஈழத் தமிழர்களது வாழ்வு உட்பட உலக வரலாறெங்கும் ஒடுக்கப்பட்டவர்களது வரலாறு இவ்வாறு வலியாலும், இரத்தத்தாலும் எழுதப்பட்டவையாகத்தான் அமைகிறது.

ஆயினும் இன்றைய உலக ஒழுங்கில் பெருக்கெடுத்தோடிய குருதியை எம்மால், உலகத்தால் , இந்தியாவால் ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை ? இதற்கான நேரடிக் காரணம், இங்கு புகுந்து விளையாடும் அரசியல்தான். எனவே அந்த அரசியலைப் புரிந்து கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும்.

அந்த அரசியல் இங்கு எமக்குக் கூற விழையும் பாடம் - ‘எதிர்காலத்தில் ஆயுதப் போராட்ட வழிமுறையைத் தேர்ந்தெடுக்காதே” என்பது. அதன் ஓர் படித்தாகவே மக்களாட்சிக் கருத்துருவாக்கங்களை நோக்கி நாம் நடை பயில்கின்றோம்.

இங்கேயும் ஓர் வேடிக்கை. ஒரு தேர்தலை ஒழுங்காக மக்களாட்சியின் உயர் விழுமியங்களுக்கு ஏற்ப நடத்த முடியாத புலம்பெயர் தமிழர்கள் எப்படி ‘நாடு கடந்த தமிழீழ மக்களவையை” இயக்கப் போகிறார்கள் என்ற அங்கலாய்ப்பு இயல்பாகவே எம்மில் பலருக்கும் ஏற்படுகின்றது.

மக்களாட்சி அமைப்பில் பல்வேறு வகையிலான கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் எழுவது தவிர்க்க முடியாததுதான். ஆனாலும் அத்தகைய கருத்து முரண்பாடுகளை ஜனநாயகக் கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்த்துக் கொள்வதற்கான பண்புகளை, அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளாத வரைக்கும் அச் சமூகம் இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகின்றது.

இதனை மறுத்துக் கொண்டு கருத்து முரண்பாடு கொள்வோர் மீது சேற்றை வாரி எறிந்து கொண்டு தாங்கள் மட்டுமே தமிழ் மக்களைப் பிரிநிதித்துவம் செய்யத் தகுதி படைத்தவர்களாக எல்லாத் தரப்பினருமே முண்டியடித்துக் கொண்டு பாய்வதுதான் இங்கு பலருக்கும் நீதியான கோபத்தை ஏற்படுத்துகிறது. தேர்தலில் வென்றவர்கள், தோற்றவர்கள் எல்லோருக்குமே இது பொருத்தப்பாடாகத் தோற்றமளிப்பதுதான் இங்கு ஆச்சரியமான உண்மை. தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை , இறைமை என்றெல்லாம் கோசம் போட்டுக் கொண்டு நாங்கள் பறிக்க முனைவது ‘அதிகாரம்” என்ற கனியைத்தான்.

இவ்வாறு அதிகாரப் பசியில் காய்ந்து கொண்டிருக்கும் எம்மால் ஒடுக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தில் ஒரு துரும்பையும் அசைத்துவிட முடியாதென்பது தான் இங்கு ஆழ்ந்து கிடக்கும் மிகப் பெரிய உண்மை.

அதனால் நாமெல்லோருமே துரோகிகள், கைக்கூலிகள், குழப்பவாதிகள், என்ற முட்கம்பி வேலிக்குள் நம்மவரால் அடைக்கப்படுகின்றோம். இதிலிருந்து மேலும் ‘கூட்டுச் சதிகள்”, ‘நம்பிக்கைத் துரோகங்கள்”, ‘அவதூறுகள்”, ‘வன்மப் பிரச்சாரங்கள்”, ‘அச்சுறுத்தல்கள்” ,’கொலை மிரட்டல்கள்” என்ற சொல்லாடல்கள் பிறப்பெடுகின்றன. இதற்கான அடிப்படைக் காரணம் அதிகார வேட்டையே என்று அடித்துக் கூறலாம்.

எனவே இதனை வெல்வதற்கான உபாயமும், மாற்று அரசியல் வெளிக்கான களமும் இன்று வரை வெற்றிடமாக இருப்பதாகவே ‘நாளை ஏடு” கருதுகின்றது. ஆகவே அதனை வென்றெடுப்பதற்கான பணியில் ‘நாளை ஏடு” தன்னை முழுமையாக ஈடுபடுத்துமென்றும் உறுதி பூணுகின்றது.

**தொடர்பு:**
Tel: 647-237-3619

**முகவரி:**
36 Slamander St
Scarborough ON
M1X 1Y9
CANADA

**மின்னஞ்சல் முகவரி:**
naalaieditor@gmail.com

**இணையத்தள முகவரி:**
www.naalai.com

**பதிப்பாளர்:**
நடராஜா முரளிதரன்

**ஆசிரியர்:**
நடராஜா முரளிதரன்

**ஆலோசகர் குழு:**
ச. தவராஜசிங்கம்
மத்தியாஸ் அருள்நேசராசா
ஆ. தயாளசீலன்
மாங்கொல்லை சிறி
தி. கலியுகராஜா

**விநியோகம்:**
கி. ஜெயக்குமார்
பபி

இப்பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்களில் உள்ள கருத்துகள் அவற்றை எழுதியவருடைய அபிப்பிராயமே தவிர பத்திரிகையின் எண்ணத்தை பிரதிபலிப்பவை அல்ல. இவ்விதழில், வெளியாகும் விளம்பரங்கள், அனைத்துக்கும் சம்மந்தப் பட்டவர்களே பொறுப்பாவார்கள்.

இவ்விதழில் வெளியாகும் விளம்பரங்கள், முழுமையாகவோ அல்லது பகுதி பகுதிகளாகவோ, மறுபிரசுரம் செய்யமுன் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி பெற்றுக் கொள்ளவும்.

> “ உண்மை என்பது பலமுகம் கொண்டது என்று உணராதவர்களால் ஜனநாயகத்தை நம்ப முடியாது. ஜனநாயகத்தை, பன்மைத்துவத்தை நம்பாத எதுவும் படிப்படியாகப் பேரழிவையே உருவாக்கும். எத்தனை லட்சியங்களை முன்வைத்தாலும் இறுதியில் அந்த லட்சியங்களின் புதைமேட்டில்தான் அது அமர்ந்திருக்கும். ”

## உள்ளே....

**சமகால வரலாற்றைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம்**
பக்கம் 4

**கோட்பாடுகளின் தோல்வி நாடு கடந்த அரசு?**
பக்கம் 7

**தேசிய சுயநிர்ணயம்**
பக்கம் 10

**அக்டோபர் ‘ரசியப் புரட்சி’ குறித்த இன்றைய சிந்தனை**
பக்கம் 28

**சாதியத்தை எதிர்த்தாரா மகாத்மா?**
பக்கம் 27

**அமைப்பியலும் அதன் பிறகும் -2**
பக்கம் 20

**ஈழத் தேசிய சினிமா**
பக்கம் 21

# சமகால வரலாற்றைப் பதிவு செய்வதன் முக்கியத்துவம்

வரலாறு பதிவு செய்யப்பட்ட தொடக்க காலம் தொட்டு தென் இந்தியாவும் ஈழமும் (சிறி லங்காவும்) தமிழர்களது வாழ்விடமாக இருந்து வந்திருக்கிறது. தமிழ்நாட்டின் பழைய வரலாறு 6000 ஆண்டுகளுக்குப் பின்நோக்கிப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. தமிழர்களது பிறப்பிடம் பற்றிய வாதம் ஆரியர் களது படையெடுப்புத் தொடர்பான சித்தாந்தத்தோடு தொடர்புடையது. இந்தச் சித்தாந்தம் தமிழர்கள் திராவிட இனத்தவர் என்றும் அவர்கள் சிந்து வெளியில் வாழ்ந்த மக்களின் ஒரு பிரிவினர் என்றும் இயம்புகிறது. பின்னர் ஆரியரது படையெடுப்புக் காரணமாகத் திராவிடர்கள் தென்பகுதிக்குக் குடிபெயரும் கட்டாயத்துக்கு உட்படுத்தப்பட்டனர். இறுதியாக அங்கு அவர்கள் தங்கிவிட்டனர். இன்றைய தமிழ்நாடு, மலையாளம், கன்னடம் மற்றும் ஆந்திரம் ஆகிய நாடுகள் திராவிடர் பண்பாட்டைக் கொண்ட மாநிலங்களாக விளங்குகின்றன. சேர மன்னர்கள் ஆண்ட சேரநாடு வடக்கில் இருந்து வந்த பெருமளவு பிராமணர்களின் குடியேற்றத்தால் இன்று அதன் தமிழ் அடையாளத்தை இழந்துவிட்டது.

தமிழர்கள் கடலோடிகள். பேரரசர் ஒகஸ்து சீசர் காலத்தில் உரோமோடு வாணிகம் செய்தார்கள். அவர்கள் இந்துப் பெருங்கடலைச் சுற்றியிருந்த நாடுகளுக்கு கப்பல்களை அனுப்பி வைத்தார்கள். அந்தக் கப்பல்களோடு வணிகர்கள், அறிஞர்கள் மற்றும் வாழ்வியல் முறைமையும் சென்றன. இலங்கைத் தீவு இந்திய துணைக்கண்டத்தில் இருந்து 30 மைல் தொலைவுக்குக் குறைந்த கடலாலேயே பிரிக்கப்பட்டுள்ளது. எனவே அது தமிழர்களுக்குத் தெரியாமல் இருக்கவில்லை. தமிழர்கள் அதனை ஈழம் என்று அழைத்தார்கள்.

தமிழ்ச் சங்க இலக்கியங்கள் கிமு ஒரு நூற்றாண்டுக்கும் கிபி இரண்டு நூற்றாண்டுக்கும் இடையில் தென்னிந்தியாவை ஆண்ட சேர, சோழ மற்றும் பாண்டியர் என்ற மூன்று நாடாளும் வம்சங்களைப் பற்றிப் பேசுகின்றன. தென்னிந்தியா பல அகண்ட புவியியல் மற்றும் பண்பாட்டு வலையங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை நாடுகள் என அழைக்கப்பட்டன.

கிபி நான்காம் நூற்றாண்டில் பெரிய கோயில்களைக் கட்டுவதில் புகழ் பெற்றிருந்த பல்லவர் தென்னிந்தியாவை அடுத்த 400 ஆண்டு காலம் ஆட்சி செலுத்தினார்கள். தமிழ்நாட்டின் பெரும் பகுதி அவர்களால் ஆளப்பட்டது. காஞ்சிபுரம் அவர்களது தலைநகராக விளங்கியது. ஆறாவது நூற்றாண்டில் அவர்கள் சோழர்களை வெற்றி-கொண்டு தங்களது ஆட்சியை இலங்கைக்கும் விரிவு படுத்தினார்கள். பல்லவ அரசர்களில் முதலாவது மகேந்திரவர்மன் மற்றும் அவனது மகன் முதலாவது நரேந்திரவர்மன் புகழ்வாய்ந்த அரசர்கள் ஆவர். பல்லவர் ஆட்சிக் காலத்திலேயே திராவிட சிற்பக்கலை அதன் கொடுமுடியைத் தொட்டது. கடைசி பல்லவ மன்னன் அபராஜிதன் ஆவான். அவன் 9 ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் ஆதித்திய சோழனால் தோற்கடிக்கப்பட்டான்.

காவேரி ஆற்றின் படுக்கை சோழர்களது மைய நிலப்பரப்பாக இருந்தது. அது சோழநாடு என்று அழைக்கப்பட்டது. பாண்டிய நாடு பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டது. அதன் தலைநகரம் மதுரை ஆகும். கோயம்புத்தூரைச் சுற்றியிருந்த நிலப்பரப்பு கொங்கு நாடு என்று அழைக்கப்பட்டது. இது சிலசமயம் மேற்குக் கரையை அண்டிய சேரநாட்டை ஆண்ட சேரமன்னர்கள் வசம் இருந்தது. சில சமயம் அது தமிழ்ப் பகுதியை ஆண்ட மன்னர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. கிபி 1000 - கிபி 1100 இடைப்பட்ட காலத்தில் சோழப் பேரரசின் ஆட்சி அதிகாரம் உச்சத்தில் இருந்த போது இந்தப் பகுதிகள் முழுதும் சோழப் பேரரசுக்கு உட்பட்டதாக இருந்தன.

தென் இந்தியாவில் 10 ஆம் நூற்றாண்டில் முதலாவது இராசராச சோழன் மற்றும் அவனது மகன் இராசேந்திர சோழன் இருவரது ஆட்சிக் காலத்தில் சோழர்கள் மீண்டும் ஒரு வலிய அரசாகத் தோற்றம் பெற்றார்கள். சோழப் பேரரசின் ஆட்சி மத்திய இந்தியாவின் அரசுகளான கலிங்கம் மற்றும் மேற்கு வங்காளத்தின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது. இராசராச சோழன் சேரர்களைத் தோற்கடித்து கீழத்திய சாளுக்கிய அரசை வெற்றிகொண்டான். பாண்டியர்களைத் தோற்கடித்து இலங்கையின் சில பகுதிகளையும் கைப்பற்றினான். இராசேந்திர சோழன் கடற்படையின் துணையோடு அந்தமான் நிக்கோபர் தீவுகள், லக்க்ஷதீபம், சுமத்திரா, யாவா, மலேசியா மற்றும் பேகுத் தீவுகளையும் கைப்பற்றினான். பீகார் மற்றும் வங்காளத்தை ஆண்ட மகிபாலனைத் தோற்கடித்தான். தனது வெற்றியைக் குறிக்குமுகமாக கங்கை

> இந்துக்கள் வல்லமை வாய்ந்த விஜயநகர பேரரசு என்ற இராச்சியத்தைக் கட்டியெழுப்ப அணி திரண்டார்கள். சோழர்களது ஆட்புலத்தையும் மற்றும் உள்நாட்டு இந்து ஆட்சியாளர்களையும் உள்ளடக்கி இருந்தது.



நக்கீரன்

கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரை நிறுவினான். கிபி 13 ஆம் நூற்றாண்டளவில் சோழர்கள் தங்கள் அதிகார பலத்தை இழக்கத் தொடங்கினார்கள்.

14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சோழர்களது பலம் குன்றியபோது பாண்டியர்கள் மீண்டும் பலத்தோடு எழுந்தார்கள். ஆனால் இது குறுகிய காலத்தில் முற்றுப் பெற்றது. கிபி 1316 இல் வடக்கே இருந்து படையெடுத்து வந்த முஸ்லிம் அரசனான கில்ஜியால் பாண்டியர்கள் அடக்கப்பட்டார்கள். மதுரை நகரம் சூறையாடப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டது. இந்தப் படையெடுப்பு சோழர் மற்றும் பாண்டிய வம்சங்களை அழித்தொழித்து வடக்குத் தெக்கணத்தில் பாமினி இராச்சியம் உருவாகுவதற்கு வழி கோலியது.

14 ஆவது நூற்றாண்டில் இடம் பெற்ற (முஸ்லிம்) படையெடுப்புக்கு எதிர்கொள்ள இந்துக்கள் வல்லமை வாய்ந்த விஜயநகர பேரரசு என்ற இராச்சியத்தைக் கட்டியெழுப்ப அணி திரண்டார்கள். முஸ்லிம்களைக் கட்டுப்படுத்த எழுந்த இந்தப் பேரரசு சோழர்களது ஆட்புலத்தையும் மற்றும் உள்நாட்டு இந்து ஆட்சியாளர்களையும் உள்ளடக்கி இருந்தது. பேரரசின் பல்வேறுபட்ட நிலப்பகுதிகளை நிருவகிக்க நாயக்கர் என்று அழைக்கப்பட்ட ஆளுநர்கள் அமர்த்தப்பட்டார்கள். தெற்கில் விஜயநகர பேரரசே செல்வச் செழிப்போடு விளங்கியது. அதன் தலைநகரம் காம்பி என்று அழைக்கப்பட்டது. ஆனால் கிபி 1564 இல் தலித்கோட்டில் தெக்கண சுல்தான்கள் நடத்திய போரின் காரணமாக விஜயநகரப் பேரரசு முடிவுக்கு வந்தது. பேரரசு பல துண்டுகளாக உடைக்கப்பட்டு நாயக்கர்கள் ஆளுவதற்கு விடப்பட்டது. தெலுங்கு நாயக்கர்கள் ஆட்சியின் கீழ் தமிழ்நாடு அமைதியாகவும் செல்வச் செழிப்போடும் விளங்கியது. இவர்களில் மதுரையை மற்றும் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் நாட்டில் காணப்பட்ட பழமை வாய்ந்த கோயில்களை மீள் திருப்பணி செய்தார்கள்.

கிபி 1609 இல் ஒல்லாந்தர் புதுக்கோட்டையில் குடியேறினார்கள். கிபி 1639 இல் பிரித்தானிய கிழக்கு இந்திய கொம்பனியின் கீழ் ஆங்கிலேயர் இன்னும் தெற்கே இருந்த - இன்று சென்னை என்று அழைக்கப்படும் - நிலப்பரப்பில் ஒரு குடியிருப்பை அமைத்தார்கள். ஆங்கிலேயர் மாவட்ட ஆட்சியாளர்களிடையே காணப்பட்ட அற்ப சச்சரவுகளைத் தங்கள் நலன்களுக்குப் (பிரித்து ஆள்வது) பயன்படுத்தித் தங்கள் அதிகாரப் பரப்பை விரிவுபடுத்தினார்கள்.

ஆங்கிலேயர் பல்வேறு அய்ரோப்பிய நாடுகளோடு சண்டையிட்டார்கள். குறிப்பாக கிபி 1760 இல் வந்தவாசியில் பிரஞ்சுக்காரர்களோடும் தரங்கம் பாடியில் ஒல்லாந்தரோடும் சண்டையிட்டார்கள். அதன் மூலம் ஒல்லாந்தரை முற்றாகவும் இந்தியாவில் புதுச்சேரியில் பிரஞ்சுக்காரர்களது ஆதிக்கத்தை ஓரளவும் குறைத்து பாண்டிச்சேரிக்குள் முடக்கிவிட்டார்கள். ஆங்கிலேயர் கைதர் அலி பின்னர் அவனது மகன் திப்பு சுல்தான் ஆண்ட மைசூர் இராச்சியத்தோடு நான்குமுறை போரிட்டார்கள். இதன் மூலம் அவர்கள் தென்னிந்தியாவை தங்கள் மேலாண்மையின் கீழ் கொண்டுவந்தார்கள். தென்னிந்தியாவை மட்றாஸ் பிரசிடென்சி என்ற அமைப்புக்குள் அவர்கள் ஒன்றுபடுத்தினார்கள்.

பதினோராம் நூற்றாண்டில் சோழர்களது ஆட்சியில் இலங்கைத் தீவில் வாழ்ந்த தமிழர்கள் படை அணிகளிலும் நிருவாகத்திலும் தங்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள். இந்தக் காலகட்டத்தில் மேலும் பல தமிழர்கள் வடபகுதியில் குடியமர்ந்தார்கள் என அனுமானிக்கலாம்.

கிபி 1215 இல் கலிங்க மன்னன் மாகன் பொலநறுவையைத் தலைநகராகக் கொண்ட சிங்கள இராச்சியத்தை திராவிட படைவீரர்களது உதவியுடன் கைப்பற்றினான். இந்தப் படையெடுப்பு சிங்களவர்களது ஆட்சி அதிகாரத்தை அதிகளவு பலவீனப்படுத்தியது. இதனால் இலங்கைத் தீவின் அரசியல் ஒருமைப்பாடு காணாமல் போய் விட்டது.

மாகனுக்குப் பின் சாவக அரசனான

தொடர்ச்சி 5ம் பக்கம்...

*சந்திரபானு தென்னிந்திய தமிழ் வீரர்களது துணையோடு ஆட்சிக்கு வந்தான். மாகன் ஆண்ட நிலப்பரப்பின் பெரும்பகுதியை ஆண்டான். சந்திரபானு பாண்டியர்களுக்குத் திறை செலுத்தும் அரசனாக விளங்கினான். பின்னர் திறை அனுப்ப மறுத்தபோது அவன் ஆட்சிக் கட்டிலில் இருந்து அகற்றப்பட்டான்.*

*வட இராச்சியத்தின் மைய அதிகாரம் யாழ்ப்பாணக் குடாநாடாகும். ஆகவே அதன் பெயர் யாழ்ப்பாண இராச்சியம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. கிபி 1344 இல் யாழ்ப்பாண இராச்சி*



*யத்தின் தலைநகருக்கு வருகை தந்திருந்த அய்பின் பத்தூத்தா யாழ்ப்பாண மன்னனின் ஆட்சி அதிகாரம் புத்தளம் வரை நீடித்திருந்தது என்றும் அவனின் கட்டுப்பாட்டிலேயே முத்துக்குளிப்பு இருந்ததாகவும் கூறுகிறார்.*

*பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ்மன்னனின் படைகம்பொல மட்டும் ஊடுருவியிருந்ததாகவும் அதனை ஆண்ட சிங்கள மன்னனை தலைநகரை விட்டுத் துரத்திவிட்டான்.*

*தென்னிந்திய விஜயநகர பேரரசு காலத்தில் தமிழ் இராச்சியம் அதற்குத் திறைசெலுத்தும் இராச்சியமாக இருந்ததோடு அதன் பாதுகாப்பையும் பெற்றுக்கொண்டது. விஜயநகர பேரரசின் மறைவின் பின்னர் யாழ்ப்பாண இராச்சியம் தஞ்சாவூர் மற்றும் மதுரை நாயக்க மன்னர்களின் ஆளுகைக்குள் வந்தது.*

*1450 இல் செண்பகப்பெருமாள் (சப்புமால்குமாரய) என்ற படைத்தளபதியின் தலைமையில் கோட்டை அரசனின் படைகள் படையெடுத்து வந்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி 1467 வரை ஆண்டான். இவன் ஒரு சேரநாட்டு இளவரசன். கோட்டை அரசனான ஆறாவது பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாவான். பிற்காலத்தில் ஆறாவது புவனக்கபாகு என்ற பெயரோடு கோட்டை அரசனாக முடிசூட்டிக் கொண்டான். கனகசூரியன் தமிழ்நாட்டுக்குத் தப்பியோடி படை திரட்டி வந்து மீண்டும் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி கிபி 1467 - 1478 வரை ஆண்டான்.*

*1619 இல் சங்கிலியை ஒருவாறு தோற்கடித்த போது யாழ்ப்பாண இராச்சியம் முடிவுக்கு வந்தது. சங்கிலியும் அவனது குடும்பமும் போர்த்துக்கேயரால் கைது செய்யப்பட்டுக் கோவாவுக்கு கொண்டு போகப்பட்டனர். அங்கு சங்கிலி வாளால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டான். போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தை 1619 தொடக்கம் 1658 வரை ஆட்சி செய்தார்கள். அதன் பின் ஒல்லாந்தர் இராச்சியத்தை போர்த்துகேசரிடம் இருந்து கைப்பற்றி 1675 வரை ஆண்டார்கள். அவர்களிடம் இருந்து கைப்பற்றிய பிரித்தானியர் அதனை 1948 பெப்ரவரி 03 மட்டும் ஆண்டார்கள்.*

*இரண்டாயிரம் ஆண்டுகாலம் நீடித்த எமது வரலாற்றின் சுருக்கமான படப்பிடிப்பு இதுவாகும். ஆனால் கவலை அளிக்கும் வகையில் தமிழர்கள் தங்களது வரலாற்றை இன்று வரலாறு என்ற சொல்லுக்குரிய பொருளில் எழுதி வைக்கத் தவறிவிட்டார்கள். இலக்கியம், கட்டிடக்கலை, நுண்கலைகள் போன்றவற்றில் கொடிகட்டிப் பறந்த தமிழர்களுக்கு வரலாறு பற்றிய உணர்வு இருக்கவில்லை. காலம் பற்றிய அறிவு இல்லாததால் உரோமர் போல நாள்காட்டி ஒன்றை உருவாக்கவில்லை. இன்று சங்க இலக்கியங்களின் துணையோடுதான் வரலாற்றை மீள எழுத வேண்டியுள்ளது. இருந்தும் பல ஆழமான ஓட்டைகள் இடையிடையே காணப்படுகின்றன.*

*வரலாறு என்ற சொல்லின் இன்றைய பொருளில் தமிழர்களது வரலாற்றை முதன் முதலில் எழுத எடுத்த முயற்சி வி.கனகசபை எழுதிய தமிழர் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் என்ற நூலாகும். இந்த நூல் மதறாஸ் றிவியூ என்ற சஞ்சிகையில 1895 - 1901 இடையில் எழுதி வெளியிடப்பட்ட தொடர் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதன் நோக்கம் தமிழ் இலக்கியங்களில் தமிழர்களது பழமையான நாகரிகம் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்வதே.*

*நூலின் தலைப்பில் குறிப்பிட்ட பொருளுக்கு அமைய நூலாசிரியர் தமிழர்களது வரலாற்றை கிமு 50 க்கு முன்னரோ அல்லது கிபி 150 க்கு பின்னரோ எழுதுவதைக் கவனமாகத் தவிர்த்துள்ளார். இந்த நூல் தமிழர்களது பழைய நிலப்பரப்பு, அவர்களது வெளிநாட்டு வாணிகம், தமிழ்மொழி பேசிய வெவ்வேறு இனங்கள், அவர்களது அரசியல் வரலாறு மற்றும் அவர்களது சமூக வாழ்க்கை, போர் முறை, இலக்கியம், மெய்யியல் மற்றும் சமயம் பற்றி எழுதிவிட்டு நூலை முடித்துக் கொள்கிறார். இதைத் தொடர்ந்து பிரபலமான வரலாற்று ஆசிரியர்கள் எழுதிய வரலாற்று நூல்கள் வெளிவந்தன.*

*தமிழினப் படுகொலைகள் (பாகம் 1) 1956 - 2001 காலப் பகுதியில் நடந்த படுகொலைகளை வரிசைப்படுத்தும் தொகுப்பாகும். 1956 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் சிங்களம் மட்டும் இலங்கையின் உத்தியோகமொழியாக அறிவிக்கப்பட்ட போது சிங்களவர் -*

**❝ தமிழ்மன்னனின் படை கம்பொல மட்டும் ஊடுருவியிருந்ததாகவும் அதனை ஆண்ட சிங்கள மன்னனை தலைநகரை விட்டுத் துரத்தி விட்டான்.**

*தமிழர் இடையிலான முரண்பாடு மேலும் மோசமாகியது.*

*சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத் திடலில் அமைதிவழிப் போராட்டத்தை மேற்கொண்ட தமிழ்த் தலைவர்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டு முறிக்கப்பட்டது. தமிழ்ப் பொதுமக்கள் மீது சிங்களக் கும்பல் தாக்குதல் நடத்தியது சுதந்திரத்துக்குப் பின்னர் இலங்கையில் நடந்த முதல் தமிழர் - சிங்களவர் மோதலாகும். இதனைத் தொடர்ந்து சிங்களவர் - தமிழர்களுக்கு இடையிலான இனமோதல்கள் 1958,1977, 1979,1981 மற்றும் 1983 இல் தொடர்ச்சியாக இடம்பெற்றன.*

*இந்தத் தொகுப்பு 1956 - 2001 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகளை கவனமாகப் பதிவு செய்துள்ளது. இந்தத் தொகுப்பு முழுமையானது என்று சொல்ல முடியாவிட்டாலும் இதனைத் தொகுத்தவர்கள் நிகழ்கால வரலாற்றின் ஒரு கூறை எழுதும் பொறுப்பை வருங்கால வரலாற்று ஆசிரியர்களிடம் விட்டுவிடாது நல்லதோர் பணியை செய்து முடித்துள்ளார்கள். இந்தத் தொகுப்பை கடுமையான சூழ்நிலையில் பாடுபட்டுப் பதிப்பித்த தனிமனிதர்களுக்கும் நிறுவனங்களுக்கும் நாங்கள் நன்றிக் கடமைப்பட்டுள்ளோம்.*

*இந்தப் படுகொலைகள் சிங்கள இனவாத அரசியல்வாதிகளது தூண்டுதலோடு சிங்கள இராணுவத்தினால் நடத்தப்பட்டவை ஆகும். 1956 க்குப் பின்னர் தமிழ்மக்களுக்கு எதிரான இனப்படுகொலைப் போரில் 100,000 அதிகமான தமிழர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். கடைசிக் கட்ட ஈழப் போர் 4 (மே 2009) இல் 25,000 பொதுமக்கள் கொல்லப்பட்டும் அதுபோல இரண்டு மடங்கு எண்ணிக்கை மக்கள் படுகாயப் படுத்தப்பட்டார்கள். அப்படிக் கொல்லப்பட்டவர்களில் இந்தத் தொகுப்புக்கு உழைத்தவர்களும் அடங்குவர்.*

*வடகிழக்கு மனிதவுரிமை செயலகத்தின் தலைவராகப் பணியாற்றிய வணபிதா எம்.எக்ஸ். கருணரத்தின அடிகளார் ஏப்ரில் 20, 2008 இல் சிறிலங்கா இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணி மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.*

*நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சிங்கள மட்டும் சட்டத்தை அடுத்து யூன் 05,1956 இல் இங்கினியாக்கலையில் நடைபெற்ற முதல் படுகொலை பற்றிய விபரத்தோடு இந்தத் தொகுப்பு தொடங்குகிறது. இதுவே நிராயுதபாணிகளான தமிழர்களுக்கு எதிரான சிங்களக் காடையர்களது பயங்கரவாதமாகும். காவல்துறை செயலற்றுப் போய் வாய் மூடிக் கிடந்தது.*

*அம்பாறை மாவட்த்தில் இருக்கும் இங்கினியாக்கல கல்ஓயா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொடக்கப்பட்ட பல குடியேற்றத்திட்டங்களில் ஒன்றாகும். அரசு மேற்கொண்ட கல் ஓயா குடியேற்றத் திட்டம், திருகோணமலை மாவட்டத்தில் அல்லை - கந்தளாய் குடியேற்றத் திட்டம் போன்ற பாரிய சிங்களக் குடியேற்றங்கள் கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகைப் பரம்பலை மாற்றி அமைத்தது. இந்தக் குடியேற்றத் திட்டங்கள் தமிழர்களைப் பெரும்பான்மை என்ற தகைமையில்*

**தொடர்ச்சி 6ம் பக்கம்...**

# இராக்கில் தாக்குதல் - 52 பேர் பலி

*இராக்கில் உள்ள பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடிகளைக் குறிவைத்துப் தீவிரவாதிகள் திங்கட்கிழமை நிகழ்த்திய வெடிகுண்டு தாக்குதல்களில் 52 பேர் உயிரிழந்தனர். திங்கட்கிழமை ஒரு நாளில் மட்டும் தீவிரவாதிகள் 20 முறை தாக்குதல்கள் நடத்தியுள்ளனர்.*

*பாக்தாத்தில் இருந்து 95 கி.மீ. தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹில்லா நகரில் உள்ள ஜவுளித்தொழிற்சாலையில் இரு கார் குண்டுகள் வெடித்தன. உள்ளூர் நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு இந்த தாக்குதல் நிகழ்ந்துள்ளது. தொழிலாளர்கள் பணி முடிந்து வீடு திரும்பும் வேளையில் குண்டு வெடித்ததால் 20 பேர் உயிரிழந்தனர். 100-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.*

*மேற்கு மற்றும் கிழக்கு பாக்தாத்தில் உள்ள 6 ராணுவ மற்றும் போலீஸ் சோதனைச் சாவடிகள் மீது தானியங்கி துப்பாக்கிகளை கொண்டு பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 7 பேர் உயிரிழந்ததாக ஈராக் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. தெற்கு மற்றும் மேற்கு பாக்தாத் பகுதிகளில் 3 குண்டுவெடிப்புகளில் இரு போலீஸார் உயிரிழந்தனர்.*

*பாக்தாதில் இருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ள சுவேராவில் உள்ள மசூதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர். 70 பேர் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு படை துணைத்தலைவர் ஒருவர் தெரிவித்தார்.*

*பலூஜாவில் குறிப்பிட்ட பிரிவினரின் வீடுகளை குறிவைத்து 4 குண்டு வெடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. பாதிப்புக்குள்ளான வீடுகளில் 3 வீடுகள் பாதுகாப்பு படை அதிகாரிகளுக்குச் சொந்தமானது.*

*பலூஜாவின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஸாபா கிராமத்தில் போலீஸ் அதிகாரிகளின் வீடுகளை குறி வைத்து நடத்தப்பட்ட இரண்டாவது குண்டுவெடிப்பில் போலீஸ் அதிகாரி மற்றும் அவரது மனைவி உயிரிழந்தனர். மேலும் 2 பேர் காயமடைந்தனர்.*

*பலூஜாவின் அருகில் உள்ள நஸ்ஸல் பகுதியில் நிகழ்த்தப்பட்ட குண்டு வெடிப்பில் 2 குழந்தைகள், 5 பெண்கள் காயமடைந்தனர். நகரின் வேறு பகுதிகளில் நடந்த தாக்குதல்களில் 7 பேர் கொல்லப்பட்டனர்.*








**காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி பழைய**

## மாணவர் சங்க ஒன்றுகூடல்

**எதிர்வரும் யூலை மாதம் 17ம் தேதி சனிக்கிழமை ஸ்காபுரோ, தொம்சன் பூங்காவில் காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நடைபெற உள்ளது. இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ள நடேஸ்வராக்கல்லூரி பழைய மாணவர்கள் அமெரிக்கா, மொன்றியல் ஆகிய இடங்களிலிருந்து வருகை தர உள்ளார்கள்.**

**அனைத்துப் பழைய மாணவர்களையும் இவ் ஒன்றுகூடலில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். தொடர்புகட்கு: (647) 237-3619**


# சமகால வரலாற்றை...

5ம் பக்கத் தொடர்ச்சி...

*இருந்து சிறுபான்மை என்ற தகைமைக்குக் குறுக்கியது.*

*சிங்கள அரசின் வஞ்சனையான திட்டத்தின் நோக்கம் கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களைத் தனிப்பெரும் இனக்குழுவாக மாற்றுவதாகும். அவர்களது தலையாய திட்டம் அரச உதவிக் குடியேற்றங்கள், சுற்றுலா மேம்பாடு மற்றும் அம்பாரை மாவட்த்தில் பவுத்த மறுமலர்ச்சி, மட்டக்களப்பில் உள்ள தொப்பிக்கலைப் பகுதியில் வணிக - வேளாண்மை மேம்பாடு ஆகியவற்றின் மூலம் மக்கள் பரம்பலில் மாற்றங்களைக் கொண்டு வருவதாகும்.*



*கிழக்கு மாகாணத்தில் அரச உதவி குடியேற்றங்கள், புதிதாக அரசியல் மற்றும் நிருவாக அலகுகள் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலம் எப்படி மக்கள் பரம்பல் வடிவம் இயற்கைக்கு மாறாக மாற்றப்பட்டது அல்லது திரிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள மக்கள் தொகை புள்ளிவிபரங்கள் உதவுகின்றன.*

*1961 இல் மட்டக்களப்பு மாவட்டம் இன்றைய அம்பாறை மாவட்டம் (1,775 சதுர மைல்) மட்டக்களப்பு மாவட்டம் (1,048 சதுர மைல்) என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. தமிழர்களது எண்ணிக்கை 146,059 இல் இருந்து 409,451 ஆக (302 விழுக்காடு) உயர்ந்தது . முஸ்லிம்களது எண்ணிக்கை 109,024 இல் இருந்து 315,201 (289 விழுக்காடு) ஆக உயர்ந்தது. சிங்களவர்களது எண்ணிக்கை 27,556 இல் இருந்து 243,358 (883 விழுக்காடு) உயர்ந்தது. தேசிய அளவில் இந்தக் காலகட்டத்தில் சிங்களவர்களது எண்ணிக்கை 238 விழுக்காட்டால்தான் உயர்ந்தது. சிங்களவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்புக்குக் காரணம் அம்பாரை மாவட்டத்தில் கல் ஓயா, பன்னல் ஓயா மற்றும் அம்பலம் ஓயா குடியேற்றத்திட்டங்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் - அல்லை, மொறவேவா (முதலிக்குளம்) பதவியா குளம் மற்றும் இலுப்பைக் குளம் (மகாடிலுவேவா) ஆகியவற்றில் அரசு திட்டமிட்டு மேற்கொண்ட சிங்களக் குடியேற்றங்களே.*

*மீண்டும் இந்த நூலைப் பற்றிக் குறிப்பிடும் போது 2002 - 2009 காலப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் அதன் இரண்டாவது பாகம் ஆகத் தொகுக்கப்பட வேண்டும். இந்தத் தொகுப்பு தமிழர்கள் சரி தமிழர் அல்லாதார் சரி இரு தரப்பாருக்கும் தமிழர்களுக்கு எதிராக கட்டவுழ்த்து விடப்பட்ட மூடிமறைப்பு இல்லாத இனப்படுகொலையை மேற்கொண்ட அரச வன்முறை பற்றிய உட்பார்வையைக் கொடுக்கும் என நம்புகிறோம்.*


*தற்போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள நான்காவது ஈழப்போர் சிங்கள பவுத்தர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் ஒரு அரசின் கீழ் சகவாழ்வு சாத்தியமற்றது என்பதை எல்லாவித அய்யத்துக்கும் அப்பால் எண்பித்துள்ளது.*

*இன மோதலுக்கான எந்தத் தீர்வும் கீழ்க்கண்ட வரலாற்று மற்றும் குறிப்பிட்டுப் பேசக் கூடிய தீர்மானம், ஆணை மற்றும் கோட்பாடுகளை மையப்படுத்தியாக இருக்க வேண்டும்.*

*1) 1976 ஆம் ஆண்டு மே 14 இல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மாநட்டில் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானம். இந்தத் தீர்மானம் மூலம் தமிழர் விடுதலைக் கூட்டணி ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் இருக்கும் உள்ளார்ந்த தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் இறைமையுள்ள தமிழீழ அரசை உருவாக்கும் எண்ணத்தை வெளியிட்டது.*

*2) 1977 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கொடுக்கப்பட்ட ஆணை.*

*3) தமிழ்த் தேசியச் சிக்கலுக்குப் பொருள்பொதிந்த தீர்வானது திம்பு*



*பேச்சு வார்த்தையின் போது முன் வைக்கப்பட்ட கீழ்க்கண்ட நான்கு முக்கிய கோட்பாடுகள்.*

*இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை அங்கீகரித்தல், இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு வரையறை செய்யப்பட்ட தாயகம் உண்டென்பதை அங்கீகரித்தல், தமிழ் தேசிய இனத்தின் தன்னாட்சி உரிமையை அங்கீகரித்தல், இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை மற்றும் அடிப்படை உரிமைகளை அங்கீகரித்தல்.*

*இன்று எமது சுதந்திரத்துக்கான புனித போராட்டத்தை முன்னெடுப்பது எமது வரலாற்றுக் கடமையாகும். இறைமை படைத்த தமிழீழ அரசை உருவாக்கும் குறிக்கோளை அடையும் வரை நாம் ஓயுதல் செய்யக் கூடாது.* ✸

# கோட்பாடுகளின் தோல்வி
# நாடு கடந்த அரசு?

குளோபல் தமிழ்ச் செய்தி நிறுவனத்தில் வெளிவந்த திரு உருத்திரகுமாரனுடனான நேர்காணலைக் கேட்டும் வாசித்ததன் பின்பும் தோன்றிய எண்ணங்களை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்மக்களின் அரசியல் வெளியும் போராட்ட வலுமையமும் அகம் புலம் என இரண்டினுள்ளும் பிரிந்துள்ளன. தமிழ் மக்களின் அக அரசியல் வெளி தனிநாட்டுக் கோரிக்கைகளை வைக்க இடமளிக்கப்போவதில்லை. ஆனால் இலங்கை என்ற நாட்டுக்குள் தங்களுக்கு மறுக்கப்படுகின்ற சகல உரிமைகளுக்கும் எதிராக குரல் கொடுக்கக் கூடிய சாத்தியங்கள் அங்கே அற்றுப் போய்விடவில்லை.

தேர்தல்களூடாக தெரிவுசெய்யப்படும் தமிழ் பிரிதிநிதிகள் தமிழர்களின் நியாயமான அரசியல் உரிமைகளுக்கு உரிய முறையில் குரல் கொடுக்க முடியும். தமிழர்களின் அரசியல் உணர்வை அழியாது தக்க வைக்கும் உரிய பொறுப்பு அவர்களிடமே உள்ளது.

சிங்களப் பேரினவாதத்தின் ஒடுக்குமுறைக்குத் துணைபோகின்ற அரசியல் சமூகக் குழுக்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து சக்திகளையும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அடைவதற்கான சனநாயகப் பொறிமுறை ஒன்றினுள் இணைக்க வேண்டிய அவசியம் உள்ளது.

அது தனியே திரு. உருத்திரகுமாரன் அவர்களின் பணி அல்ல. தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள். சமூக அரசியல் பொருளாதார உரிமைகள் பேணப்பட வேண்டும் என எண்ணுகின்ற சகலரும் ஒரு மையப் புள்ளியை நோக்கி வர வேண்டியுள்ளது.

சிங்கள மக்களிடம் மிகத்தீவிரமான மேலாதிக்க மனப்பான்மை இருக்கும் வரை தமிழர்களுக்கான உரிமைகள் வழங்கப்படப்போவதில்லை. அதே நேரம் இலங்கை என்ற யதார்த்தத்துக்குள் இருக்கும் வரை அடிப்படை சனநாயக மனித உரிமைகளுக்காக போராடுவதை இலங்கை அரசு நேரடியாகத் தடுக்கவும் முடியாது.

குளோபல் தமிழ்
தேவஅபிரா

வடிவமா அல்லது அதற்கும் மேலாக அதனையும் உள்ளடக்கிய பல்வேறு கோட்பாடுகளையும் ஒருங்கிணைக்கும் பன்மைத்துவம் மிக்க சனநாயக ரீதியான தமிழ் தேசியத்திற்கான ஒரு கட்டமைப்பா என்பது விவாததிற்கு உரியது.

எது எவ்வாறு இருப்பினும் அகத்திற்கும் புலத்திற்குமிடையே முறையான ஊடாட்டங்களும் இடைத்தாக்கங்களும் இல்லாமல் சிங்களத் தேசியவாதத்தை நாங்கள் எதிர் கொள்ள முடியாது. அகத்தில் தொடர்ச்சியான சனநாயகக் கோரிக்கைகளை வைத்து வெகுசனப் போராட்டங்கள் தொடர்ச்சியான உரையாடல்கள் போன்றவற்றை தொடர்வதன் முலம் தமிழர்களின் அரசியல் விழிப்புணர்வை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். தமிழ்மக்கள் தங்கள் வலுமையத்தை இழக்காமல் இருப்பதற்கான முதற்படியாகவும் அது இருக்கும். திரு உருத்திரகுமாரன் பேசுகிற வலுமையம் தனியே புலத்தில் மை-யம் கொள்வது சாத்தியமு மில்லை நல்லதுமில்லை.

**பன்மைத்துவம்.**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி தமிழர்களது அரசியலை இலங்கை அரசின் அரசியல் வட்டத்துக்குள் இருந்து படிப்படியாக வெளிக்கொண்டு வந்தது. நேர்காணலில் பேசப்படுகிற பன்மைத்துவத்தை தமிழீழ விடுதலைப் போராட்டம் தனக்குள் வளர்த்துக் கொள்ளத் தவறியமை அதன் முக்கியமான பலவீனமாக அமைந்து விட்டிருந்தது.

விடுதலைப்புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஏகத்துவத்துக்குள் கொண்டு சென்றார்கள். அப்போதும் கூட ஏகத்துவத்துக்குள் இருக்கக்கூடிய பன்மைத்துவத்தையும் அவர்கள் மறுதலித்திருந்தார்கள். இது இரண்டாவது முக்கியமான பலவீனம்.

இராணுவ மையப்பட்ட அணுகுமுறைகளின் மீது விடுதலைப் புலிகளின் அமைப் புக்குள் இருந்தவர்களினாலும் கூட எந்தவிதமான தாக்கங்களை யும் ஏற்படுத்த முடியாது போய் விட்டது. புலிகள் மக்களிடம் இருந்தே தோன் றினார்கள் ஆனால் மக்களிடம் இருந்து தம்மை அன்னியப் படுத்தக் கூடிய பாரிய தவறுகளையும் இறுதிவரையும் செய்தும் இருந்தார்கள்.

புலிகள் அடைந்த ஏக பிரதிநிதித்துவம் என்பது தமிழ் தேசியத்தின் இருப்புக்கு வலிமை சேர்க்கும் புறக் காரணிகள் இருந்தமையால் பெறப் பட்டதாகும். சிங்களப் பேரினவாதம் இருக்கும் வரையும் தமிழ் தேசிய வாதம் சாம்பலுக்குள் கனன்று கொண்டிருக்கும். தமிழீழக் கோட்பாடு தோல்வி அடைந்துவிட்டதா எனக் கேட்பதை விடவும் தமிழ் தேசியம் அழிந்துவிட்டதா எனக் கேட்பதே நியாயமானதாகும். பதில் இல்லை என்பதாகும்.

உண்மையிலும் திரு உருத்திரகுமாரன் சொல்கின்ற பன்மைத்துவம் உண்மையான பன்மைத்துவம் அல்ல. தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை எப்படி அடைய முடியும் என பல்வேறு தரப்பினரும் பல்வேறுவிதமான சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் பொது நோக்கம் ஒன்றிக்காக இணைக்கும் போதுதான் உண்மையான பன்மைத்துவம் தோன்றும்.

உருத்திரகுமாரன் குறிப்பிடுகிற பன்மைத்துவம் தமிழீழம் என்னும் ஏகத்துவத்துக்குள் இருக்கிற பன்மைத்துவமாகும். தமிழீழக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுகின்றவர்களுக்கிடையே அதை எவ்வாறு அடைவது என்பது பற்றி இருக்கக்கூடிய சனநாயக ரீதியான கருத்தாடல்களை இணைக்கும் பொறிமுறைபற்றியே உருத்திரகுமாரன் பேசுகிறார். இது தவறல்ல. தேவையானதுதான். விடுதலைப் புலிகள் தமது உச்சங்களில் இருந்தபோது செய்யாததை இப்போது செய்ய முனைகிறார்கள். இது முதற்படி மட்டுமே!

**சுயமாக ஒழுங்கமைத்துக் கொள்ளும் சனநாயகம்.**

ஆசியாவில் சனநாயகத்தின் வளர்ச்சி மிக மந்தமான நிலையிலேயே இருக்கிறது. 'உண்மையான சனநாயகம்" என்பதை அல்லது அதற்கு கிட்டவாவது வரக்கூடிய சனநாயக கட்டமைப்பு என்பதை காணமுடியாது.

அனேகமான நாடுகளிலும் அரச வன்முறையானது பயங்கரவாதம் தேவைப்படும் போதெல்லாம் பாவிக்கப்படுகிறது. அரசாங்கங்கள் சட்டம் நீதி நிர்வாகக் கட்டமைப்புக்களில் தேவைப்படும் போதெல்லாம் தலையீடு செய்கின்றன.

ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்குத் தேர்தலை நடாத்துதல் என்பதனைத் தவிர சனநாயக நடவடிக்கைகள் எதுவும் இங்கு இருப்பதில்லை. தேர்தல்களும் மக்களின் அரசியல் அபிலாசைகளின் வெளிப்பாடுகளாக இருப்பதில்லை.

அதிகாரத்தை அடைய விரும்புபவர்கள் உருவாக்கி வைத்திருக்கும் பாதைகளில் ஏதோவொன்றைத் தெரிவு செய்ய நேரிடையாகவோ மறைமுகமாகவோ மக்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். எனவே நாடு கடந்த அரசாங்கத்தை ஸ்தாபிப்பவர்கள் யாரை சனநாயக மயப்படுத்தப் போகிறார்கள் என்பது முக்கியமானது.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தாம் வாழும் சூழ்நிலைகளுக்கூடாகத் தவிர்க்க முடியாதபடிக்கு முதலாளித்துவ சனநாயக கலாச்சாரத்துக்குள் படிப்படியாக தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. மரபுவழியான ஆண் தலைமைதாங்கிய குடும்பக் கட்டமைப்புக்கள் புலம் பெயர் நாடுகளில் மாற்றமடைந்து வருகின்றன. குடும்பம் என்னும் கட்டமைப்புக்குள் ஆண் பெண் பெற்றோர் பிள்ளைகள் என்னும் உறவுகளுள் சனநாயக மாற்றங்கள் மெதுவாக நிகழ்ந்து வருகின்றன. இதுவும் முக்கியமான ஒரு மாற்றமாகும்.

சனநாயகப் பண்பாட்டின் வளர்ச்சி இலங்கையிலேயே அதிகமாகத் தேவைப்படுகிறது. ஒவ்வொரு தனி-மனிதனும் தனது சகமனிதனின் இருப்பையும் உணர்வுகளையும் மதிக்கும் மனநிலையை அடைந்து அது சமூக நடத்தையாக மாறும் போது மட்டுமே சனநாயகப்புரட்சி தோன்றும்.

தமிழ்தேசியத்தின் எழுச்சி பல்வேறுபட்ட விழுமியங்களை சமூக நடத்தை களாக மாற்ற முனைந்திருந்தது. பெண் ஒடுக்குமுறை சாதிய ஒடுக்குமுறை போன்றவற்றுக்கெதிரான விழுமியங்கள் சமூக நடத்தைகளாக மாறவாரம்பித்திருந்தன. அப்பொழுது சனநாயக விழுமியங்களையும் இணைத்துக்கொண்டிருப்பின் எமது தமிழ்ச்சமூகம் இன்னும் கூடிய பலத்துடன் இருந்திருக்கும்.

"தமிழ்மக்கள் தங்கள் வலுமையத்தை இழக்காமல் இருப்பதற்கான முதற்படியாகவும் அது இருக்கும். திரு உருத்திரகுமாரன் பேசுகிற வலுமையம் தனியே புலத்தில் மையம் கொள்வது சாத்தியமுமில்லை நல்லதுமில்லை."

தொடர்ச்சி 19ம் பக்கம்...

# கோட்பாடுகளின் தோல்வி

7ம் பக்கத் தொடர்ச்சி...

சிங்கள சமூகத்தின் சனநாயக மயப் பாட்டை சிங்கள பௌத்த பேரினவாதம் தடுத்து நிற்கிறது. அதே போல் தமிழ்ச் சமூகத்தின் சனநாயக மயப் பாட்டைப்பற்றி அக்கறைப்படாமல் தம்வழியே சென்ற பிழையை விடுதலைப்புலிகளும் விட்டுள்ளனர்.

எனவே சனநாயகம் என்பது கட்சிக்கு உள்ளுக்கும் வெளியிலும் சமூகத் தினுள்ளும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது. இது மிக மெதுவான மாற்றமாகும். திரு உருத்திரகுமாரன் தமது கட்சிக்குள் சனநாயகப்பொறி-முறையை வளர்ப்பதைப் பற்றியே குறிப்பிடுகிறார். இதுவும் ஆரோக் கியமானதே!

**பொதுத் தேசிய அடையாளமும் புலம் பெயர்ந்த தமிழர்களின் அரசியல் தோழமையும்.**

புலம் பெயர்ந்த தமிழர்கள் எதிர் கொள்கின்ற சில முக்கியமான பிரச்ச னைகளின் பின்னணியிலேயே மேற் குறித்த அம்சத்தை நோக்க வேண் டும். புலம்பெயர்ந்த ஒவ்வொருவரை யும் அவர்கள் வாழும் நாட்டின் கலா சாரத்துள் கரையும்படி சட்ட ரீதியா கவும் கலாசார ரீதியாகவும் நிர்ப்பந் தங்கள் வழங்கப்படுகின்றன. இத னாலும் மொழிப்பிரச்சனையினா லும் முதலாவது தலைமுறையினர் கலா சார தனிமைப்பாட்டை எதிர் கொள்கின் றனர். இதனை வெல்வதற்காக அவர் கள் இன்னும் தமது அகத்துடன் தம் மைப் பிணைத்துக் கொள்கின்றனர்.

இரண்டாவது மூன்றாவது தலை முறையினர் மொழிப்பிரசனை யினை எதிர்கொள்ளாவிடினும் தமது அடை யாளத்தை தேடுகின்றனர். தமது தாய் தந்தையர் வாழ்ந்த நாட்டில் நடக்கும் பிரச்சனைகளை வேறு வெளிச்சத்தி-லேயே புரிந்து கொள்கின்றனர். ஆனாலும் தமது அடையாளம் கார ணமாகவும் வேர்கள் காரணமாகவும் அரசியல் ரீதியான தோழமையை வழங்குகின்றனர்.

இந்த இரண்டு அம்சங்களையும் வைத்துப் பார்க்கும் போது தமிழ்த் தேசியம் தனக்கென இன்னுமொரு வகையான வலு மையத்தைப் புலத் திலும் உருவாக்கிக் கொள்வது சாத் தியம். ஆனால் இவர்களால் அரசி யல் தோழமையை மட்டுமே வழங்க முடியும்.

**கோட்பாடுகளின் தோல்வி.**

மூன்று தலைமுறைகளின் பின்பு தாம் அடைந்த இழப்பும் தோல்வியும் தமிழீழத்தின் சாத்தியம் பற்றிய அச்ச வுணர்வை தமிழ் மக்கள் மத்தியில் தோற்றுவித்திருக்கிறது. அதற்கு மதிப் பளிக்க வேண்டிய தேவை புலிகளுக்கு இருக்கிறது.

மக்களின் நலன்களை அடிபபடை யாகக் கொண்டு உருவாக்கப்படும் கோட்பாடுகள் ஒருபோதும் தோல்வி யடைவதில்லை. ஆனால் அதற்குச் செயல்வடிவம் கொடுக்க முனைபவர் கள் பல்வே று அகப்புறக் காரணிக-ளால் தோல்வியடைகிறார்கள் அல் லது வெற்றியடைகிறார்கள்.

**பிராந்திய அரசியல் மாற்றங்கள் உலகமயமாதல் பொருளாதார நலன்கள்.**

எதிரியின் வெற்றிக்கும் புலிகளின் தோல்விக்கும் தமிழ் தேசியத்தின் பின்னடைவுக்குமான அகப்புறக் காரணிகள் இடியப்பச் சிக்கலாக பிணைந்து முன் எதிர்வு கூறமுடியாத வாறு இருக்கின்றன. இன்னிலையில் பிராந்திய அரசியல் தமிழீழத்தை அமைப்பதற்கு சாத்தியமாக மாறும் என அடித்துக் கூறமுடியாது. மாற லாம். ஆனால் இதனை எமது மூல உபாயத்திற்கு ஆதாரமாகக் கொள் வது அரசியல் தற்கொலையாகும்.

சந்தைகளையும் அதிகாரத்தையும் கைப்பற்றித் தக்க வைத்துகொள் ளும் நோக்கத்துடனேயே உலகம் ஒழுங்கமைக்கப்படுகிறது. இந்த ஒழுங்குக்குள் இலங்கை என்கிற நாட்டிற்கு இருக்கின்ற பெறுமானம் தமிழீழம் என்ற சிறய அலகுக்கு இல்லை. மிகச் சிறிய இனமான எங்களுக்கு எந்தச் சந்தைப் பெ-றுமானமும் இல்லை.

இன்றைக்கு தமிழீழம் என்னும் எல் லைகளைப் பற்றிச் சிந்திப்பதை விட வும் தமிழ்த்தேசியத்தின் இருப்பைப் பாதுகாப்பதைப் பற்றிச் சிந்திப்பது இன்னும் முக்கியமானது. ஏனெனில் இன்னும் பத்து வருடங்களில் தமிழீழ த்தின் சனத்தொகைப்பரம்பல் மாற்ற ப்பட்டுவிடும்.

ஆனால் தமிழர்கள் தமது அரசியல் அபிலாசைகளைத் தமிழீழம் என்கிற ஒரு சட்டகத்தினூடாக மட்டுமே அணுக வேண்டும் என்கிற கோட்பாட்டு ஏகத் துவம் சர்வதேச அரசியலில் மீண்டும் நம்மைத் தனிமைப்படுத்தலாம். உண் மையில் தமிழர்களின் முக்கியமான வலுமையம் வடக்கு கிழக்கிலேயே அமையவேண்டும்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரச தரப்பு திரை மறைவில் பேச்சு!

## ஆளுங்கட்சியிலிருந்து சம்பந்தனுக்குத் தூது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் திரைமறைவுப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளதாம். கொழும் பிலிருந்து வெளியாகும் 'த நேஷன்" ஆங்கில வார இதழுக்கு அளித்துள்ள பேட்டியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் இதனை மறைமுகமாகக் கோடி காட்டியுள்ளார்.



'முக்கிய விடயம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டுள்ளீர்களா? "என்ற கேள்விக்கு 'நான் அவருடன் தொடர்பு கொள்ள வில்லை. அவரும் என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை. எனினும் அரசின் சில உறுப்பினர்கள் என்னுடன் தொடர்புகொண்டு பேசியுள்ளனர். நாங்கள் ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறோம்" என்று சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார்.

'இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் தொடர்பாக அரசைச் சேர்ந்த எவருடனும் பேசவும் இணைந்து செயற்படவும் நான் தயாராகவுள்ளேன். நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியே நாங்கள் யாருடன் பேச வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள் ளார். எனினும் தன்னுடன் தொடர்பு கொண்டவர் யார் என்பதை வெளியிட சம்பந்தன் மறுத்துள்ளார் என்று 'த நேஷன்" குறிப்பிட்டுள்ளது.

'இதேவேளை, நாட்டின் சில பிரிவினர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் படுவதை விரும்பவில்லை. பிரச்சினை தீர்க்கப்படுவதை விரும்பவில்லை. இதனால் இதற்கான போலியான காரணங்களைத் தெரிவிக்கின்றனர். அவர் கள் தமிழர்களுடன் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படுவதை விரும்ப வில்லை" என்றும் சம்பந்தன் குற்றம்சாட்டினார்.

'அரசு நேர்மையான தீர்வை முன்வைக்கவேண்டும். தமிழ் மக்கள் மீது எதனையும் திணிக்கலாம் எனக் கருதக்கூடாது. அவ்வாறு கருதினால் அது ஒருபோதும் சாத்தியப்படாது. பயனற்ற நடைமுறைப்படுத்த முடியாத தீர்வொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு எம்மீது அழுத்தம் கொடுத்தால் அதுவும் நடக்காது" என்றும் சம்பந்தன் எச்சரித்துள்ளார்

# ஆஸ்திரேலியா அருகே நடுக் கடலில் இலங்கைத் தமிழர்கள் 5 பேர் பலி

ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைவதற்காக இலங் கைத் தமிழர்கள் சென்ற போது, படகு பழுதாதால் 5 பேர் கடலில் மூழ்கி இறந்துவிட்டதாக தகவல்கள் வெளியா கியுள்ளன.

படகு ஒன்றில் 64 இலங்கைத் தமிழர்கள் ஆஸ்திரே லியா நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அவர் கள் பயணம் செய்த படகு பழுதடைந்ததாகவும், அவர்களை ரஷ்ய கப்பல் மீட்டபோது அவர்களில் 5 பேர் கடலில் மூழ்கி உயி ரிழந்திருந்தனர் என்றும் இலங்கைத் தமிழ் இணையதளங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

மீட்கப்பட்ட அனைவரும் கிறிஸ்துமஸ் தீவில் உள்ள ஆஸ்திரேலிய முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்று அந்நாட்டு அரசு கூறியி ருப்பதாகவும் அந்த இணையதளங்களில் தெரிவிக் கப்பட்டுள்ளது.



# Famous Party Supplies

* Party * Novelty * Loot Bags * Dollar Items



Party Decoration - Accessories, Banners, Candles, Gift Wrap, Tableware, etc
Birthday - 1st Birthday, 16th Birthday, 21st Birthday, 50th Birthday, etc
Special Occasions - Anniversary, Baby Shower, Graduation, 1st Communion, etc
Sessional - Canada Day, Halloween, Thanksgiving, Christmas, New Year, etc

**HELIUM TANK AVAILABLE FROM CAD 65.00**

**Store Hours : Except for Sundays other days we are open from 10.00 a.m.**

**55 Nugget Avenue, Unit #10, Toronto, ON, M1S 3L1.**
**Tel: 647-435-4839 Fax: 647-435-4846**

*Oneness Management 416-897-0962*

தமிழரின் நிர்வாகத்தில்...

# GRAND CAR WASH

**HAND CAR WASH & PROFESSIONAL DETAILING**




- Wash & Vaccum - Interior Shampoo
- Leather Treatment - Polishing
- Engine Shampoo - High Speed Buff
- Detailing - Waxing

**752 Warden Ave (3 Blocks South of Eglinton)**
**Tel 416 757 8200, Cell 647 831 2709 (Tamil)**

info@grandcarwash.ca / www.grandcarwash.ca

# தேசிய சுயநிர்ணயம்

தேசியம் சார்ந்த விவாதத்தில் ஈடுபடும் ஒருவருக்கு வரலாறு சார்ந்து, வரலாற்றெழுத்து முறைகள் சார்ந்து, ஒரு அடிப்படை வாசிப்பு இருந்தால் அவர் பேசும் தொனியே வேறு. ஒரு நிலப்பகுதியை ஒரு தேசியமாக ஒருவர் முன்வைக்கிறார் என்றால் நான் அதனால் உருவாகும் பயன் என்ன என்ற கோணத்தில் மட்டுமே அதைப் பார்ப்பேன். அது 'உண்மையா' என்றல்ல. ஏனென்றால் வரலாற்றின் பெரும்பாலான உண்மைகள் உருவாக்கப்படுபவையே.

'கன்னியாகுமரி மாவட்டம் என்றுமே ஒரு தனித் தேசியமாகவே இருந்துள்ளது. இன்று அது தமிழகத்தின் ஒரு பகுதியாக வன்முறை மூலம் இணைக்கப்பட்டிருக்கிறது. குமரிதேசியம் தன் ஆக்கிரமிப்பில் இருந்து விடுதலை பெறவேண்டும், தேசிய சுய நிர்ணய உரிமை பெற வேண்டும்" என்பது அபத்தம் என்று உடனே தோன்றும் இல்லையா? ஆனால் வரலாற்றை வைத்து மிகக் கச்சிதமாக இதை நியாயப்படுத்தலாம்.

நமக்கு எழுதப்பட்ட வரலாறு எப்போது கிடைக்கிறதோ அப்போதிருந்தே குமரிமாவட்டம் தனி நிலப்பகுதியாக, தனி நாடாகத் தான் இருந்துள்ளது. சங்க காலத்தில் இந்நாட்டை ஆய்மன்னர்கள் ஆண்டார்கள். அவர்களை பாண்டியர்களும், சேரர்களும் மாறி, மாறித் தாக்கி அடிமைப்படுத்தித் திறை பெற்றாலும் அவர்கள் தனி நாடாகவே இருந்தார்கள். 'நாஞ்சில்நாடு" எனத் தனிநாடாகவே இது எப்போதும் சொல்லப்பட்டது.

அதன்பின் 'நாஞ்சில்குறவன்" இப்பகுதியை ஆண்டான். அவனை வஞ்சகமாகக் கொன்று பாண்டியன் இந்நாட்டைக் கைப்பற்றினான். பின்னர் சேரர்கள் கைப்பற்றினார்கள். பின்னர் 'ராஜராஜ சோழன்" இந்நாட்டைக் கைப்பற்றி முந்நூறு வருடம் ஆண்டான். அவனுக்கு எதிராக நாஞ்சில்நாடு இடைவிடாது போராடியது. சோழர் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று நாஞ்சில் நாடு அரை நூற்றாண்டு காலம் தனித்துச் செயல்பட்டது. மீண்டும் பாண்டியர். அதன் பின் இஸ்லாமியர். அதன்பின் நாயக்கர்கள் இந்நாட்டைக் கைப்பற்றித் திறை பெற்றார்கள்.

பின்னர் 'திருவிதாங்கூர் அரசு" என்ற பேரில் இந்நாடு நாநூறு வருடம் தனியாகச் செயல்பட்டது. 'ஆரல்வாய்மொழி" முதல் 'ஆலப்புழை" வரை விரிந்து கிடந்தது. இந்தியா சுதந்திரம் பெறும்போது இது தனிநாடாகவே இருந்தது. தனி நாணயமும், தனி ராணுவமும், தனிக் கொடியும் கொண்ட முற்றிலும் சுதந்திர நாடு இது. சுதந்திர இந்தியாவுடன் சேர்வதற்கு நாஞ்சில் நாடாகிய 'திருவிதாங்கூர்" திட்டவட்டமாக மறுத்து விட்டது.

இதன் அப்போதைய திவான் சி.பி ராமசாமி அய்யர் இது ஒரு தனிநாடு - இது இந்தியாவுடன் இணையாது என்று அறிவித்தார். திருவிதாங்கூருக்குத் தனியாகவே சுதந்திரம் அளிக்க வேண்டும் என வெள்ளையனிடம் கோரிக்கை விடுத்தார். இந்தியாவின் 'ஆதிக்க" மிரட்டலைத் தடுக்க பாகிஸ்தானுக்கும், சீனாவுக்கும் ஆதரவு கோரி தூதனுப்பினார். ஆனால் இந்தியா தன் மாபெரும் ராணுவபலத்தால் திருவிதாங்கூரை பிடித்து தன்னுடன் சேர்த்துக்கொண்டது. ஆம், இது அத்தனையும் வரலாறு.

> “இந்தியத் தேசியத்தில் இருந்து தமிழ்த்தேசியம் பிரிந்துசெல்ல என்னென்ன காரணங்கள் உள்ளனவோ அதே அளவுக்கு காரணங்கள் தமிழ்த் தேசியத்தில் இருந்து குமரித்தேசியம் பிரிந்துசெல்லவும் இருக்கிறது.”


இன்றும் குமரிமாவட்டத்தின் பண்பாடு தனித்துவம் கொண்டது. இதன் உணவு, மொழி, சமூகவியல் எல்லாமே தமிழ்நாடு, கேரளம் இரண்டிலும் இருந்து திட்டவட்டமாக வேறுபட்டிருக்கின்றன. இந்திய தேசியமும், தமிழ்-மலையாள தேசியமும் குமரி தேசியத்தை அழிக்கின்றன.

மேலும் குமரிநிலம் இந்தியாவில் இருந்தும் தமிழகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்வதை விட கொடுப்பது பல மடங்கு அதிகம். இதன் நீரில் முக்கால் பங்கைத் தமிழகம் எடுத்துக்கொள்கிறது. மின்சாரத்தில் தொண்ணூறு சதவீதத்தைத் தமிழகம் எடுத்துக்கொள்கிறது. இதன் மீன்வளம் மொத்த தமிழகத்தின் மீன்வளத்தில் பாதி. இந்தச் சிறு பகுதியில் மூன்று மீன்பிடி துறைமுகமும், ஒரு வணிகத் துறைமுகமும் உள்ளன. மொத்தத்தில் தமிழகத்தின் வளத்தில் ஏறத்தாழ முப்பது சதவீதம் இந்த மாவட்டத்தால் அளிக்கப்படுகிறது. ஆனால் தமிழகத்தின் நிதிப்பங்கீட்டில் இந்த மாவட்டம் வெறும் நான்கு சதவீதத்தையே பெறுகிறது.

ஆகவே தமிழகத்தால் மிக வெளிப்படையாகக் குமரிநிலம் சுரண்டப்படுகிறது. வன்முறை மூலம் குமரியை தன் ஒருபகுதியாக ஆக்கிக்கொண்டிருக்கும் தமிழ்த்தேசியம் குமரித்தேசியத்தை அழிக்கிறது! குமரிமக்கள் திரண்டு இந்த தேசிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடவேண்டும். குமரிமக்கள் சிறுபான்மையினர் ஆகையால் வன்முறையை ஆயுதமாக்கினால் மட்டுமே தனித்தேசியத்தை அடைய முடியும்.

மேலே சொல்லப்பட்ட அனைத்துமே தகவல் ரீதியாக முழுக்க, முழுக்க நியாயப்படுத்தப்படக் கூடியவை. குமரி மக்களில் ஆழமான ஓர் அதிருப்தி எப்போதும் உண்டு. எப்போதுமே தமிழக ஆட்சியில் குமரி மாவட்டத்துக்கு முக்கியமான இடம் இல்லை. எப்போதுமே புறக்கணிக்கப்படும் மாவட்டம் இது. படித்தவர்கள் மிக்க இம்மாவட்டத்தில் வேலைவாய்ப்புகள் குறைவு. தமிழகத்தில் மலையாளியாகவும், கேரளத்தில் தமிழனாகவும் அடையாளப்படுத்தப்படும் துரதிருஷ்டம் இவர்களுக்கு உண்டு இந்த அதிருப்தியை பயன்படுத்திக்கொண்டு மேலே சொன்ன தகவல்களை வலிமையாக முன்வைத்து ஒரு சிறந்த பேச்சாளன் குமரிதேசியம் சார்ந்த உணர்ச்சியை இங்குள்ள மக்களிடம் உருவாக்கி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு சீனாவோ, அமெரிக்காவோ பணம் கொடுத்தது என்று வைத்துக்கொள்வோம், அப்போது இந்த குமரித் தேசியத்தை ஓர் 'உண்மை" என்று சொல்ல முடியுமா? 'தேசிய சுய நிர்ணய" உரிமை குமரி மக்களுக்கு வேண்டும் என்று சொல்லலாமா? இந்த வரலாற்று உண்மைக்காகக் குமரி மக்கள் ரத்தம் சிந்தவேண்டுமா? என்ன அபத்தம் என்று தோன்றுகிறது இல்லையா?

இந்தியாவின் வடகிழக்கில் பேசப்படும் பெரும்பாலான தேசியங்கள் இந்த அளவுக்குக் கூட வரலாற்று நியாயங்கள் இல்லாதவை. இந்த அளவுக்குக் கூட நிலப்பரப்பு இல்லாதவை. உதாரணமாக 'போடோலாண்ட்" என ஒரு தேசியக்கோரிக்கை பேசப்படுகிறது. ஆனால் 'போடோக்கள்" மூன்று மாநிலங்களிலாகப் பிரிந்து மற்றய மக்களுடன் கலந்து கிடக்கும் ஒரு பழங்குடி இனம். அது 'நாடார்லாண்ட்" கேட்பதைப்போல.



ஜெயமோகன்

அப்படி ஒரு 'நாடார்லாண்ட்" கொடுக்கப்பட்டால் அங்கே வாழும் தேவர்கள் என்ன செய்வார்கள்? இன்னும் சிறுபான்மையினரான ஆசாரிகள், கொல்லர்கள், பகடைகள் எங்கே போவார்கள்? 'போடோலாண்ட்" போராட்டம் பெரும்பாலும் சக பழங்குடிகள் மேல் கொலைவெறித் தாக்குதல்களாகவே இதுவரை இருந்துள்ளது என்பதே உண்மை. ஆனால் அதையும் நம் முற்போக்கு அறிவுலகம் 'தேசிய சுய நிர்ணய" உரிமை என்று பேசுகிறது.

இவ்வாறு சொல்கிறேனே, இந்தியத் தேசியத்தில் இருந்து தமிழ்த்தேசியம் பிரிந்துசெல்ல என்னென்ன காரணங்கள் உள்ளனவோ அதே அளவுக்கு காரணங்கள் தமிழ்த் தேசியத்தில் இருந்து குமரித்தேசியம் பிரிந்துசெல்லவும் இருக்கிறது. இந்தியாவின் பிரிக்க முடியாத உறுப்பாகத் தமிழகத்தைக் காண என்னென்ன காரணங்கள் உள்ளனவோ அந்தக் காரணங்கள் தமிழகத்தின் பிரிக்கமுடியாத உறுப்பாக குமரிமாவட்டம் இருக்கவும் உள்ளன.

ஒரு தேசியம் என நான் நினைப்பது மாற்ற முடியாத புனித கட்டுமானத்தை அல்ல. நான்கு காரணிகளால் ஒரு தேசியம் தன் கட்டமைப்பை அடைகிறது. தேசியத்தை நியாயப்படுத்தும் அம்சங்கள் அவை என்றும் சொல்லலாம்

1. ஒரு நிலப்பகுதியின் அமைப்பு. அதற்குள் வாழும் மக்கள் ஒருநாடாக இணைவது அவர்கள் ஒருங்கிணைந்து முன்னேறுவதற்கு அவசியமாக ஆகிறது. ஆகவே அவர்கள் ஒரு தேசியம்.

2. பொதுப்பண்பாடு. ஒரு நிலப்பரப்பு எல்லைக்குள் வாழும் மக்கள் தங்கள்

வேற்றுமைக்கு அப்பால் ஒரு பொது வான பண்பாட்டின் சரடால் பிணைக் கப்பட்டிருப்பார்கள் என்றால் அவர்கள் தங்களை ஒரு தேசியமாகக் கருதி ஒருங்கிணைந்து முன்னேற முடியும்.

3. நெடுங்கால மக்கள் பரிமாற்றம். ஒரு நிலப்பகுதியில் மக்கள் நெடுங் காலமாகப் பரவி ஊடுகலந்து வாழ் கிறார்கள் என்றால் அவர்கள் ஒருங் கிணைந்து வாழ்ந்தே ஆகவேண்டும், வேறு வழி இல்லை.

4. சமகால அரசியல் பொருளியல் தேவைகள். ஒரு நிலப்பகுதியின் மக் கள் தங்களை அரசியல் ரீதியாகக் காத்துக்கொள்ளவும், பொருளியல் ரீதி யாக வளர்த்துக்கொள்ளவும் ஒரு தேசி யமாகத் திரள்வதன் தேவை இருக்கு மென்றால் அவர்கள் ஒரு தேசியமே.

மேலே சொன்ன நான்கு அம்சங்க ளுமே வலுவான ஓர் இந்திய தேசத் துக்கான காரணங்களாக அமைகின் றன என்றே நான் நினைக்கிறேன். நிலப்பகுதியாக இது ஒரு நாடு. இந் நாடு முழுக்க நிலவும் ஒரு பொதுப் பண்பாடு உண்டு, வேறுபாடுகளுக்கு அப்பால் அந்த பொதுமை அம்சம் வலிமையாக இருப்பதை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை பஞ்சாப் முதல் மிசோரம் வரை காணலாம்.

எல்லாவற்றையும் விட முக்கியமானது இந்த நாடு ஒரு பண்பாட்டுத் தேசமாக நெடுங்காலம் முதல் இருந்து வந்ததன் விளைவான மக்கள் பரிமாற்றம். இந்தியாவில் கேரளம் போன்ற சில நிலப்பகுதிகளில் மட்டுமே பிற இந்திய நிலப்பகுதியினரின் குடியேற்றம் குறைவு. நவீன காலத்திலும் அந்த குடியேற்றம் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது.

தமிழகத்தின் எட்டுகோடி மக்களில் இரண்டு கோடியினர் தமிழ் பேசாத மக்கள். முந்நூறு, நாநூறு வருடங்க ளாக இங்கே வாழ்பவர்கள். அதே சம யம் தமிழகத்துக்கு வெளியே இந்திய நிலமெங்கும் எப்படியும் இரண்டுகோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்த மக் கள் பரிமாற்றமே இந்நிலத்தை ஒரு தேசியமாக ஆக்கும் சக்தி. வேறுவழியே இல்லை. ஒருங்கிணைந்தே ஆகவேண் டும். ஒற்றுமை கெட்டால் ரத்த ஆறு தான். மானுடப்பேரழிவுதான்.

வடகிழக்கு குறித்துச் சொன்னீர்கள், உங்களுக்குத்தெரியுமா, வடகிழக்கு மக்களில் கால்வாசிக்கும் மேல் பிற இந்தியப்பகுதிகளில்தான் வாழ்கிறார் கள். கல்கத்தாவில் மட்டும் ஐம்பது லட்சம் வடகிழக்கு மாநில மக்கள் இருக்கிறார்கள் என ஒரு கணக்கு. சென்னையில்கூட ஒரு லட்சம் மணிப் பூர்-மேகாலயாவாசிகள் வணிகம் செய் கிறார்கள். இனரீதியாக வடகிழக்கு பிரிந்தால் இந்த மக்கள் அகதிகளாக வேண்டும்.

ஒரு வலிமை வாய்ந்த பெரும் தேச மாக, ராணுவ வல்லமையாக, பொரு ளாதார வல்லமையாக இருப்பதே இந்தியாவில் உள்ள அனைத்து மக்க ளுக்கும் சீரான அமைதியான வளர்ச் சியை உருவாக்கும். இந்தியாவைச் சுற்றி உள்ள நாடுகளின் துயரம் நிறைந்த வரலாறு நமக்குக் கற்பிப் பதும் அதையே. இருந்தும் ஏன் இந் தக் குட்டித்தேசியங்கள் பேசப்படு கின்றன? எப்படி இவை போராட்டங்க ளாக ஆகின்றன? நம்மில் இரு வகை அறிவுஜீவிகள் உண்டு. பலவகையி லும் பணம் வாங்கிக்கொண்டு எழுதும் புத்திசாலிகள். எது முற்போக்கு என்று சொல்லப்படுகிறதோ அதை எழுதும் அப்பாவிகள். இருசாராராலும் இந்த உபதேசியக்கோரிக்கைகள் முற்போக் கானவை என்று முன்வைக்கப்பட்டு வருகின்றன.

பஞ்சாப் தேசியக்கோரிக்கையின் ஊற் றுக்கண் எது? பஞ்சாபின் உபரி நீரை பிற மாநிலங்களுக்குக் கொடுக்க மாட்டோம் என்ற புனிதமான சுயநலம். அந்தச் சுயநலம் எளிதில் மக்களை ஒருங்கிணைக்கும். வரண்ட நெல்லை மாவட்ட 'பணகுடி - ராதாபுரம்" பகுதிக் குத் தண்ணீர் கொடுக்க மாட்டோம் என குமரி மக்கள் போராடியிருக் கிறார்கள். அதன் அடுத்த கட்டமாக குளச்சல் கடற்கரைப்பகுதிக்குத் தண் ணீர் கொடுக்க மாட்டோம் என்று 'பைங்குளம்" மக்கள் இங்கே போரா டித் தடைசெய்தார்கள்.

ஒரு மண்ணில் பிறந்து அங்கே இருப் பதனால் அங்குள்ள நதியும், காற்றும், கனிவளமும் தனக்குச் சொந்தம் என்று நினைக்கும் சுயநலத்தையே இங்கே புனித தேசியமாக நம் முற்போக்காளர் எண்ணுகிறார்கள். அதுதான் ஒரு 'ஆறு" அல்லது 'சாலையின்" முன்னால் குடியிருப்பது பின்னால் குடியிருப்பவர் களுக்கு நீரை மறுக்கும் அதிகாரத்தை அளிக்கிறது என்ற எண்ணமாகவும் ஆகிறது. இந்த உணர்ச்சிதான் 'காரைக்குடிக்குத்" தண்ணீர் கொடுக்க மாட்டோம் என 'திருப்பத்தூர்" மக்கள் அறச்சீற்றம் கொள்ள வழி வகுக்கிறது.

வடகிழக்கு மக்களின் தேசியக் கோரிக் கைகள் இத்தகைய அபத்தமான சுய நலத்தின் சிருஷ்டிகள். அவற்றுக்குப் பின்னால் பலசமயங்களில் மிகக் குறுகிய இனவாதம்தான் இருக்கிறது. வடகிழக்குத் தேசியக்கோரிக்கைகள் பல இனக்குழு அடையாளம் சார்ந்து எழுப்பப்படுகின்றன என்பதும் அவை ஒன்றுக்கொன்று கடுமையான வெறுப் புக் கொண்டவை என்பதும் இங்குள்ள நம் அறிவுஜீவிகளுக்குத் தெரிவதில்லை. அவற்றுக்குப் பொதுவான எதிரியாக இந்திய தேசியம் இருப்பதால் மட் டுமே அவை ஒன்றுக் கொன்று ரத்தக் களரியில் ஈடுபடாமல் இருக்கின்றன.

ஆனாலும் அவ்வப்போது அவற்றுக்கு இடையே பெரும் வன்முறைகள் வெடித்துக் கொலை வெறியாட்டம் நடந்துள்ளது. சென்ற 2003 முதல் மூன்று வருடம் போடோக்களுக்கும் பிற பழங்குடிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் கொல்லப்பட்டவர் கள் ஐயாயிரம் பேருக்கு மேல். துரத்தப்பட்டவர்கள் ஒரு லட்சம். இந்த தேசிய இனக்கோரிக்கைகள் வெற்றி பெற்று வடகிழக்கு மாநிலங்களில் கிட்டத்தட்ட பன்னிரண்டு தனி தேசங் கள் உருவானால் அங்கே என்ன நிகழப்போகிறது என்பது வெளிப்படை. எல்லா பழங்குடிகளும் எல்லா நிலங்க ளிலுமாக பரவி வாழும் அங்கே பழங் குடிக்கொரு தேசம் என்றால் ரத்த வெறியாட்டமும் அகதிப்பெருக்கமும் தான் உருவாகும். அதைத்தான் தேசிய சுயநிர்ணயம் என்கிறார்கள் நம் அறிவுஜீவிகள்.

இன அடையாளம் குறித்துச் சொன் னீர்கள். இதையெல்லாம் பற்றிப்பேசும் நம் ஆட்களில் ஒரு எளிய இந்தியச் சுற்றுப்பயணம் மேற்கொண்டவர்கள் எவரும் இல்லை. குறிப்பாக தமிழில் எஸ்வி ராஜதுரை போன்றவர்கள். அவர்களுக்கு நேர் அனுபவமாக தமிழ கமே தெரியாது. ஒரு எதிர்மறை நிலை பாட்டை ஏற்கனவே எடுத்துக்கொண்டு அதற்கேற்ப தகவல்சேகரித்து எழுதி வைப்பதுதான் இவர்கள் அறிந்தது. இந்தியாவில் ஒரு சுற்று சுற்றிவந்தால் தெரியும் இங்கே இன அடையாளம் என்ற பேச்சே மிகமிக அபத்தம் என்று இந்தியாவில் சாதாரணமாக கண் ணுக்கே நான்கு வகை தோற்ற தனித் தன் மைகள் தென்படும். ஒன்று கரிய நிறமுள்ள மனிதர்கள். ஒரு பேச்சுக் காக திராவிடர் எனலாம். இன்னொன்று சிவந்த மனிதர்கள், ஆரியர்கள். மங்க



போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவத்தின்

ஏற்பாட்டில்

## நூல் வெளியீடு

# ‘தமிழின படுகொலைகள்’

## 1956 – 2008




வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் திரட்டிய
தகவல்கள், வரைபடங்கள், வீடுவீடாக சேகரித்த தரவுகள்
நேரடிச் சாட்சிகளின் வாக்குமூலங்கள்
பிற மனித உரிமை நடுவங்களின் வெளியீடுகள்
அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு தொகுப்பு

**160க்கு மேற்பட்ட தமிழினப்படுகொலைகளின்**
**வரலாற்று ஆவணம்**

**மே 15, 2010 சனிக்கிழமை**
**மாலை: 2:30 - 4:00**

*அனைவரையும்*
*அன்புடன் அழைக்கின்றோம்*

A Book release organized by

**Centre for War Victims and Human Rights (CWVHR)**

## ‘MASSACRES OF TAMILS’ 1956 – 2008

Information and facts collected by

**North East Secretariat on Human Rights (NESOHR)**

*Published by*

**MANITHAM** (Chennai)

Venue: **Sheraton Parkway Hotel**
(600 Highway 7 East, Richmond Hill, ON L4B 1B2)
Day : May 15th, 2010
Time: 2.30 P.M. to 4.00 P.M

Please visit www.cwvhr.org or email: info@cwvhr.org

**or Call 416 628 1408 / 416 300 7026**

11ம் பக்க தொடர்ச்சி...

# தேசிய சுயநிர்ணயம்

லான நிறம் கொண்ட உயரமும் எடையும் இல்லாத சித்தியன் மக்கள். மஞ்சள் இனமான மங்கோலியர்

இந்த மூன்று மக்களையும் நாம் இந்தியா முழுக்க எங்குமே காணமுடியும் என்பதுதான் ஆச்சரியம். தென்னிந்தியாவில் அந்தமான் தீவில் உள்ள பழங்குடியினரில் மஞ்சள் இனத்தைச்சேர்ந்தவர்கள் உண்டு. கர்நாடகத்தில் பல இடங்களில் பல்லாயிரம் வருடப் பாரம்பரியமாக வாழும் மஞ்சள் இனத்தவர் உண்டு. வங்காளத்தில் டார்ஜிலிங் பகுதி முழுக்க முழுக்க கூர்க்காக்களுடையது. இமையமலை அடிவாரம் முழுக்க எல்லா மாவட்டங்களிலும் மஞ்சள் இனத்தவர் உண்டு. அதேபோல வட இந்தியா முழுக்க எங்கும் திராவிட மக்களை பார்க்கலாம். பிகாரில் பெரும்பாலான மக்களில் திராவிட முகங்களே தென்படும். இன அடிப்படையில் இந்தியாவை நிலப்பாகுபாடு செய்யவேமுடியாது.

அதேபோல இந்தியாவில் உள்ள எல்லா இனங்களும் நெடுங்கால இனக்கலப்பால் தனித்தன்மை இழந்து கலவையான பண்புகளுடன் இருப்பார்கள் என்பதைக் காணலாம். வங்காளிகளில் பெரும்பாலானவர்களுக்கு மங்கோலிய இன அடையாளம் கொஞ்சம் இருக்கும். நேதாஜி சுபாஷ் சந்திர போசின் முகத்திலேயே நீங்கள் அதைப் பார்க்கலாம். மத்தியபிரதேசத்தில் போபால் பகுதியில், கர்நாடகத்தில் குந்தாப்பூர் பகுதியில் மங்கோலியக் கலப்புள்ள மக்களை நிறையவே பார்க்க முடியும்.

ஒரு பெருந்தேசமாக இருப்பதே இந்தியாவுக்கு இன்று நல்லது. இத்தனை மக்கள்ப்பரிமாற்றம் உள்ள நிலப்பகுதியில் வேறெந்த தேசிய உருவகமும் அழிவையே உருவாக்கும். ஆகவே நான் இந்திய தேசியத்தின் ஆதரவாளன். உடனே இந்த தேசிய உருவகத்தை புனிதமானது என நான் சொல்கிறேன் என்று சொல்ல ஆரம்பிக்கும் அறிவுஜீவிகள் நம்மிடையே அதிகம். இந்த தேசியத்தை விட மேலான இன்னொன்று , ஒரு சர்வ தேசியம், முன்வைக்கப்பட்டால் இந்த தேசிய உருவகத்தை உதறுவதே உசிதமானது என்பேன்.

ஆனால் இந்த வசதியான, வளர்ச்சியையும் அமைதியையும் அளிக்கக்கூடிய, தவிர்க்க முடியாத அமைப்பை உடைத்து ஒன்றுடன் ஒன்று போரிடும் சாதியதேசியங்களின், மொழித்தேசியங்களின், இனத்தேசியங்களின் கூட்டமாக இந்த நிலத்தை ஆக்க வேண்டும் என்று சொல்லும் மேதைகள் சர்வ தேசியத்தை முன்வைத்து தேசியத்தை நிராகரித்தவர்களை தங்களுக்கு மேற்கோள் காட்டுகிறார்கள். தேசியத்தை தாண்டிய பின் நவீனத்துவ படிமத்தைச் சூட்டிக் கொள்கிறார்கள். எதையும் எங்கும் எப்படியும் மேற்கோள் காட்டும் திராணி நம்மிடம் இருப்பது போல எங்கும் இருக்காது

ஒரு தேசமாக ஒருங்கிணைந்து முன்னேறுவதற்கான காரணங்களே இந்தியாவின் எப்பகுதி மக்களுக்கும் அதிகம். இருந்தும் பிரிவினை வாதம் முன்வைக்கப்படுகிறது. பல இடங்களில் செல்வாக்குடனும் இருக்கிறது.. ஏன்? முக்கியமாக அது அரசியல் உள் நோக்கம் கொண்ட கோரிக்கை. அதிகாரத்துக்கான குறுக்கு வழியாகவே இந்த தேசியக் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன. வடகிழக்கு பகுதியில் சீனா பெரும் செலவில் மிகத்திறமையான உளவாளிகள் உதவியுடன் அந்த பிரிவினைவாதக் கோரிக்கைகளை வளர்த்து விடுகிறது.

இது இயல்பானதே. பாக் பஞ்சாபில் சிந்து தேசிய கோரிக்கையையும் , ஸ்வாத் பள்ளத்தாக்கில் பதான் தேசிய கோரிக்கையையும் பாகிஸ்தானில் வளர்த்து விட்டது இந்தியா. ஈழத்தமிழ் கோரிக்கையையும் இந்திய உளவுத்துறையே வளர்த்துவிட்டது. முடிந்தால் சீனாவுக்குள்ளும் உபதேசியக் கோரிக்கைகளை இந்திய அரசு தன் உளவமைப்புகள் மூலம் உருவாக்கக் கூடும்.

ஆகவே உபதேசியக் கோரிக்கைகளை அது உண்மையா பொய்யா என்ற அளவில் பார்ப்பது அபத்தம். அதனால் யாருக்கு லாபம், என்ன லாபம் என்ற அளவில் பார்ப்பதே உசிதமானது. வடகிழக்கு உபதேசியக்கோரிக்கைகளால் சாதிக்கொரு தனி நாடு கிடைத்தால் அங்கே லாபம் அடையப்போவது யார்? நாளை தமிழ்நாட்டை அதேபோல நாடார் லேண்ட், வன்னியநாடு, தேவர்பூமி என்றெல்லாம் பிரிக்கும் கோரிக்கை வந்தால் அதனால் எவருக்கு லாபம் வரும்?

கண்டிப்பாக மக்களுக்கு அல்ல. அவர்கள் தங்களுக்குள் மோதி அழிவார்கள். குருதி பெருக்குவார்கள். பட்டினியில் சாவார்கள். சுயநல நோக்குடன் இம்மாதிரி பிரிவினைவாதங்களை தூண்டிவிடும் அரசியல்வாதிகளுக்கும் சரி, அவற்றை நியாயப்படுத்தும் அறிவுஜீவிகளுக்கும் சரி மானுட அழிவு ஒரு பொருட்டே அல்ல. தங்கள் பிளவு அரசியல் மூலம் மக்கள் ஆயிரம் லட்சம் என அழிந்தால்கூட அந்த அழிவையே தங்கள் எதிரிக்கு எதிரான ஆயுதமாக மாற்றிக்கொள்ள முடியும் என்றுதான் அவர்கள் யோசிப்பார்கள். அதைத்தான் எந்த மனசாட்சி உறுத்தலும் இல்லாமல் செய்வார்கள்.

பலசமயம் இவற்றில் உள்ள அபத்தம் நம் கண்களை மங்கச்செய்யும். சில்லறை பொருளியல் காரணங்களுக்காக ஆரம்பிக்கும் ஒரு பிரிவினைவாதப்போராட்டம் அந்த பொருளியல் லாபத்தைவிட பல்லாயிரம் மடங்கு அழிவை உருவாக்கும். நதிநீர் தாவாவுக்காக பஞ்சாபில் ஆரம்பித்த தனி நாடுப்போராட்டம் பாகிஸ்தானிய ஆதரவுடன் பெருகி பஞ்சாபை அப்படியே மரணப்படுக்கையில் வீழ்த்தியது. வடகிழக்கு சுரண்டப்படுகிறது என்று சொல்லி ஆரம்பிக்கபப்ட்ட போராட்டங்கள் சாதிப்போராட்டங்களாக மாறி வடகிழக்கையே அழித்துக்கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் சண்டே இன்டியன் இதழில் இதழாளார் ஒருவர் எண்பதுகளில் தீவிரவாதம் இருந்த நாட்களில் பஞ்சாப் எப்படி இருண்டு கைவிடப்பட்டு கிடந்தது என்று சொல்லிவிட்டு இன்றைய பஞ்சாப் கடந்த இருபத்தைந்தாண்டுகளில் எப்படி மாபெரும் பொருளியல் பாய்ச்சலை அடைந்துள்ளது என் எழுதியிருந்தார். பொருளியல் வளர்ச்சிக்காகப் பிரிவினைப்போர் என்பது தலைவலிக்காக தற்கொலை செய்துகொள்வது போல.

எந்த தேசியக்கோரிக்கையும் தன்னிச்சையாக எழுவதில்லை. அதிகார அரசியல் நோக்குடன் திட்டமிட்டு உருவாக்கப்படுகின்றன அவை. ஒருசிலரை பதவிக்குக் கொண்டுசெல்லும் ஏணிகள் அவை. அந்த மாற்றத்தால் சிலசமயம் சில லாபங்கள் இருக்கலாம். ஆனால் அந்த ஆட்சி- அதிகார மாற்றத்துக்காக எந்த அளவுக்கு எளிய மக்கள் இழப்பைச் சந்திக்க வேண்டும் என்பது மட்டுமே கேள்வி. அந்தக் கோரிக்கை வரலாற்று ரீதியானதா இல்லையா என்பதல்ல.

வரலாறு தெரிந்தவன் ஒன்றை உணர்ந்திருப்பான், எந்த தேசியக்கோரிக்கையையும் வரலாற்றை வைத்து நியாயப்படுத்தலாம். எந்த தேசியக் கோரிக்கையையும் வரலாற்றை வைத்து நிராகரிக்கவும் செய்யலாம். சேர்ந்து வழவெண்டும் என்றாலும் பிரிந்து சாகவேண்டும் என்றாலும் வரலாற்றில் இருந்து அதற்கான எல்லா ஆதாரங்களையும் கண்டு பிடிக்கலாம். ●

# இலங்கையின் படை பலம், இந்திய பாதுகாப்பு தந்திரோபாயங்களுக்கு அச்சுறுத்தல்? கேணல் ஹரிஹரன்



இலங்கை தனது பாதுகாப்பை வலுப்படுத்திக் கொள்ளும் செயற்பாடானது இந்தியாவின் பாது காப்புத் தந்திரோபாயங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என இந்திய அமைதிகாக்கும் படையின் முன்னாள் பொறுப்பதிகாரியும், பாதுகாப்பு ஆய்வாளரும் கேணல் ஹரிஹரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய படை பலம் இந்தியாவின் படை பல அளவில் நான்கில் ஒரு பங்காகும் என அவர் சுட்டிக்காட்டியுளார். 200000 படையினர் இலங்கையில் இராணுவத்தில் அங்கம் வகிப்பதாகவும், இது இந்தியாவின் பாதுகாப்பு தந்திரோபாயத்திற்கு அச்சுறுத்தல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற 'இலங்கையில் அடுத்தது என்ன" என்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அடிமட்ட மக்களுக்குத் தீர்வுத் திட்டங்களை வழங்குவதே இலங்கையில் முதன்மையானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் முனைப்புக்களுக்கு இந்திய மத்திய அரசாங்கம் காத்திரமான வழியில் பங்களிக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த ரீதியில் தோற்கடிக்கப் பட்டுள்ளமையினால் இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்யக் கூடிய சந்தர்ப்பத்தை இழந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்வுத் திட்டத்தில் காத்திரமான பங்களிப்பினை வழங்குவதன் மூலம் இந்தியா மீண்டும் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் உரிய முறையில் சர்வதேச சமூகத்தில் வெளிப்படுத்தப்படவில்லை அவர் அவர் குறிப்பிட்டுள்ளார். புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் சீரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

காணி, கல்வி உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதன் மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தியா சீனாவிடம் இலங்கையை இழந்துள்ளதாக 'டெக்கன் கொர்னிக்கல்" பத்திரிகையின் சிரேஸ்ட ஆசிரியர் பகவான் சிங் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதனைத் தொடர்ந்து இலங்கைக்கு இந்தியாவின் தேவை குறைவடைந்துள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய முறையில் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# ரொறொன்ரோ பல்கலைக்கழகம் தமிழியல் மாநாடு - 2010

**வெள்ளிக்கிழமை, மே 14, 2010**

காலை 10.00-12.00மணி

ஒரே நேரத்தில் மூன்று அமர்வுகள் இடம் பெறும்

அரங்கு 1 , அமர்வு-1

தேயிலைப் பெண்கள்: பாலினம்,ஒடுக்குமுறை,போராட்டம்

அமர்வு-2

தமிழ் இலக்கிய உலகங்களில் பாலினமும் பால் நிலையும் கட்டமைக்கப்படும் முறைமை

அமர்வு-3

சடங்குகளூடாக இடம்-வெளி என்பனவற்றின் உருவாக்கம்

12.00-1.00மணி: மதிய உணவு

பிற்பகல் 1.00-3.00மணி

அரங்கு-2 , அமர்வு-1

மார்க் விற்றேக்கரின் “சிவராமிடம் இருந்து அரசியல் கற்றுக் கொள்ளல்” என்னும் நூல் பற்றிய திறனய்வு அரங்கம்

அமர்வு-2

சமூக உருவாக்கத்தில் பாலினத்தின் பங்கு

அமர்வு-3:

புதிய அறிவுச் சுற்றோட்டங்கள்: நடனமும் எழுத்தும்

பிற்பகல் 3.30-5.30மணி

அரங்கு-3, அமர்வு-1

தமிழ் தலித்திய அரசியல்

அமர்வு-2

தமிழின் புதிய பொது வெளிகள்

அமர்வு-3

புலம்பெயர் தமிழர் வாழ்வும் நலம்பேணலும்

பிற்பகல் 6.00-7.45 மணீ

சிறப்புரை: பேராசிரியர் ராஜ் கௌதமன்: சங்ககாலமும் பாணர் மரபும்

**சனிக்கிழமை, மே 15, 2010**

காலை 10.00-12.00மணி

ஒரே நேரத்தில் மூன்று அமர்வுகள் இடம் பெறும்

அரங்கு-1, அமர்வு-1

இயக்கம், பெயர்வு எழுத்து என்பவற்றுக்கு ஊடாகத் தேசம், தேசியத்தைக் கற்பனை செய்தல்

அமர்வு-2

கா.சிவத்தம்பியின் அறிவுப்பணி பற்றிய அரங்கு.

அமர்வு-3

வேற்றுமைகள் உருவாகும் நேரம்

பிற்பகல் 1.00-3.00மணி

அரங்கு-2, அமர்வு-1

நாடு கடந்த தேசியம், குடியுரிமை, அலைந்துழல்வு

அமர்வு-2

ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வுச் சூழலும் பண்பாட்டு அசைவியக்கங்களும்

அமர்வு-3

மொழிவழித் தேசியம், நுண்கலைகள் மற்றும் புலம் பெயர்வு

பிற்பகல் 3.30-5.30மணி

அரங்கு-3, அமர்வு-1

மே 2009: புலம்பெயர்மக்களின் போராட்டங்கள்-கலைப் பதிவுகள்

அமர்வு-2:

இலங்கைக்கு ஒரு புதிய அரசியல் யாப்பு

சிறப்புரை:

பேராசிரியர் சஞ்சே சுப்பிரமணியம், கலிபோர்ணியா பல்கலைக் கழகம்

New Connection Nava Services

**Pick -Up, Drop- Off**

Temples, Airport, Dr. Appointments and more

**Please Call (647) 454-2245**

# புதிய ஆட்சியில் புதிய உறவு

## பிரிட்டனின் புதிய பிரதமர் டேவிட் கேமரன்



ஐக்கிய ராஜியத்தின் புதிய பிரதமர் டேவிட் கேமரன், கன்சர்வேடிவ் கட்சியின் தலைவராகப் பொறுப் பேற்றதும் முதலில் பய ணம் செய்த நாடு இந்தியா. கடந்த நான்கு ஆண்டுக ளுக்கு முன்பு அவர் இந் தியா வந்தபோது, அது வெற்றிப் பயணமாக வர் ணிக்கப்பட்டது.

அந்தப் பயணத்தின்போது, டேவின் கேமரன் பேசு கையில், உலகின் புவி ஈர்ப்பு விசை, ஐரோப்பா மற்றும் அட்லான்டிக்கில் இருந்து ஆசியாவை நோக்கிச் செல்லும் நிலையில், இந்தியா, ஐக்கிய ராஜ்யம் ஆகிய இரு நாடுகளும் புதிய உறவை ஏற்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.

இப்போது, இரு நாடுகளிலும் உள்ள வெளியுற வுத்துறை அதிகாரிகள், புதிய பிரிட்டிஷ் அரசாங் கம், இந்தியாவுடன் நெருக்கமான உறவை வளர்க்கும் என்றும், குறிப்பாக பாதுகாப்பு, தீவிர வாதத்துக்கு எதிரான நடவடிக்கை மற்றும் வர்த் தகம் ஆகிய துறைகளில் நெருக்கமான ஒத்து ழைப்பு இருக்கும் என்றும் சொல்கிறார்கள்.

இந்தியாவில் அதிக முதலீடு செய்யும் நாடுகளில் ஐக்கிய ராஜ்யமும் ஒன்று. அதேநேரத்தில், ஐக் கிய ராஜ்யத்தில் முதலீடு செய்யும் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உள்ளது. கன்சர்வேடிவ் கட்சி தலைமையிலான அரசு, முக்கியப் பிரச்சி னைகளில், அதாவது பருவநிலை மாற்றம், பாகி ஸ்தானுடனான காஷ்மீர் பிரச்சினை போன்ற வற்றில் இந்தியாவுக்கு மிகக்குறைவான அழுத் தமே கொடுக்கும் என்று இந்தியாவிலுள்ள நோக் கர்கள் கருதுகிறார்கள்.

அதே நேரத்தில், அவுட்சோர்ஸிங் என அழைக் கப்படும், பணிகளை வேறு நாடுகளுக்கு மாற்று தல், குடியேற்றம் ஆகிய அம்சங்களில் புதிய அர சாங்கத்தின் கொள்கைகள் தொடர்பாக இந்தியா வில் பல கவலைகள் உள்ளன.

கன்சர்வேடிவ் கட்சியின்படி, குடியேற்ற விதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டால், இந்திய தொழில் முறை நிபுணர்களும், மாணவர்களும் பெருமளவு பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகக் கூறபடுகிறது. மேலும், ஓய்வூதிய நிதியைப் பராமரித்தல் தொடர் பாக ஐக்கிய ராஜியத்தின் ஓய்வூதிய நிதி மேம் பாட்டுத் துறைக்கும் இந்திய தொழில் நிறுவன-மான டாடாவுக்கும் ஏற்பட்டுள்ள 9 மில்லியன் டாலர் ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்யப் போவதாகவும் கன்சர்வேடிவ் கட்சி ஏற்கெனவே அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், டேவிட் கேமரனை வாழ்த்தி விரைவில் இந்தியா வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார். இருநாட்டுப் பிரதமர்களும் சுமார் 10 நிமிடம் தொலைபேசியில் உரையாடியதாகவும், இருதரப்புப் பிரச்சினைகள் குறித்து ஆலோசித்ததாகவும் கூறப்படுகிறது.

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

17 • 04 • 1970



உதிர்வு

13 • 04 • 2010

## சின்னராசா ராயுமேன்

இரண்டாம் குறுக்குத் தெரு , காங்கேசன்துறை

விடியலுக்கென சேனையில் அணிவகுத்துப் புறப்பட்டவன்
சேற்றிலும் சகதியிலும் புரண்டவன்
விழுப்புண்களை உடலெங்கும் வரித்துக் கொண்டவன்
வேரற்ற மரமாய் வீழும் வரை
உன் பணி தொடர்ந்தவன்
எம் நினைவில் என்றும் நீ வாழ்ந்திடுவாய்


காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பழைய
மாணவர் சங்கம் தனது கண்ணீர் அஞ்சலிகளை உனக்கு
உரித்தாக்குகிறது.

தொடர்புகட்கு : தாசன் (416) 565-1866


S&S
CONSTRUCTION
வடிவமைப்பிலும்
நிர்மாணத்திலும்
தலைசிறந்த நிறுவனம்.
நேர்மையான தொழில்
நியாயமான விலை.
Hardwood
Laminate
Granite
Call for free Estimate
416-291-4669
Hardwood • Laminate • Granite
3341 MARKHAM ROAD, UNIT B105, SCARBOROUGH M1X 0A5


REALTY EXECUTIVES
GTA LTD.
Brokerage.
EXPERIENCE the advantages of working with an EXECUTIVE
Kumaran Pathmanathan
Sales Representative
Direct: 647-273-7359
To Sell Your Home quick and for the Best Price call me Today.
Reliable ~ Trustworthy ~ Experienced
9889 Markham Rd. (Hwy 48),
Suite 209, Markham, ON. L6E 0B7
Office: 905-209-7500 Fax: 905-209-7501
Each office is independantly owned and operated. Not intended to solicit buyers or sellers under contract.


ALFA AUTO DETAILING
A
ALFA AUTO DETAILING
FREE
PICK UP 7 DELIVERY
CAR WASH
Exterior Shampoo & Polishing
Interior Shampoo
Engine Shampoo
Leather Treatment
Aluminum Wheel Cleaning
Under Coating
உங்கள் எல்லா விதமான வாகன சுத்திகரிப்பு தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்...
Steees Ave
Nashdine R
Middlefeild
Fince Ave
Markham Ro
Tel 416 640 1255 Cell 416 897 3529
80 NASHDENE ROAD, UNIT 6 SCARBOROUGH ON M1V 5E4


அழுதது போதும் - இனி
எழுவோம் துணிவுடன்!
வலி சுமந்த மாதம்
குருதி படிந்த தாய்நில
நீங்காத நினைவுகளுக்காய்
கனடிய உறவுகளின்
நெடுமூச்சு நிகழ்வுகள்
மே 03-18, மாலை 4.00 - 8.00 மணி வரை
'வலி சுமந்த விழிப்பு' தொடர் கவனயீர்ப்பு
(அமெரிக்க துணைத்தூதரகம் 360 University Ave , Toronto)
மே 08, சனி: மாலை 5.00 மணி
'வலி சுமந்த ஆகுதித் திங்கள்'
கனடா தமிழ் மகளிர் அமைப்பின் ஆர்ப்பரிக்கும் அரங்க நிகழ்வு
(கனடா கந்தசாமி கோவில் மண்டபம்)
மே 15, சனி: மாலை 5.00 மணி
'வலி சுமந்த தாயகத்தின் குரல்'
வானம்பாடிகளின் எழுஓசை
(கனடா கந்தசாமி கோவில் மண்டபம்)
மே 18, செவ்வாய்: மாலை 4.00 மணி
'போர்க்குற்ற நாள்'
(விபரங்கள் பின்னர் அறியத்தரப்படும்)
வீழ்வது தோல்வியல்ல; வீழ்ந்தபின்
மீண்டும் எழும்பாதிருப்பதே தோல்வி
கனடியத் தமிழர் சமூகம் - கனடியத் தமிழ் மாணவர் சமூகம்

# செஸ்ஸில் தமிழரான ஆனந்த் மீண்டும் உலக சாம்பியன்

இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். பல்கேரியாவின் வேஸலின் டோபலோவை அவர் வென்றுள்ளார். 12 சுற்றுகள் இடம் பெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் வென்றதன் மூலம் ஆனந்த் மீண்டும் சாம்பியனாகி உள்ளார்.
இந்தப் போட்டிகளில் மூன்றில் ஆனந்தும், இரண்டில் டோபலோவும் வென்



றனர். ஏழு போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. இறுதியில் 6.5 க்கு 5.5 என்கிற புள்ளிகள் வீதத்தில் ஆனந்த் வென்றுள்ளார்.

இரண்டு மில்லியன் யூரோக்கள் பரிசுத் தொகையை ஆனந்தும், டோபலோவும் சமமாக பகிர்ந்து கொள்வார்கள். பரபரப்பான இறுதி ஆட்டத்தில் கருப்பு காய்களுடன் விளையாடிய ஆனந்த் அதிரடியாக ஆடி இந்த வெற்றியை பெற்றார் என சதுரங்க விளையாட்டு விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். 2008 ஆம் ஆண்டில் ரஷ்யாவின் விளாடிமிர் கிராம்னிக்கை வெற்றிக் கொண்டு உலக சதுரங்க சாம்பியன் பட்டத்தை வென்றார். இதுவரை நான்கு முறை உலக பட்டத்தை அவர் வென்றுள்ளார்.

## றொறன்ரோவில் தொடரும் கவனயீர்ப்பு போராட்டம்

வன்னியில் இனப்படுகொலையைச் செய்த அரசாங்கத்தின் மீது சர்வ தேச நீதிமன்றில் குற்றவியல் விசாரணைகளை சர்வதேசம் மேற்கொள்ள வேண்டும் என்றும் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூரும் முகமாகவும் கனடியத் தமிழ் இளையவர்கள் தொடர் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பாரிய இனப்படு கொலையை இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீது நிகழ்த்தியிருந்த மே மாதத்தை வலிசுமந்த மாதமாக அறிவித்துக் கனடியத் தமிழ் இளையவர்கள் பல நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

அதில் ஓர் அங்கமாக அமெரிக்கத் துணைத் தூதுவரலயம் முன்பாகக் கூடிய இளையவர்கள் எமது மக்களின் துயரங்களைச் சர்வதேசத்துக்கு எடுத்துக்காட்டும் முகமாவும் இலங்கை அரசாங்கம் மீது போர் குற்றவியல் விசாரணைகளை சர்வ தேசம் மேற்கொள்ளவேண்டும் என்றும் பதாதைகளைத் தாங்கியவாறு நின்றனர்.

இதன்படி றொறன்ரோவில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதுவரால யம் முன்பாகக் கூடிய மக்கள் தமது கவனயீர்ப்பு நிகழ்வை தமது வாயில் கறுப்பு துணியால் கட்டியவாறு மேற் கொண்டனர். இக்கவனயீர்ப்பு நிகழ்வு நாள்தோறும் மே 19 வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரவீந்திரநாத் தாகூர் 150 வருடங்கள்

ரவீந்திரநாத் தாகூரின் 150 ஆம் ஆண்டு கொண்டாட்டங்கள் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆத் தேதி தொடங்கி ஓராண்டுக்கு நடைபெற இருக்கின்றன. இந்தியாவின் முன்னோடி இலக்கியப் படைப்பாளிகளில் ஒருவரும், இந்தியா மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகளின் தேசிய கீதத்தை எழுதியவருமான ரவீந்திர நாத் தாகூர் இலக்கியம் மற்றும் ஓவியத்தில் தனக்கென்று ஒரு இடத்தை பெற்றுள்ளார்.

இன்றைக்கும் அவர் இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த கவிஞராக, முன்னோடியாக இருக்கிறார் என்று நிச்சயமாகக் கூற முடியும் என இலக்கிய விமர்சகரும், தமிழில் நவீன இலக்கியங்களின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுபவரு மான ஞானக்கூத்தன் கருத்து வெளியிடுகிறார்.

'இந்தியாவில் நவீன இலக்கியத்தின் தந்தையாகத் தாகூர் கருதப்படுகிறார்" என்றும் அவர் கூறுகிறார். தாகூர் அவர்களின் ஆளுமையும், தாக்கமும் இன்றளவும் இந்தியாவில் பல எழுத்தாளர் களிடம் இருக்கின்றன எனவும் ஞானக் கூத்தன் கூறுகிறார்.

இந்திய மொழிகள் அனைத்திலும், கவிஞர்கள் செய்யுள் இலக்கணத்திலிருந்து விடுபட்டு நவீன கவிதைக்கு வருகின்ற போக்கை 1913 ஆண்டிலேயே தாகூர் கையாண்டது அவரது ஆளுமைக்கு ஒரு எடுத்துக்காட்டு எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

தாகூரின் முன்னெடுப்பை அடுத்து இந்தியாவிலுள்ள அனைத்து மொழிக-ளிலும் உள்ள கவிஞர்களும் இலக்கணம் இல்லாத கவிதை எழுத வந்தார்கள் என்றும் ஞானக்கூத்தன் கூறுகி-றார். தாகூரின் கவிதைகளில் அவரது ஆழ்ந்த மதநம்பிக்கை வெளிப்படுகிறது என்றாலும், அதன் காரணமாக அவரது நவீனத்துவம் குறைந்துவிட்டதாகச் சொல்ல முடியாது எனவும் அவர் கருத்து வெளியிடுகிறார்.

ரவீந்திரநாத் தாகூரின் ஓவியங்கள் நவீனமாக இருக்கும் அதேவேயையில் அவை இந்தியத்தன்மையுடன் இருக்கின்றன என்றும் அவர் கூறுகிறார். மகாகவி பாரதியார் மீது தாகூரின் படைப்புகள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன எனக் கூறும் ஞானக்கூத்தன், பாரதியார் தாகூரின் கவிதைகளை மொழிபெயர்த்துள்ளார் என்பதையும் சுட்டுக்காட்டுகிறார்.

இந்திய மொழிகளில் கவிதை விடுதலை அடைவதற்கும், நவீனமடைவதற்கும் தாகூர்தான் மூலகர்த்தாவாக இருந்து வந்திருக்கின்றார். இன்றைக்கும் தாகூர் ஒரு படிக்கத் தகுந்த இலக்கியவாதியாக இருக்கிறார் என்றாலும் அவர் படிக்கப்படுகிராறா என்பது தெரியவில்லை என்றும் தனது கருத்தை வெளியிடுகிறார் அவர்.



தாகூரின் சில சிந்தனைகள் பிற்போக்கு கொள்கைகளைக் கொண்டிருந்ததாக கூறப்படும் விமர்சனத்தை மறுக்கும் ஞானக்கூத்தன், இதற்கு உதாரணமாக அவரது 'கோரா" எனும் புதினத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

தேசியம் என்பது பாராட்டுக்குரிய ஒரு விடயமல்ல, அது மக்களை ஓரிடத்தில் முடக்கி விடுகிறது என்கிற கருத்து தாகூரிடம் இருந்தது எனவும் அவர் மேலும் கூறுகிறார்.

தாகூரின் சாராம்ச உணர்வுகள் அவருக்கு நோபல் பரிசை பெற்றுத்தந்த கீதாஞ்சலியில் வெளிப்படுகிறது என்றும், உலகின் எந்த மொழியில் படித்தாலும் கீதாஞ்சலி புரியக்கூடியதாக இருக்கின்றது என்றும் ஞானக்கூத்தன் கருத்து வெளியிடுகிறார்.

கீதாஞ்சலியைப் படிக்கும் போது மனது ஒரு விடுதலை உணர்வைப் பெறுகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டுகிறார். மேலும் அந்தப் படைப்பைப் படிக்கும் போது மகிழ்ச்சி ஏற்பட்டு குறுகிய நோக்கங்கள் தகர்ந்துவிடுவதாகவும், இதுபோன்ற காரணங்கள் பலரிடம் இருப்பதாலேயே கீதாஞ்சலி தனிச் சிறப்பு பெறுகிறது என்று தான் கருது வதாகவும் அவர் கூறுகிறார்.

# அமைப்பியலும் அதன் பிறகும் -2

'அமைப்பியல்" இப்படிப் புதிதாகப் போட்ட பாதையைப் புறக்கணித்து விட்டு, பழைய கரடுமுரடான தடத்தில் இருட்டில் நடக்கும் செயலை மேற்கொண்டால் என்ன நடக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். உலக இலக்கியத்தில் (தமிழில் அல்ல) இன்று அறிவியல் கதைகள் புதிய இலக்கிய அறிவைக் கோருகின்றன. புதிய விமர்சனம், புதிய முடிவுகள், புதிய வாசக ஏற்பு போன்றன தேவையாகின்றன. சி.சு. செல்லப்பா, க.நா. சுப்பிரமணியம் போன்ற எவருடைய வழியும் இதற்குப் போதாது. மார்க்ஸியம், மொழியியல், மேற்குலகத் தத்துவ அறிவு இவையெல்லாம் வேண்டும். புதிய சொற்கள் வேண்டும்.

இது போல இன்னொரு துறை, திரைப்படம். தமிழ்ச் சமூகத்துக்கு மிக முக்கியமான துறை. விமர்சனத்தளத்தில் திரைப்படத்தை ஒரு புத்தம்புது துறையாக - ஒரு பார்வைக்கலையாக அல்லது முப்பரிமாணக் கலையாக அறிய அமைப்பியல் வழி பயணம் செய்வது தவிர்க்கவியலாதது. அமைப்பியலையும் தாண்டி இன்னும் மேலே போக வேண்டும்.

இலக்கிய விமர்சனம் என இன்று தமிழில் வந்துகொண்டிருக்கிற கவிதை, நாவல், சிறுகதை விமர்சனத்திலோ, கலை விமர்சனம் என எழுதப்பெறும் அபிப்பிராய உதிர்ப்புக்களிலோ எந்தக் கிளர்ச்சியும் இல்லை. அறிவும் உணர்வும் கலக்கும் புள்ளி சுவாலையாய் அர்த்தங்களைப் புலன்களில் ஏற்படுத்தும் இன்றைய எந்தப் புதுநெறியும் இவற்றில் தென்படுவதில்லை. இவை, எண்பதுகளிலும் தொண்ணூறுகளிலும் முன்வைக்கப்பெற்ற புத்தம்புது தர்க்கங்களை எதிர்கொள்ளாமல் உள்ளன. இப்படி வெறும் மொண்ணையான அசட்டு எழுத்துக்களை, பழங்கால நினைவு ஏக்கங்களாய், சிலர் முன்வைக்கின்றனர். இதைக் கேள்வி கேட்பதற்குக் கூட இங்கு யாருமில்லை என்பதுதான் தமிழின் தனிச்சிறப்பு.

ஆக, திரைப்படம் ஒரு சிறப்பு அறிவுக்கான துறையாக வளர்வது தள்ளிப் போடப்படுகிறது. அறிவியல் இலக்கியத்தின் வளர்ச்சி தமிழில் சரியாகத் தோன்றுவதற்கும் தடை போடப்படுகிறது. புதிய அறிவுப்பரவல்கள், புதிய தோன்றல்கள் ஏற்படுத்தும் சவால்களை அறியும் புதுக்கிளர்ச்சி போன்றன கௌரவிக்கப் பெறவில்லை. புதிதாய் வருவதைக் கண்டு கொள்ளாமையும் மறந்து விடுவதும் கவனமின்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வாழ்வுமுறையும் இதன் விளைவுகள்.

அடுத்ததாக, இரண்டாம் பிரச்னைக்கு வருவோம். அமைப்பியல் போன்ற அறிவுத்துறையில், மரபு ஊக்கம் பெறவில்லை என்னும் குற்றச்சாட்டு இது. இதில் உண்மையில்லை. எண்பதுகள் மற்றும் தொண்ணூறுகளில் இலக்கிய விமர்சனத்தில் தொல்காப்பியம் முக்கியத்துவம் பெற்றதை யாரும் மறுப்பதில்லை. எண்பதுகளுக்கு முன் புதிய இலக்கியம் பற்றிப் பேசியவர்கள் மத்தியில் சம்ஸ்கிருதக் கருத்துக்கள் இருந்து வருவது வழக்கம். அது மாறியது ஒரு பெரிய வரலாற்று முக்கியத்துவமுள்ள செயல். ஏனெனில் சம்ஸ்கிருத மரபுக்கு வெளியில் வைக்கப் பெற்ற சாதிகளைச் சார்ந்தவர்கள் தமிழிலக்கியத்துக்கு வந்ததை இது காட்டுகிறது. எனவே அமைப்பியல் போன்றவற்றைத் தாக்கியவர்களின், மறந்தவர்களின், 'பார்த்தாலும் பார்க்காதது" போலப் பாவனை புரிந்தோரின் சமூக, வரலாற்றுப் பங்கு விளங்குகிறது.

தொல்காப்பியம் அன்றி, பிற தமிழ் இலக்கணங்களின் மரபுக்குள் காணப்பெறும் மொழிக்கொள்கை, அதற்கும் சமஸ்கிருதத்துக்கும் தொடர்புண்டா போன்ற கேள்விகளும் சாயல்களும் தென்பட்டன. தமிழ் நூல்களின் மொழிக்கொள்கைக்கும் அழகியலுக்கும் தொடர்புண்டா? அழகியலை, மொழி - வரையறைப்படுத்தலின் புது



தமிழவன்

எல்லையில் பண்டைத் தமிழர்கள் வைத்தார்களா? இல்லை மொழிக்கு வெளியில் வைத்தார்களா? மொழிக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பென்ன? 'பெர்தினான்ட் தெ சசூர்" சொல்வதற்கு முன்னரே சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு இடுகுறியானது என்று தமிழன் கூறிய அரிய செய்தி, உலகையே வியப்படைய வைக்கக்கூடிய செய்தி, தமிழில் அமுக்கப்பட்டிருப்பது யாரால்? இப்படி எவ்வளவோ தத்துவக் கொடுப்பினைகள் தொண்ணூறுகளில் முன்வைக்கப் பட்டன. இவற்றுடன் தொடர்புடைய தமிழ் அழகியலின் மூலங்களை நோக்கிய பயணம் இன்னொரு தமிழ்ச் சிந்தனை வரலாற்றுச் சாதனை. இதில் தொல்காப்பியம், நன்னூல், புறத்திணை போன்ற நூல்கள் கூறும் மொழித் தத்துவங்கள் மட்டுமன்றி உள்ளுறை, இறைச்சி, புறம் மற்றும் அகம் கூறும் தமிழர்களுக்கே உரிய அப்பாலை - அழகியல் ஆழங்கள் யாவும் தமிழின் இரண்டாயிரமாண்டு வரலாறு காணாத அனைத்துலகச் சிந்தனைக்கூறுகளுடன் தொடர்புடைய சிந்தனைத் தேடல்களாகும்.

திராவிடக் கருத்துருவ வாதிகள் தத்துவத்தை அரசியல் இலாபங்களாய்க் குறுக்கிய ஒரு கட்டத்தில் அவர்களிடமிருந்து ஏதும் பெற முடியாது என்பது தெளிவாயிற்று. எனினும் தமிழ்ச் சிற்றிதழ் மறுமலர்ச்சிக் கூட்டமும் இன்று மீண்டும் சம்ஸ்கிருதக் கருத்துருவத்துக்குத் தன்னுடைய போராட்டத்தை விட்டுக் கொடுத்ததைத்தான் தொண்ணூறுகளில் நடந்தவை காட்டுகின்றன. தமிழின் மறக்கப் பெற்ற பல கருத்தாக்கங்கள் இந்த அமைப்பியல் கட்டத்தில் நடைமுறைக்கு வந்தன. முன்னம் என்னும் சொல், கூற்று என்னும் சொல், ஆகுபெயர், இப்படி எத்தனையோ விலை மதிப்பற்ற தமிழ் மக்கள் பாதுகாத்து வைத்த பொக்கிசங்கள் முதன்முதலாய் தமிழ்த்திறனாய்வு அரங்குக்குள் தலைகாட்டுகின்றன.

இங்கு திருநெல்வேலி - பாளையங்கோட்டையிலிருந்து வந்த 'மேலும்" காலாண்டிதழில் வெளியான பலருடைய கட்டுரைகள், நீலகிரியிலிருந்து வந்த 'மீட்சி" இலக்கிய இதழிலும் மதுரையிலிருந்து வந்த 'புறப்பாடு" என்னும் இதழிலும் வெளிவந்த கட்டுரைகள் மற்றும் தமிழாக்கங்கள் பற்றிய நிலையும் தவிர்க்கவியலாதவை. இதே போல் சிற்றிதழாளர்கள் பலரின் கவனத்துக்கு வராத, அனைத்துலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தாரின் வெளியீடான, 'தமிழும் குறியியலும்" என்னும் என்னுடைய நூலும் கவனிப்புக்குரியது என்பது என் எண்ணம்.

இவை மட்டுமன்றி சம்ஸ்கிருதத்தில் உள்ள, 'பர்த்ருஹரியிடம்" காணப் பெறும் 'ஸ்போட்ட" போன்ற கருத்தாக்கங்களுக்கும் தமிழுக்கும் உள்ள உறவு போன்ற வரலாற்றை முற்றாக மாற்றவல்ல பல கேள்விகள் கேட்கப் பெற்றது யாவும் அமைப்பியலின் மூல பலத்தின் வழியாகத்தான். தமிழும், சம்ஸ்கிருதமும் முற்றிலும் மாறுபட்ட அடிப்படையில் இரு உலகப் பார்வைகளாய் அமைவது, இந்தியாவில் உள்ள பிற மொழி - வரலாற்றுக்கும், நடந்துகொண்டிருக்கும் புதிய தலித் அரசியல் அடிப்படைகளுக்கும் இன்னொரு பரிமாணத்தைச் சூசகமாய்ச் சுட்டுகின்றன. இந்தப்பார்வை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இந்தியாவில் இன்னொரு அறிவுத்தோற்றவியலுக்குக் காரணமாகியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தமிழ்ப் பழம்பாடல்கள், இலக்கணங்கள் வழி மீட்டுருவாக்கம் செய்யப் பெற்ற செவ்வியப் பண்புவழி கிடைத்த, சம்ஸ்கிருதத்துக்குப் புறம்பான இந்திய மரபுத் தேடலுக்குத் தொடர்ந்து ஒரு தேவையுண்டு. இதை மறுக்க முடியாது. இந்தியா முழுவதும் சம்ஸ்கிருத மரபுக்குத் தொடர்பற்ற மரபு ஒன்று உண்டு. அது தமிழ் வழி மீட்டுருவாக்கம் செய்யப்பெறுவது, முழு இந்தியாவுக்கும் ஒரு மாற்று அரசியல் தளத்தை உறுதிசெய்து, தலித் இந்தியா உருவாக வழி அமைப்பதாகும். இதனால் தென்னாசியாவின் தமிழ் அடையாளம், தொடர்ந்து கிளர்ச்சிக்கான, போராட்டத்துக்கான, கெட்டிதட்டிப் போனவற்றுக்கு எதிரான அடையாளமாகவே இருக்கும். அமைப்பியல் தந்த மொழித் தத்துவம் தமிழை இம்மாதிரிப் புதிய அடையாளம் ஒன்றை நோக்கி நகர்த்துகிறது.

(இன்னும் வரும்)

" திரைப்படம் ஒரு சிறப்பு அறிவுக்கான துறையாக வளர்வது தள்ளிப் போடப்படுகிறது. அறிவியல் இலக்கியத்தின் வளர்ச்சி தமிழில் சரியாகத் தோன்றுவதற்கும் தடை போடப்படுகிறது. "

**Private Tutoring**

MATH, PHYSICS, ADVANCE FUNCTION, CALCULUS & VECTOR

ஆகிய பாடங்களை அநுபவம் வாய்ந்த முன்னணி ரீயூசன் ஆசிரியர் "விக்கி மாஸ்ரர்" (பொன்னையா விக்னேஸ்வரன்)

Grade 9, 10, 11, 12 வகுப்புக்களுக்குக் கற்பிக்கின்றார்.

பெற்றோர்களே உங்கள் பிள்ளைகள் அதிகூடிய மதிப்பெண்களைப் பெற நாடுங்கள் விக்கி மாஸ்ரரை!

தொடர்புகட்கு: (416) 994-3782

# ஈழத் தேசிய சினிமா:

## கனவிலிருந்து மெய்மையை நோக்கி - பகுதி 2

யமுனா ராஜேந்திரன்



விடுதலைப் புலிகளின் திரைப்படங்களை இருவகையிலானவர்கள் உருவாக்கினார்கள். போர்க்கால சமூகம் பற்றிய பிரச்சினைகளைச் சித்தரித்த 'காற்றுவெளி" படத்தை தமது சுயாதீனமான பார்வையில் உருவாக்கினார் திரைப்படக் கலையில் ஆளுமை கொண்ட, காலஞ்சென்ற இயக்குனர் ஞானரதன். பிரச்சாரம் என்பது இவரது படங்களில் பின்தள்ளப்பட்டிருப்பதை பார்வையாளன் அவதானிக்க முடியும். 'குருதிச் சன்னங்கள்" பிறிதொருவகை திரைப்படம், விடுதலைப் புலிகளின் போர் பிரச்சாரத்தினது பகுதியாக தொழில்முறையிலான போராளிகளால் உருவாக்கப்பட்ட முழுநீளப் படம்.

விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வத் தொலைக்காட்சியான 'நிதர்சனம்" இந்தத் திரைப்படங்களைத் தயாரித்து வெளியிட்டன. இந்தத் திரைப்படங்களில் பெரும்பாலானவை குறுந்தகடுகளாக உருவாக்கப்பட்டு, தேர்ந்தெடுத்த திரைப்படங்கள் ஐரோப்பிய நாடுகளின் ஈழத் தமிழர்களின் திரைப்பட விற்பனை நிலையங்களிலும் விநியோகிக்கப்பட்டன. தேடித்திரிந்து குறும்படங்களைப் பார்த்தவன் எனும் அளவில், 250 இக்கும் அதிகமான குறும்படங்களை விடுதலைப்புலிகள் உருவாக்கியிருக்கிறார்கள் என என்னால் சொல்ல முடியும்.

**“ஈழப் பிரச்சனையை முன் வைத்து திரைப்படங்களை உரு வாக்குங்கள்” எனத் தனது கோரிக்கையையும் பிரபாகரன் இவர்களிடம் முன் வைத்திருக்கிறார்.**

புரட்சிகரப் படங்களிலும், வட கொரிய மற்றும் சீனப் படங்களுக்கும், ஐரோப்பிய இலத்தீன் அமெரிக்க, ஆப்ரிக்கப் படங்களுக்கும் நம்மால் வித்தியாசத்தைக் காண முடியும். சீன மற்றும் வடகொரியப் படங்கள் உணர்ச்சிவசமான மனோரதியமான படங்களாக இருக்க, ஐரோப்பியர்களதும், ஐரோப்பியர்களால் ஆதர்சம் பெற்ற அல்லது அவர்களால் உதவி வழங்கப்பெற்ற இலத்தீன் அமெரிக்க மற்றும் ஆப்ரிக்கக் கிளர்ச்சிப் படங்கள் யதார்த்தவாதப் பண்பைக் கொண்டிருப்பதையும் நாம் காணவியலும். ஐஸன்ஸ்டீன், ஜெட்டினோ, செம்பேன் ஒஸ்மான் போன்றவர்களது படங்களை மாவோ காலத்திய சீன மற்றும் கிம் இல் சுங் காலத்திய வட கொரிய அணிவகுப்புப் படங்களோடு ஒப்பிட, ஒருவர் இந்த வித்தியாசத்தை உணர முடியும்.

விடுதலைப் புலிகளால் தொழில்முறையிலாக உருவாக்கப்பட்ட படங்கள் சீன, வடகொரிய பாணியோடு, தவிர்க்கவியலாத வகையில் ஹாலிவுட் பாணியையும் இணைத்துக் கொண்ட உணர்ச்சிவசமான, மனோரதியமான சாகசப் படங்களாகவே இருந்தன. திரைப்படக் கலையை உணர்ந்த ஞானரதன் மற்றும் பொ.தாசன் போன்ற ஆளுமைகள் உருவாக்கிய படங்களில் ஐரோப்பிய யதார்த்தவாத சினிமாவின் தாக்கம் இருந்தது. ஹாலிவுட்-இந்திய சாகச சினிமாவுக்கான எடுத்துக்காட்டாக குருதிச் சன்னங்கள் திரைப்படத்தையும், ஐரோப்பிய பாதிப்பிலான யதார்த்தவாத சினிமாவுக்கான எடுத்துக் காட்டாக ஞானரதனின் 'காற்றுவெளி" திரைப்படத்தையும் பொ.தாசனின் 'தமிழோசை" திரைப்படத்தையும் நாம் சுட்டலாம். ஞானரதனின் திரைப்படங்களில் பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவு நெறியின் பாதிப்புகளை நம்மால் உணரமுடியும்.



தமிழ் சாகசத் திரைப்படமும் உணர்ச்சிவசமான மனோரதிய பாணியும் ஈழத் திரைப்படங்களில் மிக மோசமான பாதிப்பை உருவாக்கி இருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக என்னால் சொல்ல முடியும். பாரதிராஜா, ஜான்மகேந்திரன், மகேந்திரன், சீமான் போன்றவர்கள் நேரடியாகப் பிரபாகரனைச் சந்தித்திருக்கிறார்கள். 'ஈழப் பிரச்சனையை முன் வைத்து திரைப்படங்களை உருவாக்குங்கள்" எனத் தனது கோரிக்கையையும் பிரபாகரன் இவர்களிடம் முன் வைத்திருக்கிறார்.

மகேந்திரனின் புதல்வரான ஜான் மகேந்திரன் ஈழப் பின்னணியில் இன்னொரு தமிழகக் காதல் கதையைத் தனது ஆணிவேர் திரைப்படத்தில் கொடுத்திருக்கிறார். மகேந்திரனின் மேற்பார்வையில் பனிச்சமரம் பழுத்திருக்கு எனும் குறும்படத்தை ஈழத்தின் ஆதவன் திரைப்படக் கழக மாணவர்கள் எடுத்திருக்கிறார்கள்.

ஈழப் போராட்டத்தினால் உந்துதல் பெற்றவர்கள் தமிழகத்தில் உருவாக்கிய படங்களும் உணர்ச்சிவசமான சாகசப் படங்கள்தான். சீமானின் தம்பி மற்றும் புகழேந்தியின் 'காற்றுக்கென்ன வேலி" மற்றும் செல்வத்தின் 'ராமேஸ்வரம்" போன்ற திரைப்படங்களை இதற்கான சான்றாகச் சுட்டலாம். சீமானின் தம்பி முன்னும் பின்னுமான வசனங்கள் தவிர எந்தக் கருத்தியல் தரிசனமும் அற்ற ஒரு தாதா படமாகவே இறுதியில் எஞ்சி நின்றது.

தனிப்பட்ட முறையில் பிரபாகரனை ஆகர்சித்த படங்களாக ஹாலிவுட் சாகச நாயகர்களான சுவர்ஸ்நேக்கர் மற்றும் ஸில்வஸ்ட்டர் ஸ்டோன் போன்றவர்களின் படங்களே இருந்திருக்கிறது. ஹாலிவுட் போர்ப் படங்கள் தமிழ் துணைத் தலைப்புக்களுடன் (with tamil subtitles) விடுதலைப்புலிப் போராளிகளுக்கு திரையிட்டுக் காட்டப்பெற்றிருக்கிறது.

ஈழவிடுதலைப் போராட்டம் தென்னிந்திய சினிமாவிலும் தன்னுடைய பாதிப்புக்களை விட்டுச் சென்றிருக்கிறது. விடுதலைப் புலிகள் இயக்கமும் மிகப் பெரும் பாதிப்புக்களை தமிழ் சினிமாவின் மீது ஏற்படுத்தியிருக்கிறது. காற்றுக்கென்ன வேலி திரைப்படம் மிக வெளிப்படையாகவே ஈழப் போராளிகளைப் பற்றிப் பேசியது. ராஜீவ் காந்தியின் படுகொலை தமிழில் 'குற்றப்பத்திரிகை" மற்றும் 'குப்பி", கன்னடத்தில் 'சைனட்", கேரளத்தில் 'மிசன் நைன்டி டேஸ்" (Mission Ninety Days) என நான்கு திரைப்படங்களுக்கான கதைக் களம் ஆகியிருக்கிறது. கன்னத்தை முத்தமிட்டால், தெனாலி, நள தமயந்தி, ராமேஸ்வரம், நந்தா போன்ற திரைப்படங்கள் தமிழகத்தில் அடைக்கலமான ஈழ அகதிகள் பற்றிய திரைப்படங்களாக இருக்கின்றன.

தமிழகத் திரைப்படங்களின் அரசியல் உள்ளடக்கம் எனும் அளவில், விடுதலைப் புலிகளினால் தயாரிக்கப்பட்ட குறிப்பான, நேரடியிலான, ஈழ அரசியல் தன்மைகள் என்பன தமிழகத் திரைப்படங்களில் இல்லை. சிங்களத் திரைப்படங்கள் பிரச்சனைகளை அணுகுகிற யதார்த்தவாத மரபு என்பதும் தமிழகத் திரைப்படங்களில் இல்லை. ஈழப் பிரச்சினை குறித்த தமிழகத் திரைப்படங்களில் இவ்வகையில் வரலாறும், பிரச்சனை குறித்த யதார்த்தச் சித்தரிப்பென்பதும் இயல்பாகவே தவறி விடுகிறது. தமிழகத்தின் உணர்ச்சிகரமான, சாகசமான சினிமாக் கட்டமைப்புக்குள் ஈழப் பிரச்சினை என்பது காணாமல் போயிருக்கிறது என்பதுதான் நிஜம்.

தென்னிந்தியாவில் ஈழப் பிரச்சினை பற்றி வந்த திரைப்படங்களில் அரசியல் நீக்கப்பட்டது என்றாலும் கூட நிகழ்வுகளுக்கு நேர்மையாக இருந்த படம் என கன்னடப்படமான 'சைனட்" படத்தையே நாம் சொல்ல முடியும். சைனட் படத்தில் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட ராஜீவ்காந்தியின் படுகொலையின் பின்னிருந்த அரசியல், மலையாளப் படமான 'மிசன் நைன்டி டேஸ்" வசனங்களில் இடம்பெறுகிறது.

# ஒரு முதுபெண் சொன்ன வாழ்வு பற்றிய பாடம்

வாழ்வின் சஞ்சரிப்பு எல்லைகள் விசாலித்துக்கொண்டே இருக்கின்றன. புவிசார் அறிவுப் புல வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சிகளை இதன் காரணங்களாகக் கொள்ளலாம். வண்டி மாட்டுப் பயணத்திலிருந்து கார், பஸ் பயணங்களாகியமை இதன் ஒரு வெளிப்பாடு. பின்னால் ரயில், விமானப் பயணங்களாக அவை மாற்றங்களைக் கண்டன. சரீரார்த்தமான இச் சஞ்சரிப்புகளும் மாறி, இருந்த இடத்திலிருந்தே பொறிகள் நினைத்த இடமெல்லாம் சஞ்சரித்து வரும் மிகு தொழில்நுட்ப வளர்ச்சிக் காலகட்டத்தை இன்று நாம் வந்தடைந்திருக்கிறோம். பத்தாயிரம் மைல் தொலைவிலுள்ளவருடன் முகம் பார்த்துப் பேச சுலபமாக இன்று முடிந்துவிடுகிறது.

இவ் அகலுலகச் சஞ்சரிப்பில் எதிர்ப்படும் சம்பவங்கள் கணக்கற்றவை. ஆயினும் வாழ்வின் ஆரம்பம் முதல், கனதிபெற்று அகல மறுத்ததாய் மனத்தில் உறைந்துபோக சில சம்பவங்களேனும் இருக்கவே செய்கின்றன. இவ்வாறு நினைவினடுக்கில் படைபடையாய் நிறைந்து கிடக்கும் சம்பவங்கள் ஒரு கோடி இருக்குமோ? இருக்கலாம்.

சம்பவங்கள் நடந்த கணத்தோடு முடிந்து போபவைதாம். ஆனாலும் நினைவுக் குழிக்குள் போய்விடுகிற சம்பவங்கள் தம்முள் மீட்கப்பட்டுக் கொண்டே கிடக்கின்றன. அவை உயிர்த்துக்கொண்டிருக்கின்றன. உயிர்ப்போடிருப்பது மட்டுமில்லை, அவை அசையவும் செய்கின்றன. தம் அடிப் படுகையிலிருந்து நுளுந்தி நுளுந்தி தம் வலுவுக்குத் தக அவை மேலே மேலேயாய் வந்துகொண்டேயிருக்கின்றன.

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் குடியுரிமை பெற்றவராக இருக்க முடியும். தான் பிறந்த நாட்டின் குடியுரிமையை நீங்கி வேறொரு நாட்டின் குடியுரிமையைப் புதிதாய் அடைந்திருக்க முடியும். ஆனாலும் அவரே தான் பிறந்து, வளர்ந்து, கணிசமான ஒரு காலம்வரை வாழ்ந்த மண்ணின் தொடர்பை அத்தனை சுலபத்தில் மாற்றிக்கொண்டுவிட முடியாது. அவரது வாழ்வு அந்த மண்ணிலிருந்தே நினைவுச் சுழிப்புகள்மூலம் தன் ஆதாரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது.

எத்தனை அடுக்குகள் தன் மேல் அடுக்குப்பட்டுக்கொண்டு போனாலும், நினைவுப் படுகையில் கிடக்கும் ஒரு சம்பவம் வாழ்வுக்கு ஆதாரமாகும் அர்த்தத்தை என்றும் இழந்து போவதில்லை. என்றோ ஒரு தருணத்தில் நிலம் கிழித்துக் கிளரும் புல்போல் தன்னின் இருப்புக்காட்டி மேலெழும்பவே செய்கின்றது.

கழிந்தன எத்தனை ஆண்டுகள்! படர்ந்தவை எத்தனை நாடுகள்!

> “ யார் வந்தாலும் வராவிட்டாலும் திங்கள் முதல் வெள்ளிவரை காலை பத்தரை மணியிலிருந்து மதியம் இரண்டு மணிவரை அரசம்மாவை அந்த இடத்தில் பார்க்கத் தவறமுடியாது. ”

இருந்தும் ஏன் இன்னும்தான் இந்த அமைதியின்மை? ஏன் இந்த வாழ்வில் இத்தனை அவசரம்? இன்னும்தான் ஏன் வாழ்க்கையின் இத்தனை நோவு நொம்பலங்கள்? வாழ்க்கையை விற்று சுகங்கள் வாங்கியதின் அபலங்கள்தானா இவை?

கேள்விகள் என்னுள்ளாய்க் கிளரத் தொடங்கியிருக்கின்றன. அவ்வப்போது வந்து யோசனைகளில் குறுக்கிடுகின்றன. விடை இலகுவில் கிடைத்து விடக்கூடிய கேள்விகள் இல்லையெனினும் மனம் ஓர் அசுர முயற்சியில் இவற்றுக்கான விடைக்காய் உந்திக்கொண்டே இருக்கிறது.

அப்படியான ஒரு நாளில் என் ஞாபக அடுக்குகளிலிருந்து மேலே நுளுந்தி வந்த சம்பவமொன்று முக்கியமானது. என் உந்துதலின் விசை சட்டென அறுந்தது. தொடர்ந்து பத்தாய், நூறாய் ஞாபக அலைகள். அத் திரை விரிப்பில் தன் சிரித்த முகம் காட்டி வெளிவந்தாள் கடலையாச்சி.

திடுக்காட்டத்தோடுதான் அந்த நினைவை என்னால் அசைபோட முடிந்தது. என் ஆறு அல்லது ஏழு வயதிலிருந்து தொடர்ந்தேர்ச்சியாக ஓரிரு வருகூஷங்களில் மட்டுமே நான் கண்டிருந்த அந்த முதுபெண், இத்தனை காலம் என் நினைவடுக்கில் இருந்ததையே நான் தெரிந்திருக்கவில்லை. அவள் என் நினைவடுக்கில் போக எந்த முகாந்திரமும்தான் இல்லை. ஒரு கடலைக்காரியின் நடையும், இருப்பும், அசைவும், சிரிப்பும் ஒரு தேச சஞ்சாரியின் நினைவடுக்கில் இத்தனை காலமாய் இருந்திருப்பது சாத்தியமா என்ற கேள்விகூட என்னுள் விடைத்தெழுந்து நின்றது.

அவள் பெயர் அரசம்மா என்பதாக ஒரு ஞாபகம். எங்கள் பள்ளிக்கூட வாசலிலிருந்து கடலை விற்றுக்கொண்டிருந்த ஒரு கடலைக்காரியாகத்தான் அவளை நான் முதன் முதலில் பார்த்தேன். அதற்குப் பிறகும் அதற்குமேல் அவள் இல்லைத்தான்.

எங்கள் பள்ளிக்கூட வளவு ஒரு தலைகீழ் முக்கோண வடிவில் இருந்



- தேவகாந்தன் -

திருந்தது. அதன் முன்முனையில் ஒரு நெடுந்தெரு. மாட்டுவண்டிகளும், சைக்கிள்களும், எப்போதாவது இருந்துவிட்டு ஓரிரு லொறிகளும் ஓடும் அதில். கடசார்க் கற்கள் பாவியிருந்தன. முன்முனையிலிருந்து வல துகைக் கோணத்தை ஒட்டியதாக ஒரு வாய்க்கால். அதில் மாரி வெள்ளம் அடித்தோடும் வேளை, அதைத்தான் நான் ஆறு என நினைத்திருந்தேன் அந்தக் காலத்தில். இடதுகைக் கோணமாக ஒரு மண் தெரு. மண்தெருப் பக்கமாக பள்ளிக்கூட வாசல்.

வாசலில் ஒரு பாலைமரம் இருந்தது. தினமும் அந்த இடத்தில்தான் எனது தந்தை என்னை சைக்கிளில் ஏற்றி வந்து இறக்கிவிடுவதும், மறுபடி ஏற்றிச் செல்வதும்.

பாலை மரம் பெரிதாக என்ன நிழலைச் செய்துவிடும்? அந்த நிழல் தரா உயர் பாலை மரத்தின் கீழ் கடலை விற்றுக்கொண்டிருப்பாள் அரசம்மா. கொளுத்தும் வெய்யிலுக்கு தலையில் முக்காடு போட்டுக் கொண்டு விரித்த சாக்கில் கால்நீட்டி அமர்ந்தபடி ஒரு வட்டச் சுளகு, சிறிய ஓலைக் கடகம், சில கடதாசிகள் மட்டுமுடனாக வியாபாரத்தை நடத்திக் கொண்டிருப்பாள்.

சின்ன லீசர் எனப்படும் பத்தரை மணி இடைவேளையிலிருந்து அவளை அந்த இடத்தில் பார்க்கமுடியும். மத்தியான இடைவேளைக்கு தும்பு முட்டாசுக்காரன், பம்பாய் மிட்டாய் விற்பவன், கொய்யாப்பழம் பச்சை மாங்காய்க் கீறுகள் விற்பவள் என்று வேறுசிலரையும் பார்க்கமுடியும்தான். ஆனாலும், யார் வந்தாலும் வராவிட்டாலும் திங்கள் முதல் வெள்ளிவரை காலை பத்தரை மணியிலிருந்து மதியம் இரண்டு மணிவரை அரசம்மாவை அந்த இடத்தில் பார்க்கத் தவறமுடியாது.

மேசன் வேலையில் நிறைந்த சுயாதீனம் இருந்தது. அதனால் காலையில் வேலைக்குச் செல்லுகையில் கொண்டுவந்து விட்டுச் செல்லும் தந்தைக்கு, பள்ளி முடிந்ததும் வந்து என்னைக் கூட்டிப்போய் மறுபடி வீட்டில்விட வசதியிருந்தது. நான் முதலாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த காலத்தில் அரிவரி வகுப்புக்கு பன்னிரண்டு மணியோடு பள்ளி முடியும். முதலாம் வகுப்பிலிருந்து அய்ந்தாம் வகுப்புவரை அது ஒன்றரை மணியாகவிருந்தது. எட்டாம் வகுப்புவரை மட்டுமேயிருந்த எமது பள்ளிக்கூடம் மாலை மூன்றே முக்காலுக்கு முடிந்தது.

ஒன்றரை மணிக்கு எனக்கு பள்ளி முடிகிறபோது அதிகமாக எனது தந்தை சைக்கிளோடு பள்ளி வாசலில் நின்றுகொண்டிருப்பார். சில வேளைகளில் பள்ளி முடிந்து நான் வெளியே வருகிறவேளை வேகமாக சைக்கிளை உழக்கிக்கொண்டு வந்து சேர்வார். சிலவேளைகளில்தான் தாமதமாவது. நான் அந்த நேரங்களில் அவதிப்பட்டுப்போவேன். பிள்ளை பிடிக்கிற காப்பிலிகள் ஊரிலே அங்கங்கு அலைவதாகப் பேச்சிருந்த அந்த நாளில், ஒரு காப்பிலியைக் கண்ணாலே கண்டிராதபோதும்தான், காப்பிலியை எண்ணி நான் அதீத பயங்கொண்டிருந்தேன். பேயையே கண்டிராதபோதும் பேய்ப் பயம் கொண்டிருப்பதுபோல அது.

அந்த சிலவேளைகளின் தாமதத்தில் எழும் எனது அச்சங்களைத் தவிர்ப்பதற்காகவே, கடலையாச் சியிடம்

என்னைப் பார்த்துக்கொள்ள தந்தை சொல்லி வைத்திருந்தார். தினமும் அதிலே இருக் கிற ஒரு பெண் என் றில்லாமல், அவர்களுக்கு குடும்ப ரதியாகவே அறிமுகமிருந்ததை அவர்களது பேச்சில் நான் அறிய முடிந்திருந்தது. அதனால் தந்தை என்னைக் கூட்டிச்செல்லத் தாமதமாகும் நாட்களில் கடலையாச்சி என்னை அழைத்து பக்கத்தில் இருக்க வைத்துக் கொள்வாள்.

அவளிடம் ஒரு அடுக்குப் பெட்டியி ருந்தது. அதன் மேல் தட்டில் பிஞ்சுப் பாக்கு, நாறல் பாக்கு, பச்சையம் இன்னும் அழியாத சில வெற்றிலைக் கீறுகள், சிறிய சுண்ணாம்புப் போத்த லொன்று இத்தியாதிகள். கீழ் அடுக்கு களில்தான் அவள் காசு போட்டு வைப்பாள். ஒரு அடுக்கில் அரைச் சதம், இன்னொன்றில் ஒரு சதம், மற்ற அடுக்கில் இரண்டு சதம், கடைசியாக ஐந்து சதம். ஐந்து சத கையா எலுக்குமேல் அவளது வியாபரம் இருப்ப தில்லை. பத்துச் சதம் பெரிய காசு. எந்தப் பள்ளிக்கூடப் பிள்ளையும் பத்துச் சதத்தைக் கொண்டு கடலை வாங்க வந்துவிட முடியாது. அருகிலிருக்கும்போது அவள் வியாபாரம் செய்யும்



முறையையும், அவ ளது ஆகிருதியையும் நான் ஆவலா தியோடு கண்டுகளித்திருக்கிறேன்.

அவள் ஒரு சின்ன மனிதி. இன்று நினைத்துப் பார்க்கிறபோது அவள் நாலடிக்கு மேல் இருந்திருக்க முடியாதென்றே தெரிகிறது. உருவமும் சிறிய வார்ப்புத்தான். அவள் குறுக்குக் கட்டு கட்டியிருப்பாள், ஊரிலுள்ள அநேகமான ஆச்சிகளையும் போலவே. அவளது தோல் மெல்லிய சுருக்கங்கள் கண்டிருந்தது. தலைமயிர் நரையிழைகள் பறந்து கொண்டிருந்தாலும், கருமையாகத்தான் இருந்த தாகவே இப்போது நினைவில் படர்கிறது. அவள் கால்நீட்டி சிறிது முன்வளைந்து இருப்பது பார்க்க நன்றாக இருக்கும். எவரையும் அணுகத் தயாராய் இருப்பதான ஸ்திதி அது.

சொல்லப்போனால் அந்த உருவத்தில் நான் அருவருப்பே அடைந்திருக்கவேண்டும். 'எல்லாத்தி லையும் நுணுக்கம் பார்த்துக்கொண்டிரு' என்று அம்மாவிடம் திட்டுவாங்குகிற எனக்கு, அந்த உணர்வுதான் இயல்பானது. ஆனாலும் அதை நான் அடைந்துவிடாதபடி அவளிடமிருந்த ஏதோ-வொன்று செய்துகொண்டிருந்தது. அவளது எந்த நேரமும் சிரிப்பதுபோல் தோன்றிக்கொண்டிருக்கும் முகமா, அல்லது அரைச் சதமும் இல்லாமல் வந்து சுளகில் கொட்டிவைத்திருக்கும் கச்சான், சோழம், கொண்டல் இவைகளின் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறக் கும்பங்களைப் பார்த்து ஏங்கிநிற்கும் சிறுவர்களைக் கண்டு அவ்வப்போது கொஞ்ச சோழன் பொரிகளை எடுத்துக் கொடுக் கும் அந்தக் கருணையா, அல்லது 'நாளைக்குத் தாறன், ஆச்சி. ஒருசாத்துக்கு கடலை தா' என்று வரும் சிறுவர்களைக்கூட நோகாமல் 'போ, நாளைக்கு ஒருசாத்தைக் கொண்டுவா, தாறன்' என்கையில் கோபம் வெறுப்பு அலுப்பு என எதுவுமே தோன்றாதிருக்கும் குரலிலா என்று அப்போது எனக்குத் தெரியவில்லை. இவை எல்லா மேதான் அதற்குக் காரணமாக இருந்திருக்கு மென்று இப்போது தோன்றுகிறது.

ஒருநாளில் சராசரியாக அவளுக்கு இருபத்தைந்து சதத்துக்கு வியாபாரம் நடக்கக்கூடும். மிக அதிக மாக ஏதாவது விசேஷமான நாளில் அரை ரூபா வுக்கு நடக்கலாம். இருந்தும் அவ்வளவு நிறை வோடு தன் அந்திமகாலத்தை அப்படிச் சிரித்துக் கொண்டே கழிக்க அவளால் எப்படி முடிந்தது? நோயென்று ஒருநாள் அவள் பாயிலே படுத்திருப் பாளாவென்று எனக்குச் சந்தேகம். இயங்குகை யிலும் தண்டுதரமாய்த்தான் நடந்து திரிந்திருக்கி றாள். இவையெல்லாம் எந்த மூலத்திலிருந்து சுழிப்பெடுத்தன?

அவள் அறிந்த உலகம் கிழமைக்கு ஒருமுறை சந்தையென்றும், எப்போதாவது கோயிலென்றும், திங்கள் முதல் வெள்ளிவரை பள்ளிக்கூட வாச லென்றும் மட்டுமே இருந்திருக்க முடியும். நாடுகள் கண்டு, நாட்டுக் குடியுரிமைகள் மாறி நவீன தொழில் நுட்பம் தந்திருக்கும் வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருக்கும் எனக்கு அவளது சிரிப்பு, கருணை, நிறைவுகள் ஏன் எட்டாது போயின? எண்பது வயதில் அரசம்மா செத்துப்போன-தாக அம்மா அப்போது பேசிக்கொண்டாள். அந்த வயதுவரை அவள் கொண்டிருந்த தண்டுதரம் என்ன, அவள் வயதினை எட்ட இன்னும் சில சகாப்தங்களைக் கடக்க வேண்டியிருக்கும் நான் ரத்தக் கொதிப்பு என்றும், சர்க்கரை வியாதியென் றும் அலைந்துகொண்டிருக்கும் மர்மம் என்ன?

அவள் சோர்ந்திருந்து நான் கண்டதில்லை. சிரிப் பற்ற அவள் முகத்தை நான் கற்பனைகூடச் செய்ய முடியாது. அவள் தன் காதின் பொன் னிலோ வெள்ளியிலோ பொதிந்த சிவப்புக் கல்லுத் தோட்டினை எந்த நாளும் விளக்கித்தான் அணி வாளோ? எந்நேரமும் ஜொலித்துக்கொண்டேயி ருக்கும் கல்லுகள் அவை. அவைபோலவேதான் எந்நாளும் சிரிக்கும் முகமுடையவளாய் இருந்தாள் அவள். அந்தச் சிரிப்பை நான் இன்று ஏக்கத்தோடு நினைத்துக்கொண்டிருக்கிறேன். நான் காணமட்டும் செய்து, அனுபவித்திராத சிரிப்பாக இருந்தது அது.


பள்ளி வாசலின் பாலை மரத்தையே ஒரு போதி மரமாகக்கொண்டு, புத்தனாயோ சித்தனாயோ இல் லாமல் சம்சாரியாக இருந்துகொண்டே எனக்கு ஞானபோதம் செய்துவிட்டுப் போயிருக்கிறாள் அரசம்மா. 'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்றிருக்கிறான் புத்தன். 'ஒருவன் எந்த ஆசையிலி ருந்து விடுபடுகிறானோ அவன் அதிலிருந்து அடையக்கூடிய துன்பங்களிலிருந்தும் நீங்குகிறான்' என்கிறது திருக்குறள்.

எல்லாம் படித்ததுதான். என்ன பிரயோசனம்? யோசிக்க வைக்கவில்லையே. ஆனால் கடலை யாச்சி தன் நிறைவினதும் சிரிப்பினதும் அர்த் தத்தை நினைவிலிருந்து கிளம்பியெழுந்து வந்து சொன்ன பிறகுதான் உணர முடிந்திருக்கிறது என்னால்.

அவசரமான இந்த உலகத்தில் நாம் அவதியுடன் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தேவைகளுடனன்றி ஆசைகளுடன் வாழப் பழகிக்கொண்டிருக்கிறோம். நாம் மயங்கத் தயாரென்று பச்சைக்கொடி காட்டி யாகி விட்டது. இந்த மயக்கத்தின் பலஹீனத்திலி ருந்தே அரசியல், பொருளாதார, சமூக, இலக் கியக் கொள்கை சித்தாந்தங்கள் எல்லாம் பிறப்பெ டுத்திருக்கின்றன. நம் வாழ்வின் அழுத்தங்கள் மையங்கொண்டிருக்கின்ற இடம் இதுதான். ✹


**Morningside / Old Finch**
சந்திப்புக்கு அருகாமையில்
Basement வீடு வாடகைக்கு
உண்டு. Close to TTC & School
**416-286-6489**

"மே 18"
முடிவல்ல புதிய தொடக்கம்
மே 18ஐ நினைவு கூறும் முகமாக
பொதுக்கூட்டமும் கலந்துரையாடலும்
அனைவரையும் அழைக்கின்றோம்
இடம்:
2467 EGLINTON AVE East
MID SCARBOROUGH
COMMUNNITY CENTER
Kennedy Subway க்கு அருகாமையில்
காலம்: மே 22 (சனிக்கிழமை) மாலை 5:30
May 22 (Saturday) 5:30 pm
- மே 18 இயக்கம்

Grade 1 to 10
Home Work Help
Private Tution
Home Visiting

**THUVARAGA**
**416.298.7132**

# வணங்குவதற்கு ஒரு மண்

புறநானூறில் ஒரு பாடல் உள்ளது. குறுங்கோழியூர் கிழார் சேரமானைப் பார்த்து பாடியது. ‘உன்னுடைய மண்ணை கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமே உண்ணுவர். எதிரிகள் உண்ண முடியாது.” பழந்தமிழர் சொந்த மண்ணை மாற்றான் அபக ரிக்காமல் பாதுகாப்பதற்காகப் போர் புரிந்தார்கள். அதுவே ஒரு வாழ்வு முறையாக அமைந்தது. மண்ணுக் காகப் போர்புரிந்து மரித்த வீரர்க ளுக்கு நடுகல் எழுப்பி அவர்களை வழிபடுவது தமிழர் பண்பாடாகியது.

அமெரிக்காவின் தலைநகரமான வாசிங்டனுக்கு சமீபத்தில் போயி ருந்தேன். ஆப்பிரஹாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது ஆர் லிங்டனில் போரில் இறந்த வீரர்க ளுக்காக ஒரு பிரம்மாண்டமான மயானத்தை அமைத்தார். அதிலே உள்நாட்டுப்போரில் தொடங்கி இன்று ஆப்கானிஸ்தான், ஈராக்கு போன்ற நாடுகள்வரை மரிக்கும் அமெரிக்க வீரர்களை அடக்கம் செய்கிறார்கள். இன்றைக்கு அங்கே 300,000 நடுகல்கள் உள்ளன. வருடா வருடம் மயானத்தில் பெரும் அணிவகுப்பும் மரியாதையும் நடக் கிறது. அத்துடன் பெயர் தெரியாமல் இறந்த வீரர்களுக்கான நினைவு மண்டபமும் ஒன்றிருக்கிறது. வருடத் தில் 365 நாட்களும், இருபத்திநாலு மணிநேரமும் வீரர்கள் காவல் காக் கிறார்கள். தினமும் ஆயிரக்கணக் கானவர்கள் அங்கே நடக்கும் அணி வகுப்பை பார்வையிடுவதற்காக வருகிறார்கள்.

அமெரிக்காவில் மாத்திரமல்ல கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் போரில் இறந்து போன வீரர்களின் சமாதிகளில் வரு டாவருடம் மரியாதை நடக்கிறது. ஐரோப்பாவில் பல நாடுகள் வருடத் தில் ஒருநாளை மரித்தவர்களுக்காக ஒதுக்கிவைத்து அந்த நாளில் மயா னங்களுக்கு சென்று இறந்தவர்க ளின் கல்லறைகளை சுத்தம் செய்து

**அ.முத்துலிங்கம்**

பூச்செண்டு வைத்து வழிபடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றன. மாமன் னன் நெப்போலியன் இறந்து பல வருடங்களுக்கு பின்னர் அவன் உடல் பிரான்சுக்கு கொண்டு வரப் பட்டது. அவன் ஞாபகமாக ஒரு ஸ்தூபி எழுப்பட்டு அதற்கு மக்கள் மரியாதை செய்கிறார்கள். ஆப்பிரிக் காவிலே இறந்துபோனவர்கள் எல் லாம் தெய்வம்தான். மூதாதை வழி பாடு அவர்களுக்கு முக்கியமானது. இறந்த போர்வீரர்களுக்கான மரியா தை இன்னும் முக்கியம் பெறுகிறது.

1919ம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலா படுகொலை எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். மைக்கேல் டையர் என்பவர்தான் அப்போது பஞ்சாப் கவர்னராக இருந்தவன். அந்தப் படுகொலையில் 400 நிரபராதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். மைகேல் டையர் அந்தக் கொலைகளுக்கு ஆணை கொடுத்தது மட்டுமல்லா மல் அவன் அவற்றை சரி என்று நியாயப்படுத்தியவன். கொலை நடந்த இடத்தில் சனங்களுக்கு தண்ணீர் பரிமாறியவன் உத்தம் சிங். துடிதுடித்து வீழ்ந்து மடிந்த சனங்களை கண்களால் பார்த்த வன். அவன் அந்த இடத்து மண்ணை அள்ளி சட்டைப்பையில் வைத்துக் கொண்டு டையரை பழி வாங்குவ தற்காக இங்கிலாந்துக்கு புறப்பட் டான். அங்கே 21 வருடங்களாக அவனைத் தேடி கடைசியில் காக்ஸ் டன் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடை பெற்றபோது அங்கே பேசவந்த டையரை சுட்டு வீழ்த்தினான். காந்தி அவன் செய்த கொலையை கண்டித்தார். உத்தம் சிங்கை 1940ம் வருடம் இங்கிலாந்தில் தூக்கில் போட்டார்கள். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் 1974ல் அவனுடைய எச்சங்களை கொண்டு வந்து இந்திய அரசின் ஆதரவோடு எரித்து கங்கையில் கரைத்தார்கள். அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அந்த நிகழ்ச்சியில் கலந்து மரி யாதை செய்தார். இன்றும் உத்தம் சிங்கின் நினைவுச் சின்னத்தை பஞ் சாபில் மக்கள் வழிபடுகிறார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரேயே இலங்கையில் அநுராதபுரத்தில் தமிழ் மன்னன் எல்லாளனின் நீதி யான அரசாட்சி நடந்தது. அவனு டைய ராச்சியத்தை கைப்பற்ற சிங்கள அரசனான துட்டகைமுனு போர் தொடுத்தான். அந்தப் போர் முன்னெப்பொழுதும் கண்டிராதமா திரி உக்கிரமானதாகவும் கொடூர மானதாகவும் இருந்தது. அந்தச் சமரை மஹாவம்சம் ‘குளத்திலி ருந்த நீர் எல்லாம் ரத்தச் சிவப்பாக மாறியது’ என்று வர்ணிக்கிறது. போரில் துட்டகைமுனு வென்றான் எல்லாளன் இறந்துபோனான். எல்லாளன் மக்களால் போற்றப்பட்ட தமிழ் மன்னனாகையால் அவன் விழுந்த இடத்தில் துட்டகைமுனு அவன் நினைவாக மண்டபம் எழுப்பினான். அந்த இடத்தை தாண்டும்போது மரியாதை செய்ய வேண்டும் என்றும் வாத்தியங்கள் மௌனிக்கப்படவேண்டும் என்று சட்டம் இயற்றினான். அந்தச் சட்டம் பல நூறு ஆண்டுகள் மக்களால் மதிக்கப்பட்டது.

எந்த ஒரு போரிலும் உயிர் நீத்தவர் களுக்கு மரியாதை செய்வதுதான் உயர் பண்பாளர்களின் கடமை. ஆனால் இன்று ஈழத்து போரில் இறந்துபோன வீரர்களின் நடுகல் கள் அழிக்கப்படுகின்றன என்று வருகின்ற செய்தி நம்ப முடியாத தாக இருக்கிறது.

புறநானூறில் மாங்குடி கிழார் இப்படி சொல்கிறார். மலர்களில் குரவம், தளவம், குருந்தம், முல்லை என்று நான்கு வகை உள்ளன. உணவில் வரகு, தினை, கொள், அவரை என்று நான்கு வகை இருக்கின்றன. குடிகளிலும் நான்கு வகை. ஆனால் தொழுவதற்கு எங்களுக்கு தெய்வம் ஒன்றுதான். அது இறந்துபோன வீரனின் நடுகல். இன்றோ எமக்கு தெய்வமில்லை.நடுகல் இல்லை. ஒரு மண்ணும் இல்லை.

> “ கொலை நடந்த இடத்தில் சனங்களுக்கு தண்ணீர் பரிமாறியவன் உத்தம் சிங். துடிதுடித்து வீழ்ந்து மடிந்த சனங்களை கண்களால் பார்த்தவன். அவன் அந்த இடத்து மண்ணை அள்ளி சட்டைப்பையில் வைத்துக் கொண்டு டையரை பழி வாங்குவதற்காக இங்கிலாந்துக்கு புறப்பட்டான். ”

## கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆதரவுடன் நூல்கள் வெளியீடு

### கனி விமலநாதனின் இரண்டு அரிய நூல்களின் வெளியீடு

இந்தியா, இலங்கை, இங்கிலாந்து கனடா போன்ற நாடுகளில் நல்ல வரவேற்பைப் பெற்ற வேற்றுக் கிரக மனிதர்கள், இனம் தெரியாத பறக்கும் தட்டுகள், பிரபஞ்சம் பற்றிய வியப்பான செய்திகள் போன்ற நூல்களைத் தந்த கனி விமலநாதனின் அடுத்த இரண்டு பெறுமதியான நூல்களின் வெளியீடு.

*1) புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விடயங்கள் புவியீர்ப்பு என்றால் என்ன? விசையா? அல்லது விளைவா? நியூட்டனின் பார்வையில் புவியீர்ப்பும், புவி யீர்ப்புக்கான அயன்ஸ்ரைனின் விளக்கமும். பல அறிஞர்களின் பாராட்டு தல்களைப் பெற்ற நூல்.*

*2) வியத்தகு விண்மீன்கள்*

இருண்ட வானில் மின்னும் விண்மீன்கள் எதனால் ஆனவை? எப்படித் தோன்றியவை? எவ்வளவு காலத்திற்கு ஒளியை உமிழக் கூடியன? எவ்விதம் இவை இறந்து போகின்றன? இவை காட்டும் மாயங்கள் என்ன? இது போன்ற பல வினாக்களுக்கு எளிமையாக விடையளிக்கும் அற்புதமான நூல்

“விளம்பரம்” பத்திரிகையில் விண்வெளி பற்றித் தொடர்ந்து எழுதிவரும் கன- யின் இந்த நூல்களின் வெளியீடு, மே மாதம் 24ம் திகதி, திங்கட் கிழமை, ஸ்காபரோ. சிவிக் சென்ரரில் மாலை 5 மணிமுதல் 8 மணிவரையில் நடை- பெறவுள்ளது. யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின் றார்கள்!

இந்நூல்களை வாசித்திறிவதற்கு விஞ்ஞான அறிவு தேவையில்லை! தரம்11, 12ல் கல்வி கற்கும் உங்கள் பிள்ளைகளுக்குக் கூட நீங்கள் பௌதீகப் பாடத்திற்கு இந்நூல்களின் உதவியுடன் உதவி செய்யலாம்.

சிறுகதை

# குழையல்

நான் சின்ன வயதாயிருந்தபோது அம்மா சமைப்பதை பார்த்திருக்கிறேன். தினமும் பத்து பேருக்கு அவர் சமைப்பார். கிணற்றடியிலிருந்து தண்ணீர் அள்ளுவதிலிருந்து சமைப்பதற்கு விறகு பொறுக்குவதுவரை எல்லாம் அவர்தான் செய்யவேண்டும். காலை ஐந்து மணிக்கு அடுப்பு மூட்டினார் என்றால் இரவு பத்துமணிக்கு படுக்கப்போகும் வரை அது எரிந்துகொண்டே இருக்கும். அவ்வளவு நேரமும் அம்மா அடுக்களையில்தான். காலை உணவு, மதிய உணவு, மாலை பலகாரம், பின்னர் இரவு உணவு என்று மாறி மாறி ஒரு தொழிற்சாலைபோல அங்கே உணவு உற்பத்திதான்.

ஒருநாள் அம்மாவுக்கு காலையில் எழும்போதே தலைச்சுற்றல் காய்ச்சல் எல்லாம் இருந்தது. ஆனாலும் ஏதாவது வேகமாகச் சமைத்துவிட்டு படுக்கவேண்டும். அவர் ஒரு காரியம் செய்தார். அங்கே கிடந்த காய்கறிகள், பருப்பு, கீரை எல்லாத்தையும் ஒன்றாக்கி அரிசியுடன் சேர்த்து சமைத்தார். தேவையான உப்பு, புளி, உறைப்பு சேர்க்கத் தவறவில்லை. வெந்ததை இறக்கிவைத்துவிட்டு அம்மா படுக்கப் போய்விட்டார். அன்றைய வேலை அவருக்கு ஒரு மணி நேரத்தில் முடிந்துவிட்டது.

மதியம் நாங்கள் பசியுடன் வந்து நாங்களாகவே தட்டில்போட்டு சாப்பிட்டபோது அது அற்புதமான ருசியுடன் இருந்தது. இதற்கு என்ன பெயர் என்று கேட்டபோது அம்மா குழையல் என்று தானாகவே ஒரு பெயரைச் சூட்டினார். எத்தனையோ தடவை அதற்கு பின்னர் அம்மாவை குழையல் செய்யச் சொல்லி நாங்கள் தொந்திரவு செய்தோம். ஆனால் அம்மா மறுத்துவிட்டார். அதி காலையிலிருந்து இரவு படுக்கப்போகும் வரை அடுக்களையே கதியாகக் கிடந்தார். ஒரு மணி நேரத்தில் முடிந்துவிடும் சமையல் தன்னுடைய தொழில் நேர்த்திக்கு ஏற்ற சவால் இல்லை என்று நினைத்தாரோ என்னவோ. எப்போவாவது படுக்கையில் விழுந்தால்தான் மறுபடியும் செய்வார் போலும் என்று நாங்களும் விட்டுவிட்டோம்.

ஒருமுறை எங்கள் வீட்டுக்கு பறங்கியர் ஒருவர் விருந்துக்கு வந்தது ஞாபகமிருக்கிறது. அவர் தெற்கிலிருந்து தேயிலை விற்பதற்கு வந்தவர் எப்படியோ அப்பாவுடன் நண்பராகி வீட்டுக்கு வந்திருந்தார். அம்மா தலை வாழை இலை விரித்து அதிலே சோறும் பலவிதமான கறிவகைகளும் பரிமாறினார். நாங்கள் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டும், அம்மாவின் முந்தானையை பற்றிக் கொண்டும், கதவு நிலையை தொட்டுக்கொண்டும் விருந்தாளியை சுற்றி நின்று அவர் உண்பதை புதினம் பார்த்தோம். அவருக்கு எங்கள் உணவை எப்படி உண்பதென்றே தெரியவில்லை. ஒரு கரண்டி கேட்டார். அம்மா மருந்துக்காக வைத்திருந்த ஒரேயொரு கரண்டியை எடுத்து நன்றாக துடைத்து விட்டுக் கொடுத்தார். அவர் கரண்டியை வேல்பிடிப்பதுபோல சிறிது நேரம் செங்குத்தாக பிடித்துக் கொண்டு ஆலோசித்தார். பின்னர் கிழக்கிலிருந்து மேற்காக ஒவ்வொரு கறியாக அள்ளி வாயில் வைத்தார். ஒரு கரண்டி சோற்றையும் அள்ளி வாயிலே நுழைத்தார். இப்படியே தொடர்ந்தது. அவருக்கு சோற்றை குழைத்து உண்ணத் தெரியாதது எங்களுக்கு பெரும் வேடிக்கையாக அன்று பட்டது.

நான் கொழும்பில் படித்த காலத்தில் எனக்கு ஒரு நண்பர் இருந்தார். அரசாங்க திணைக்களம் ஒன்றில் எழுத்தராக பணி புரிந்தவர். வெள்ளவத்தையில் தனி அறை எடுத்து தானே சமைத்து சாப்பிட்டுவந்தார். ஒரு ஞாயிறு மதியம் இவரும் நானும் சஃபையர் தியேட்டரில் ஓடிய மாயா பஜார் படத்தை பார்ப்பதற்கு திட்டமிட்டோம். படம் இரண்டு மணிக்கு ஆரம்பம். நான் இவரைத் தேடி அறைக்கு போனபோது ஒரு அலுமினியத் தட்டில் அவர் உணவைப் பரிமாறிவிட்டு அதை உண்ணாமல் அருவருப்பாக பார்த்துக்கொண்டே இருந்தார். அது தண்ணீரில் தளும்பி மஞ்சள் நிறமாக காய்கறிகள் சோறு எல்லாம் சேர்த்து அவித்த குவியலாக இருந்தது. முதல் பார்வையில் அது சாப்பிடப்போகும் உணவா அல்லது வயிற்றுக்குள் போய் திரும்பி வந்ததா என்பது தெரியவில்லை. என்ன விசயம் என்றேன். தனக்கு சமைக்க நேரம் கிடைக்கவில்லை என்றும் தான் எல்லாத்தையும் ஒன்றாகப் போட்டு அவித்ததாகவும், வாயில் வைக்க முடியவில்லை என்றும் மனைவிமேல் குறைபட்டுக்கொள்வது போல புலம்பினார். படத்துக்கு நேரமாகிவிட்டதால் அவர் அன்று சாப்பிடாமலேயே என்னுடன் புறப்பட்டு வந்தார். படத்தில் கடோத்கஜன் வேடத்தில் நடித்த ரங்கராவ் கண்டசாலாவின் இரவல் குரலில் 'கல்யாண சமையல் சாதம் காய்கறிகளும் பிரமாதம்' என்று பாடினார். என் நண்பர் அந்த சமயம் பசியில் பெரும் வேதனை அனுபவித்திருக்கக் கூடும் என்பதை நான் அப்போது நினைத்துப் பார்க்கவில்லை.

நான் வெளிநாடுகளுக்கு பயணம் செய்தபோது பல நாட்டு உணவுப் பழக்கங்களையும் அவதானிக்க முடிந்தது. வெள்ளைக்காரர்கள் சூப்பை கரண்டியினால் குடித்தார்கள். வேக வைக்காத கீரையை அள்ளி உண்டார்கள். அரைப்பதமாக வாட்டிய மாட்டிறைச்சியை வெட்டி வெட்டி சாப்பிட்டார்கள். உணவை குழைத்து உண்பதென்ற வழக்கம் அவர்களிடம் கிடையாது. பல நாடுகளில் ரொட்டியை பிய்த்து பிய்த்துகறிக்குழம்புடன் தொட்டு சாப்பிடுவார்கள். குழைத்து உண்பது என்பது தொன்று தொட்டு வந்த தமிழர்களின் வழக்கமாக இருக்கலாம். புறநானூறில் ஆத்தூர் கிழார் என்ற புலவர் புறாவின் முட்டைபோன்ற வரகரிசியை பாலில் அவித்து சோறாக்கி தேனோடு முயல் இறைச்சியையும் குழைத்து உண்பது பற்றி சொல்லியிருக்கிறார். ஆகவே தமிழர்களின் இந்தப் பாரம்பரியம் 2000 வருடங்களுக்கு மேலானது என்று சொன்னாலும் பிழையாகாது.

“ வேக வைக்காத கீரையை அள்ளி உண்டார்கள். அரைப்பதமாக வாட்டிய மாட்டிறைச்சியை வெட்டி வெட்டி சாப்பிட்டார்கள். உணவை குழைத்து உண்பதென்ற வழக்கம் அவர்களிடம் கிடையாது. ”



அ.முத்துலிங்கம்

அமெரிக்காவில் லூயி எனக்கு பழக்கமானது அவன் காதலி வெனஸா மூலம்தான். இவள் துப்புரவுப் பணிப் பெண், பனாமா நாட்டைச் சேர்ந்தவள். இவளுடைய மார்பும் பிருட்டமும் முழு வளர்ச்சியடைந்து ஒரே அளவில் இருக்கும். ஆனால் அதை தொடுக்கும் இடை திடீரென்று சிறுத்துப்போய் உடுக்கை போல ஒடுங்கி இருக்கும். தென் அமெரிக்காவையும் வட அமெரிக்காவையும் இணைக்கும் பனாமா போலவே அவள் இடுப்பு இருந்தது. பெல்ட்டின் கடைசி ஓட்டையில் இழுத்து இடையை கட்டி வைத்திருப்பாள். அவள் கள்ளமாக அமெரிக்காவில் வசித்து வந்ததால் அவளை பொலீஸ் பிடித்து நாடு கடத்திவிட்டது. லூயி கூரையிலே பனி அகற்றும் வேலையை செய்தான். அவனும் பனாமாக்காரன்தான். நாலு, ஐந்து அடி ஆழமான பனிக்கட்டிகளை நடுங்கும் குளிரில் கூரையில் நின்று வெட்டி அப்புறப்படுத்தும் ஆபத்தான வேலை. ஒரு பனிக்காலத்தில் உழைப்பது வருடம் முழுவதற்கும் போதும் என்று சொல்வான். எப்படியும் பணம் சம்பாதித்து தன் காதலியை திரும்பவும் எடுப்பிப்பதுதான் அவன் நோக்கம். வேலை இல்லாத நாட்களில் காதலியை நினைத்துக்கொண்டு தெருக்களில் திரிவான். என்னை அப்படித்தான் சந்தித்தான்.

ஸ்பானிய மொழி பேசும் யாரை சந்தித்தாலும் நான் ஆவலுடன் ஸ்பானிய எழுத்தாளர்கள் பெயர்களை வரிசையாகக் கூறி அவரைப் படித்தீர்களா, இவரைப் படித்தீர்களா என்று விசாரிப்பது வழக்கம். இது மூடத்தனமான வேலை என்பது எனக்கு தெரியும். தமிழ் பேசும் ஒருவரைச் சந்தித்ததும் உங்களுக்கு ஜெயகாந்தனை தெரியுமா, சுந்தர ராமசாமியை தெரியுமா, ஜெயமோகனை தெரியுமா என்று கேட்பதற்குச் சமம். லூயி பெரிய ஸ்பானிய இலக்கியங்கள் ஒன்றும் படித்திருக்கவில்லை. ஆனால் பள்ளிக்கூடத்தில் பாப்லோ நெருடாவை படித்திருந்தான். 'உன் வாயை அவாவுகிறேன். உன் குரலை, உன் கூந்தலை. மௌனமாக பசியோடு தெருக்களில் அலைகிறேன்' என்ற நெருடாவின் வரிகளை ஒப்பிப்பான். நான் பாப்லோ நெருடா இலங்கையில் சில வருடங்கள் தூதரகத்தில் வேலைபார்த்தார், ஆனால் அது நான் பிறப்பதற்கு முன்னர் என்று சொன்னேன். நான் சொல்லாதது அவர் தூதரகத்தில் வேலை செய்தபோது நடந்த ஒரு சம்பவத்தை. தினமும் அவருடைய மலத்தை அள்ளிப்போவதற்கு வெள்ளவத்தையிலிருந்து ஒரு தமிழ் பெண் வருவாள். அகன்ற இடுப்பு, மெலிந்த இடை என கொடி போன்றவள். அவளை நெருடா பலாத்காரம் செய்தார். அவள் கண்களை மூடாமல் பலாத்காரம் முடியும்வரை அவரையே பார்த்துக்

25ம் பக்க தொடர்ச்சி...

# குழையல்

கொண்டிருந்தாளாம். இந்த விவகாரத்தை முழுவதுமாக நெருடாவே பதிவுசெய்திருந்தார். ஆனால் அன்று நாங்கள் இருவரும் ஒரு பொதுவான சொந்தக்காரரை கண்டுபிடித்ததுபோல பெரு மகிழ்ச்சியடைந்தோம்.

லூயி ஒருநாள் என்னை தன் வீட்டு விருந்துக்கு அழைத்தான். சாதாரணமாக யார் வீட்டுக்கு விருந்துக்கு போவதென்றாலும் எனக்கு பயம் உண்டு. ஆனால் இவன் வீட்டுக்கு போகத் தயங்கியதற்கு பல காரணங்கள் இருந்தன. இரண்டு நாள் பழசான ரொட்டியை மலிவு விலையில் விற்பார்கள், அதைத்தான் வாங்குவான். காலாவதியாக ஒருவாரம் இருக்கும் டின் உணவுகளும் அரை விலையில் கிடைக்கும். அவற்றையும் விட்டுவைக்க மாட்டான். அவன் சாப்பிடும்போது வாயை மூடுவதில்லை. தொண்டையில் உணவு இறங்கும்வரைக்கும் வாயில் பார்க்கலாம். உணவு வாயிலேயே காலாவதியாகிவிடுமோ என்று பயந்ததுபோல வேக வேகமாகச் சாப்பிடுவான். இவன் விருந்துக்கு அழைத்தபோது முன்னெச்சரிக்கையாக என்ன உணவு என்று கேட்டு வைத்தேன். அப்பொழுதுதான் அவன் Paella என்ற உணவின் பெயரைச் சொன்னான்.

ராணி இஸபெல்லா என்ற பெயரை எல்லோரும் கேள்விப்பட்டிருப்பார்கள். 500 வருடங்களுக்கு முன்னர் இவர்தான் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடிப்பதற்கு மூன்று கப்பல்களை கொடுத்து உதவியவர். ஒருநாள் ராணிக்கு நேரமில்லாத நேரத்தில் பசியெடுத்தது. ராணியால் பசியை தாங்க முடியவில்லை. நேராக அரண்மனை சமையல்கூடத்துக்கு தன் சொந்தக்கால்களில் நடந்து சென்றார். அங்கே தலைமை சமையல்காரரும் உதவியாளர்களும் மும்முரமாக இரவு உணவு தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தார்கள். ராணியை நேரில் கண்டதும் நடுநடுங்கி ஸ்தம்பித்துப்போய் அப்படியே நின்றனர். கைகளும் ஓடவில்லை கால்களும் ஓடவில்லை என்பது இதுதான். மகாராணி 'எனக்கு பசிக்கிறது, இப்பொழுதே ஏதாவது வேண்டும்' என்றார்.

தலைமை சமையல்காரர் அங்கே ஏற்கனவே வெட்டி வைத்திருந்த காய்கறிகள், இறைச்சி, மீன் என்று சகலதையும் ஒரு பாத்திரத்தில் இட்டு வேண்டிய சரக்குகளும் சேர்த்து வேகவைத்து இறக்கி அரசியின் சின்னம் பொறித்த தங்க பிளேட்டில் பரிமாறிப் பணிவுடன் கொடுத்தார். ராணி எல்லாவிதமான இறைச்சியும் உண்பார் ஆனால் முயல் இறைச்சியை மட்டும் தொடமாட்டார். அன்றைய உணவில் முயல் இறைச்சியும் சேர்க்கப்பட்டிருந்தது. வேக வைத்ததில் ஒன்றோடு ஒன்று கலந்து தனித்தனியாக எதுவென்று கண்டுபிடிக்க முடியாமல் அவியலாகி ஒரு புதிய சுவையை கொடுத்தது. மகாராணி சுவைத்து சாப்பிட்டார். மிகவும் பிடித்துக் கொண்டது. அடுத்த நாளும் அதுவே வேண்டும் என்றார். அதற்கு அடுத்த நாளும். ராணியின் அதிவிருப்பமான உணவாக அது மாறிவிட்டது. அதற்குப் பெயரே இல்லை. தலைமை சமையல்காரர் Paella என்று நாமம் சூட்டினார். ஸ்பானிய மொழியில் அதன் பொருள் For her, அதாவது மகாராணியாருக்கு. ராணிக்கு பிடித்தமான அந்த உணவு ஸ்பெயின் தேசத்தில் பிரபலமாகி பின்னர் மற்றைய நாடுகளுக்கும் பரவியது.

லூயியின் சமையலை ருசிபார்க்க முன்னர் பல தடவை காலாவதியான உணவு ஒன்றும் சேர்க்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன். என் கொலம்பிய நண்பர் அன்று படைத்த விருந்து நன்றாகவே இருந்தது. மகாரணிக்கு கிடைத்த சுவை எனக்கு கிடைத்ததோ தெரியாது ஆனால் என் அம்மாவின் சமையலை சாப்பிட்டது நினைவு வந்தது. பல ஆண்டுகளுக்கு முன்னர் அம்மா சமைத்ததும் அதுவேதான். ஒருமுறைமட்டுமே அம்மா அப்படி சமைத்தார். இரண்டாவது முறை அதே நோய் வந்து படுத்தபோது படுக்கையால் எழும்பி குழையல் சமைக்கக்கூட பெலன் இல்லாமல் இறந்து போனார். அம்மா கண்டுபிடித்த அந்த உணவு ஒரு ஸ்பெயின் நாட்டு மகாராணியின் பிடித்தமான உணவு என்பதும், அதன் பெயர் 'பாஎல்ல' என்பதும் அம்மாவுக்கு தெரிந்திருந்தால் அவர் எவ்வளவு சந்தோசப்பட்டிருப்பார்.

✹

# மீண்டும் போருக்கான அறைகூவல்

நான் கேளிக்கைகளில்  
திளைக்கின்றேன்  
ஆனாலும் அவர்களைப்  
போரிடுமாறு அழைக்கின்றேன்

ஏனெனில் அவர்கள்  
அடக்குமுறைக்கு உள்ளாவதால்

எனது பங்குகளை உரியமுறையில்  
செலுத்துவதாகவும்  
கதை சொல்லுகின்றேன்

ஆனால் அவர்கள்  
கரங்கள் துண்டிக்கப்பட்டு  
கால்கள் தறிக்கப்பட்டு  
குதத்தால் உண்டு  
வாயால் கழிவுப்பொருட்களை  
வெளியேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்

பத்திரமாக எனது பிள்ளைகள்  
பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில்  
மகுடங்களைச் சூடிக் கொள்கின்றார்கள்

வாழாத நாடொன்றின் தலைவிதியைத்  
தீர்மானித்தற்காய்  
மக்களே திரண்டெழுங்கள்  
என்ற கோசத்தை  
அடிக்கடி முழங்குகின்றேன்

அதன் தொடர்ச்சியாய்  
இப்போது நான்  
மாலைநேர மேடையொன்றிலே  
எழுச்சி உரையொன்றை ஆற்றுதற்காய்  
என்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றேன்

- நடராஜா முரளிதரன்

## கண்ணிவெடி விபத்தில் நிபுணர் பலி

இலங்கையின் வடக்கே வவுனியா இரணை இலுப்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற கண்ணிவெடி விபத்தொன்றில் சுவிட்சர்லாந்து கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிரஞ்சு பிரஜையாகிய 55 வயதுடைய 'டொமினிக் மொரின்" உயிரிழந்துள்ளதாக எஃப்.எஸ்.டி என்ற அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் கூறுகின்றனர். விபத்தில் படுகாயமடைந்த இவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனளிக்காமல உயிரிழந்துள்ளார்.

அவரது சடலத்தை பிரான்சுக்கு அனுப்பி வைப்பதற்காகக் கொழும்பில் உள்ள பிரஞ்சு தூதரகத்தின் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான யுத்த மோதல்கள் முடிவுக்கு வந்து ஒரு வருடம் பூர்த்தியடைகின்ற நிலையில் கண்ணிவெடி விபத்தொன்றில் உயிரிழப்பு ஏற்பட்டிருப்பது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது. வன்னிப் பகுதியில் கண்ணிவெடிகளையும் மற்றும் வெடிப்பொருட்களையும் கண்டுபிடித்து அகற்றுகின்ற பணியில் எஃப்.எஸ்.டி நிறுவனம் மற்றும் இந்தியா வைச் சேர்ந்த வேறு இரண்டு நிறுவனங்கள் உட்பட வெளிநாட்டு நிறுவனங்களும், இலங்கை இராணு வத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

# அலிபாபா கதையில் 'ஆபாசம்"

பழங்காலத்து கதை களில் ஆபாசம் இருப்பதாக புதிய சர்ச்சை ஆயி ரத்து ஓர் இரவுகள் என்ற பழங்காலத்து அரபுக் கதைகளின் சில பகுதிகள் ஆபாசமாக இருப்பதாகக் கூறி அக்கதைகளுக்கு தடை விதிக்க வேண்டும் என எகிப்தின் வழக்குரைஞர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கன்னித் தீவு சிந்துபாத், அலாவுதீனும் அற்புத விளக்கும், அலிபாபாவும் நாற்பது திருடர்களும் போன்ற சாகசக் கதைகள் உலகெங்கும் பிரசித்தி பெற்றவை. இந்தக் கதைகள் மத்திய கிழக்குப் பகுதியையும் தெற்காசியாவையும் கதைக்களங்களாக கொண்டுள்ளன. சுமார் ஆயிரம் ஆண்டுகள் பழமையானவை இவை.

ஆச்சரியங்களும் அற்புதங்களும் நிறைந்த ஓர் உலகத்தை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி இன்றளவும் இக்கதைகள் ரசிகர்களை ஈர்த்துவருகின்றன. புத்தகமாக மட்டுமல்லாது திரைப்படங்களாகவும் கார்டூன் படங்களாகவும் வெளிவந்து எல்லா வயதினரையும் இக்கதைகள் வசீகரித்துள்ளன.

எகிப்தில் அண்மையில் வெளியான இக்கதைகளின் புதிய பதிப்பு கூட வெளிவந்தவுடன் விற்றுத் தீர்ந்துவிட்டுள்ளன. ஆனாலும் தற்போது அங்கு இக்கதைகள் தொடர்பில் ஒரு புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது.

அந்தக் கதைகளில் சில இடங்களில் பாலியல் உணர்வையும் காம உணர்வையும் வெளிப்படுத்தும் பத்திகள் இருக்கின்றன. உடலின் அங்கங்களை வருணிக்கும் வாசகங்கள் இருக்கின்றன.

அந்தக் கதைகளில் வரும் கவர்ச்சியான வர்ணனைகள் ஆபாசமாக உள்ளதாக இஸ்லாமிய சட்டத்தரணிகள் சிலர் கூறுகின்றனர். ஆதலால் இந்தப் புத்தகத்துக்கு தடை விதிக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

# சாதியத்தை எதிர்த்தாரா மகாத்மா?

இந்த ஆண்டு காந்தி பிறந்த நாள், 'சத்தியாக்கிரகம்" என்கிற போராட்ட முறையை அவர் உலகுக்குத் தந்த நூற்றாண்டில் அமைகிற வகையில் கூடுதல் முக்கியத்துவம் பெறுகின்றது. காந்தியின் அகிம்சை, சத்தியாக்கிரகம் முதலியன அரசுக்கு எதிராக ஒருவர் தன்னை வகுத்துக் கொண்டு அழிந்து போகிற முட்டாள்தனமான ஒரு காரியமல்ல. பரந்துபட்ட பெருந்திரளான மக்களைச் சட்டத்தை மறுக்க வைக்கிற, மீற வைக்கிற, அதன் மூலம் அரசைப் பணிய வைக்கிற போராட்ட வடிவம் அது.

சட்டம் மீறுகிற போராட்ட வடிவங்கள் என்பன ஆயுதம் தாங்கிய சிறு முன்னணிப் படையால் நடத்தப்படுவன என்கிற நிலையை மாற்றியமைத்தவர் அவர். மக்களின் மீது அதிகாரமுள்ள முன்னணிப்படை (Vanguard) என்கிற கருத்தாக்கம் இதன் மூலம் அழிந்தது. அனைவரும் அதில் படைவீரர்கள். துயரைத் தாங்குதல், அதே நேரத்தில் அதிகாரத்தை எதிர்த்தல் என்பதே காந்தியடிகளின் கொள்கை.

காந்தியின் தென் ஆப்பிரிக்க வாழ்க்கை (1893 - 1914) நிறவெறித் தீண்டாமைக்கெதிரான போராட்டக் களமாக மட்டுமன்றி சுயநலமற்ற நேர்மையான அரசியலுக்கான சோதனைக் களமாகவும் இருந்தது. அங்கு அவர் உருவாக்கிய 'பீனிக்ஸ் பண்ணை" மற்றும் 'டால்ஸ்டாய் பண்ணைகள்" என்பன மார்க்ஸியர்கள் கனவு கண்ட ஒரு 'கம்யூன்" வடிவத்தின் மிகச் சிறந்த மாதிரியாக இருந்தது. பண்ணையிலுள்ள அனைவரும் தமது வருமானங்களைப் பொதுவாக்கி, கூடி உழைத்துப் பகிர்ந்து கொள்ளுதல் அங்கே கடமையாக்கப்பட்டன. தனது பெரும் வருமானம் அனைத்தையும் அவர் பண்ணையில் பகிர்ந்து கொண்டார்.

இந்திய அரசியல் சட்ட உருவாக்கத்தில் அவருக்கு நேரடியான பங்கில்லை என்றபோதிலும் இது ஒரு 'மதச்சார்பற்ற குடியரசாகப்" பிரகடனப்படுத்தப்பட்டதில் காந்தியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கது. 'மதச்சார்பின்மை" (Secularism) என்கிற தத்துவக் கருத்தாக்கத்தை ஓர் அரசியல் சொல்லாடலாக மாற்றியமைத்ததில் காந்தியின் பங்கை இன்றுஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பெண் விடுதலை குறித்துச் சனாதனமான கருத்துகளைப் பேசியதாகவே நாம் அவரை அறிந்து வந்துள்ளோம். ஆனால் பெண்களைக் குடும்பத்திற்குள் சிறைப்படுத்தாமல் ஆசிரம வாழ்விற்கும், அரசியல் களத்திற்கும் ஈர்த்தவர் அவர். அவரளவிற்குப் பெண்களைப் போராட்டக் களத்தில் இறக்கியவர்கள் யாருமில்லை. உப்புச் சத்தியாக்கிரகம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

காந்தியை விமர்சிப்பவர்களில் பலர் அவரை முழுமையாக வாசித்ததில்லை. எனவே அவர் குறித்த தவறான புரிதல்கள் பல இங்கே கட்டமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, 'அவர் தீண்டாமையை எதிர்த்தபோதும் சாதியத்தை எதிர்க்கவில்லை வருணாசிரமத்தை ஆதரித்தார்" என்பது. இன்று உலகெங்கிலும் காந்தி மறுவாசிப்பிற்குள்ளாகிக் கொண்டுள்ளார். இத்தகைய மறுவாசிப்பாளர்களில் ஒருவரான 'அனில் நவுரியா" கருத்தை ஆதாரபூர்வமாக மறுக்கிறார்.

1927-ல் சிங்களவர்கள் மத்தியில் பேசும்போது, 'மகிந்தரையும் பவுத்தத்தையும் உங்களுக்குத் தந்ததற்காக இந்தியா பெருமைப்படும் அதே நேரத்தில் சாதி வேறுபாடு எனும் சாபத்தையும் உங்களுக்கு அறிமுகம் செய்ததற்காக அது வெட்கப்படுகிறது" என்றார். சாதியை 'முன்னேற்றத்திற்குத் தடையானது" எனவும் 'சமூகக் கொடுமை", 'காலத்திற்கு ஒவ்வாதது", 'ஒழிக்கப்பட வேண்டியது" என்றும் தொடர்ந்து கூறி வந்தார்.

தொடக்க காலங்களில் அவர் வருணாசிரமத்தை ஆதரித்துக் கருத்துகள் கூறிய போது கூட தனது ஆசிரமங்களில் 'வருணவியவஸ்தா"விற்கு இடமில்லை என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். 'தீண்டாமை ஒழிப்போடு சேர்ந்து சாதியும் ஒழிந்தால் நான் ஒரு சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்த மாட்டேன்" என்றார் (1927). வருண முறையை ஆதரித்த போதும்கூட அவர் பிறவியால் வருணமும், தொழிலும் தீர்மானிக்கப்படுதல் என்பதை ஏற்கவில்லை.

மதங்களில் ஏற்றத் தாழ்வுக்கு இடமில்லை என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். என்னுடைய மதத்தில் எனக்குக் கீழான ஒருவர் என்கிற கருத்து சாத்தியமில்லை என்றார். தலித்களுக்கும் மற்றவர்களுக்குமான திருமண உறவை வலியுறுத்தினார். இறுதியில் 'ஒரே சாதிதான் இருக்க வேண்டும். 'பங்கி" (துப்புரவாளர்) என்கிற அழகிய பெயருக்குரியது அது. அதாவது எல்லா அழுக்குகளையும் நீக்கிச் சீர்திருத்துபவர். அந்நிலை விரைவில் வர வேண்டுமென நாம் எல்லோரும் வேண்டிக் கொள்வோம்" என்றார் (1946).



சுதந்திர நாள் நெருங்கிய போது பிரார்த்தனைக் கூட்டமொன்றில் (ஜூன் 1, 1947) 'பங்கிகளின் ஆட்சி" இங்கே உருவாக வேண்டும் என்றார். தீண்டாமைக் கொடுமைக்குள்ளானவர்களிலும் ஆகக் கீழாக ஒதுக்கப்பட்டவர்களின் மீது அவரது கரிசனம் கூடுதலாக இருந்ததையே இது வெளிப்படுத்துகிறது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசும்போது (ஜூன் 14, 1947) சுதந்திர இந்தியாவில் சவர்ணல அவர்ண வேற்றுமை ஒழிய வேண்டும் என்றார்.

**அ. மார்க்ஸ்**

சூத்திரர், தீண்டத்தகாதோர், ஆதிவாசிகள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்றார். மற்றொரு பிரார்த்தனைக் கூட்டத்தில் (ஜூன் 2, 1947) இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் ஒரு 'தலித் பெண்ணாக" இருக்க வேண்டும் என்றார்.

'தலித்" என்கிற சொல்லையும் காந்தி 1927, 1931ம் ஆண்டுகளிலேயே பயன்படுத்தினார் என்பது நம்மை வியக்க வைக்கும் ஒரு செய்தி. 'தலித்" என்னும் சொல் 'மிகச் சரியாகவே" பயன்படுத்தப்படுகிறது எனக் கூறிய காந்தி, ஏனெனில் அம்மக்கள் (தானாக) 'அழுந்தியவர்கள் (depressed) அல்ல மாறாக அழுத்தப்பட்டவர்கள்" (Suppressed) என விளக்கமும் அளித்தார். எனினும் இத்தகைய சொற்கள் சுட்டும் சமூக நிலை ஒழிக்கப்பட்டு, இத்தகைய சொற்களே தேவையற்றதாகிவிட வேண்டும் எனவும் அவர் சொல்லத் தயங்கவில்லை (பார்க்க: தொகுப்பு 33, பக் 196 மற்றும் தொகுப்பு 46, பக் 342).

'வருணாசிரமத்தை நம்புபவர்களாயினும் தீண்டாமைக் கொடுமையை எதிர்க்கக் கூடியவர்களையும் இணைத்து ஒரு கூட்டுப் போராட்டமாக" நடத்த நேர்ந்த அவசியத்தை அவர் விளக்கியுள்ளார் (1933). 'இப்போதைக்கு தீண்டாமை ஒழிப்போடு இது வரையறைப்படுத்தப்பட்டாலும், இறுதியில் வருணாசிரமம் தொடர்ந்து அவலட்சணமாகத் தோன்றினால் மொத்தமுள்ள இந்தச் சமூகமும் சேர்ந்து அதையும் எதிர்க்கும்" என்றார்.

காந்தியின் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்கு மிகக் கடுமையான எதிர்ப்புகள் வருணாசிரம ஆதரவாளர்களிடமிருந்து உருவாகியது (1933-34). பிஹாரில் அவர் சென்று கொண்டிருந்த கார் மீது கற்கள் வீசப்பட்டன. காசியில் கருப்புக் கொடிகள் காட்டப்பட்டன. பூனாவில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சில் பலர் காயமடைந்தனர். தமிழகத்தில் காந்தியை வசைபாடி 'தீண்டாதார் ஆலயப் பிரவேச நிக்ரஹம்" முதலிய நூற்கள் வெளியிடப்பட்டன (1932).

காந்தி கொல்லப்பட்டதற்கான காரணம் அவர் சிறுபான்மையினருக்கு ஆதரவாக இருந்தது மட்டுமன்றி, தீண்டாமை, சாதி வேறுபாடு, வருணாசிரமம் ஆகியவற்றிற்கு எதிராக இருந்ததும் ஒரு காரணம் என இன்றைய ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சாதி, வருணப் பிரச்சினையில் அவர் தொடர்ந்து தன்னை வளர்த்துக் கொண்டவராகவே காட்சியளிக்கிறார். 'நான் ஒரு கருத்தை ஏற்பது என்பது ஒன்று. சமூகத்திலுள்ள எல்லோரையும் அக் கருத்தை ஏற்பவர்களாகச் செய்வது என்பது வேறு. என் மனம் தொடர்ந்து முன்னோக்கி வளர்ந்து கொண்டிருப்பதாகவே நான் நம்புகிறேன். எல்லோரும் அதே வேகத்தில் என்னைப் பின்பற்றுவார்கள் எனச் சொல்ல இயலாது. எனவே நான் அதிகபட்சப் பொறுமையைக் கடைப்பிடித்து மெதுவாகச் செல்ல வேண்டியுள்ளது" என்கிற அவரது தன்னிலை விளக்கம் குறிப்பிடத்தக்கது (1946).

மகாத்மா காந்தியின் இந்த முற்போக்கான நகர்வுக்கு அவரது சொந்த அரசியலனுபவங்கள் மட்டுமன்றி சமகாலச் சிந்தனையாளர்களான அண்ணல் அம்பேத்கர், பெரியார் ஈ.வெ.ரா ஆகியோருடன் அவர் மேற்கொண்ட உரையாடல்களும், விவாதங்களும் ஒரு பங்கு வகித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# அக்டோபர் 'ரசியப் புரட்சி' குறித்த இன்றைய சிந்தனை

உலக வரலாற்றிலே திசைதிருப்பக் கட்டங்களாக சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுதல் வரலாற்றிலே காணப்படும் ஒரு மரபாகும். குறிப்பாக ஐரோப்பிய வரலாற்றினை நோக்கும் பொழுது 1453 இல் ஏற்பட்ட கொன்ஸ்தாந்தி நோபிளின் வீழ்ச்சி, 1789 இல் ஏற்பட்ட பிரஞ்சு புரட்சி ஆகியன சில மைல் கற்களாகும். இந்த பட்டியலிலே 1917ல் ரஷ்யாவில் ஏற்பட்ட 'அக்டோபர் புரட்சியும்" இடம் பெறும்.

ஏறத்தாழ 1905ம் ஆண்டிலே தொடங்கிய ஒரு வரலாற்றோட்டம் ரஷ்யச் சூழ்நிலைகளிலே பல மாற்றங்களை ஏற்படுத்தி 1917 பெப்ரவரியில் ஒரு முக்கிய கட்டத்தை எய்தி நிறைவாக 1917 அக்டோபரில் போல்ஷ்விக் கட்சியினரின் தலைமையில் அப்புரட்சி வெற்றிகரமாக நிறைவேறிற்று. இப் புரட்சி நடந்த காலத்திலே இச்சம்பவம் பற்றி பாடியுள்ள பாரதியார்'

'இடிபட்ட சுவர் போலே கலி வீழ்ந்தான் கிருதயுகம் எழுக மாதோ" எனக் கூறியுள்ளார். பாடலின் தொடக்கத்திலே பாரதி 'ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி" என்று கூறுவதை மனங்கொளல் வேண்டும். பாரதியின் கூற்றிலே வரும் இரண்டு குறிப்புகள் மிக முக்கியமானவையாகும். ஒன்று அக்டோபர் புரட்சியை அவன் யுகப்புரட்சி என்றமையாகும். அடுத்த குறிப்பு கலி வீழ்ந்தான் கிருத யுகம் எழுக மாதோ! என்று வருவதாகும். இது ஒரு மிக முக்கியமான குறிப்பாகும். கலி யுகம் என்பது கேடுகளும், தீங்குகளும் நிறைந்த யுகமாகும். நீதி நியாயம் தலைகீழாக நிற்கும் காலமாகும். (வர்த்தமான யுகத்தை கலியுகம் என்கிறது இந்து மரபு)

கிருதயுகம் என்பது வரவிருக்கும் புதிய யுகமாகும். அந்த யுகத்தில் நன்மைகளைத் தவிர வேறொன்றும் இடம் பெறாதென்பது இந்து மத நம்பிக்கையாகும். பாரதியின் கருத்துப்படி அக்டோபர் புரட்சி உலகிலே கலியுகம் வீழ்ந்து கிருதயுகம் எழுந்துள்ளது என்பதாகும். இவ்வாறு அக்டோபர் புரட்சியை இந்து மரபு நிலை நின்று கிருதயுகமெனப் போற்றியமைக்கான பிரதான காரணம் அது உலகின் முதலாவது 'சமதர்ம புரட்சி" (Socia list Revolution) ஆகும்.

பிரஞ்சுப் புரட்சி விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பிரதானப்படுத்திற்று எனினும் அது சமூகநிலைப்பட்ட வாழ்வியற் சமத்துவத்தை ஏற்படுத்தவுமில்லை, தனது முக்கிய இலட்சியங்களிலொன்றாகக் கொள்ளவுமில்லை.

1917இல், குறிப்பாக லெனின் தலைமையில் நடந்தேறிய சமதர்மப் புரட்சி, நாட்டு மக்கள் ஒவ்வொருவரிடத்திலிருந்தும் அவர்களது திறமைக்கேற்ற பங்களிப்புக்களைப் பெற்று அவர்களின் தேவைக்கேற்றவனவற்றை குறிப்பாக சமூகப் பொருளாதார தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். இன்று பின்னோக்கிப் பார்க்கின்ற பொழுது அக்டோபர் புரட்சியின் வழியாகக் கிளம்பிய சோவியத் ஒன்றியம் தனது கருத்து நிலை நின்றும் வழுவி உடைந்து போய்விட்டது. சோவியத் ஒன்றியத்தில் இடம்பெற்ற குடியாட்சிகள் இன்று தனித்தனி அரசுகளாக மாறியுள்ளன. பால்கன் பிரதேசத்தில் சிறுபிரச்சினைகள் உள்ளனவெனினும் அங்கும் தனித்தனி அரசுகள் மேற் கிளம்பியுள்ளன.

> அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிர் நிலையான ஒரு சோஷலிசக் குழுமத்தைப் பேண ஸ்ராலின் ஆட்சி உதவியது. ஸ்ராலின் நிறுவிய பொருளாதாரத் தளத்தின் வலிமை இன்றும் கூட உணரப்படு கின்றதெனலாம்.

சோவியத் யூனியனின் உந்துதலையும் முன்னுதாரணத்தையும் கொண்டு நடத்தப்பெற்ற கிழக்கு ஐரோப்ப சோஷலிஸ்ட் அரசுகள் இன்று சீர்குலைந்து போயுள்ளன. கிழக்கு ஐரோப்பா, மேற்கு ஐரோப்பாவின் மேலாண்மைக்குள்ளே படிப்படியாக வந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தோல்வியையும், உடைவையும் கம்யூனிஸத்தின் உடைவாகவும் தோல்வியாகவுமே அமெரிக்க மேற்கு ஐரோப்பிய நாடுகள் காட்டியுள்ளன. காட்டி வருகின்றன.

கம்யூனிஸம் (பொதுவுடமை) என்பது ஒரு குறிப்பிட்ட பொருளாதார கோட்பாடு மாத்திரமல்லாது அதுவோர் 'அரசியல் அதிகார முறைமையாகவும்" 1917-88/89 காலத்தில் வளர்ந்திருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் அது ஓர் அரசியல் சர்வாதிகார மாகவே எடுத்துக் காட்டப்பெற்றது.

ஸ்ராலினுடைய ஆட்சிக்கால நடைமுறைகள் வாய்ப்பான உதாரணங்களாக மாறின. சோவியத் உடைவினதும், பொதுவுடமை வீழ்ச்சியினதும் பின்புலத்தில் 60 கள் தொடக்கம் 90 வரை உலக முதலாளித்துவத்துக்கும் சமதர்ம கருத்துநிலைக்குமிடையே நடந்த கருத்து நிலை யுத்தம் மிக முக்கியமானதாகும். ஏனெனில் இன்றும் தான் மேற்குலக ஊடகங்கள் சோவியத் உடைவை பொதுவுடமைக் கொள்கையின் உடைவாகவே சித்தரிக்கின்றன.

இது மாத்திரமல்லாமல் பொதுவுடமைக் கோட்பாட்டினையும் அதனது அரசியல் நடைமுறையினையும் ஜனநாயகத்திற்கு விரோதமானவை என்ற கருத்தினையும் வலுவாக முன்வைத்துள்ளன. சோவியத் யூனியனின் ஆட்சி முறையில் ஏற்பட்ட சில 'திரிபு" நிலைகளிலும் உண்மையானவையே. இவை யாவற்றுக்கும் வழிவகுத்த அக்டோபர் புரட்சியினை எவ்வாறு நோக்குவது என்பது அச்சாணியான ஒரு வினாவாகின்றது. அக்டோபர் புரட்சியின் யுக நிலை முக்கியத்துவம் அது வெறுமனே அரசியல் ஜனநாயக வரலாற்றில் மாத்திரமல்லாமல் சமூக ஜனநாயக வரலாற்று கோட்பாட்டிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

சமூக ஜனநாயகம் என்பது ஒரு முக்கியமான அரசியல் எண்ணக்கருவாகும். அதாவது சமூக வாழ்வில் சமூக இருப்பில் மக்களிடையே ஒரு ஜனநாயகத் தன்மை நிலவுவதாகும். அரசியல் நிலையிலே கிடைக்கும் ஜனநாயகம் சமூக ஜனநாயகமாக மாறுவதில்லை. சமூக அமைப்பிலே நிலவும் அதிகாரப்படி நிலைகள் (Hierayer-chies) சமவீனங்கள் ஒழிக்கப்பெற்று மக்களிடையே உண்மையான சமூக சமத்துவம் நிலவுவதாகும். இதனைச் சாதிப்பதற்கு ஒவ்வொருவரையும் அவரவர் ஆற்றல்களுக்கேற்ப வளர்த்து அவரவர்களின் தேவைகளுக்கேற்ப அவர்களின் வாழ்க்கை முறைக்கு உதவுதல் வேண்டும்.

உண்மையில் அக்டோபர் புரட்சியை முன்னின்று நடத்திய பொதுவுடைமைக் கட்சியினரின் பெயர் (Social Democ-rats) 'சமூக ஜனநாயகவாதிகள்" என்பதே ஆகும். இன்று சர்வதேச நிலையில் கியூபா போன்ற நாடுகளைத் தவிர்ந்த நாடுகளிலே சமூக ஜனநாயகம் என்ற கோட்பாடே இல்லாமற் போய்விட்டது. உண்மையில் இலங்கையைப் பொறுத்த வரையிலும் கூட நமக்கு ஏற்பட்டுள்ள மிகப் பாரிய பாதிப்பு சமூக ஜனநாயகம் என்கின்ற கோட்பாடு இங்கு வளர்க்கப்படாது போனமையாகும்.

அக்டோபர் புரட்சியின் உலகப் பொதுவான முக்கியத்துவம் பற்றி நோக்குவதற்கு முன்னர் சோவியத் ஒன்றியத்தின் நிலையிலும் கிழக்கு ஐரோப்பிய நிலையிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளுக்கான காரணங்களை மிகச்சுருக்கமாக இங்கு குறிப்பிடுதல் அவசியமாகும். அக்டோபர் புரட்சி அடிப்படையில் ரஷ்யாவிலே ஏற்பட்ட புரட்சியே. ரஷ்யா நாட்டில் குறிப்பாக புதிய மத்தியதர வர்க்கங்கள் மேற்கிளம்பிய நகரப்பகுதிகளிலேயே ஆட்சியெதிர்ப்பு முதலிற் கிளம்பியது. ரஷ்யப் பேரரசின் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த பிரதேசங்களிலே (மத்திய ஆசிய பிரதேசங்களில்) மக்கள் கிளர்ச்சி என்ற எண்ணக்கருவோ பெரிதும் பேசப்படவில்லை. ஆனால் மொஸ்கோ பொத்ரோகிறாட் பிரதேசங்களில் மாத்திரமே அந்த எழுச்சி வலிமையுடன் காணப்பட்டது. மொஸ்கோவில் நிலவிய ஆட்சி வீழ்ந்ததும் புதிதாக அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட அரசாங்கம் ரஷ்யப் பேரரசு முழுவதிலும் தனது ஆட்சியை நிலைநிறுத்தியது. இதனால் மிகப் பெரியதொரு மக்களுணர்வுச் சமவீனம் காணப்பட்டது. அத்துடன் ரஷ்யப் பேரரசின் கீழ்வந்த ரஷ்யாவுக்கு அப்பாலான பிரதேசங்களில் மிகப்பெரிய நிர்வாக மாற்றங்கள் ஏற்படுத்தப்படவில்லை. இதனால் சோவியத் ரஷ்யாவுக்குள்ளே ஒரு மிகப் பெரிய அரசியற் சமவீனம் காணப்பட்டது.

ஸ்ராலின் ஆட்சியானது சோவியத் ஒன்றியம் முழுவதற்கும் பொதுவான ஆட்சி ஒழுங்கமைப்பினை நிலைநிறுத்த முயன்றது. இந்தச் சமவீனம் இறுதியில் அப்பிரதேசங்களிலே மக்களிடையே புரட்சியூக்கத்தை ஏற்படுத்தவில்லை. இது சோவியத் யூனியனின் உடைவுக்குக் காரணமாயிற்று.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்த வரையில் இரண்டாவது உலகப் போரின் இறுதியிலே 'நேச நாடுகளின்" தீர்வுக்கிய்ய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் யூனியனின் மேலாண்மைக்குக் கீழே கொண்டு வரப்பட்டன. அவ்வாறு கொண்டுவரப்பட்டாலும் ஹங்கேரி, கிழக்கு ஜேர்மனி போன்ற நாடுகளில் சோவியத் யூனியனுக்கு இருந்த மேலாண்மை யூகோஸ்லாவியா மீது இருக்கவில்லை.

இன்று பின்னோக்கி பார்க்கும் பொழுது ஸ்ராலினது ஆட்சி பற்றிய விமர்சனங்கள் ரஷ்யாவுக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டன எனினும் சோவியத் ஒன்றியத்தின் நிலைப் பேறுடைமைக்கும், சர்வதேச முதலாளித்துவத்துக்கு எதிரான ஓர் அமைப்பினைப் பேணுவதிலும் ஸ்ராலின் காலம் முக்கியத்துவமுடையதாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிர் நிலையான ஒரு சோஷலிசக் குழுமத்தைப் பேண ஸ்ராலின் ஆட்சி உதவியது. ஸ்ராலின் நிறுவிய பொருளாதாரத் தளத்தின் வலிமை இன்றும் கூட உணரப்படு கின்றதெனலாம்.



இவ்வாறு கூறும்பொழுது பொது வுடமை ஆட்சி சோவியத்தில் ஸ்தாபிக் கப்பட்டிருந்த முறைமையினுள்ளே பல பிரச்சினைகள் தொங்கி நிற்கின்றன என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக ஒரு கட்சி அரசாங்கம் (One party Govenment) நடைமுறைப்படுத்தப்ப டும் போது ஏற்படக் கூடிய மக்கள் பங்கு கொள்ளல் பற்றிய பிரச்சினை கள் முக்கியமான விவாதத்துக்கு இடமளித்தன. யாவற்றுக்கும் மேலாக வரலாற்றிலே தனிநபருக்குள்ள பாத் திரம் யாது என்பதும் ஆளுமை வழிப் பாடு (Permality cut) பற்றிய பிரச்சினை களும் மிக முக்கியமானவையாகும்.

ஸ்ராலின் காலச் சோவியத் ஒன்றியத் தில் றொட்ஸ்கி இடம் பெறாது போன மையும் அதன் வழியாக ஏற்பட்ட பி- ளவுகளும் சுலபமாக மறக்கப்படத் தக்கவையல்ல. ஒரு நிலையில் ஸ்ரா லின், றொட்ஸ்கி ஆகிய இரு ஆளு மைகளின் மோதுமையாகப் பார்க்கப் படுகிறது. எனினும் ஆழமாக நோக் கும் பொழுது சமதர்ம புரட்சியை நிரந் தரமாக்குவதற்கு வேண்டிய வழிவ கைகள் யாவை? என்பது பற்றிய ஒரு விவாதமாகவும் அது அமைந்தது. ஒரு நாட்டில் ஏற்பட்ட சமதர்ம புரட்சியைப் பேணுவதற்கு புரட்சியுணர்வு மற்றைய நாடுகளிலும் பரப்பப்பட வேண்டு மென்ற நிலைப்பாட்டுக்கு மாறாக ஸ்ராலின், புரட்சி நடந்தேறிய நாட்டுக் குள்ளேயே புரட்சியின் பெறுபேறுக ளைப் பேணுதல் முடியும் என்ற நிலைப்பாட்டை மேற்கொண்டார்.

இந்த விவாதமும், றொட்ஸ்கி நாட்டை விட்டு வெளியேறியமையும் இறுதியில் கொல்லப்பட்டமையும் பொதுவுடைமை இயக்க வரலாற்றில் முக்கியமான பேத பொருட்களாகின. ஸ்ராலின் யுகம் சோசலிஷ ஒன்றிய வரலாற்றில் பலத்த விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

சோவியத் யூனியனின் வரலாறு பற்றிய பிரச்சினைகள் அக்டோபர் புரட்சியின் உலக நிலை முக்கியத்துவத்தை எவ்விதத்திலும் குறைத்துவிட முடி யாது. அக்டோபர் புரட்சியின் அதிமுக் கியமான சர்வதேசச் சாதனை அது கார்ல் மார்க்ஸ், பிரடெறிக் ஏங்கெல்ஸ் ஆகியோரால் கட்டமைக்கப் பெற்று 19ம் நூற்றாண்டில் கடைசி ஐந்து தசாப்தங்களிலும் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளில் அரசியல் இயக்க முக்கியத்துவம் கொண்ட ஓர் அரசியற் சித்தாந்தம் அது சுட்டிய மானுடத் தளை நீக்கப் பண்பு காரணமாக ஒரு நாட்டின் ஆட்சி மாற்றத்துக்கும் புதிய ஆட்சி முறைமைக்குமான அரசியற் தளமாகக் கொள்ளப்பட்டதேயாகும். அதாவது மார்க்ஸீயம் புதிய அரசியல் விடுதலைக்கான சித்தாந்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்டமையாகும்.

இவ்வாறு ஓர் அரசியற் சித்தாந்தத் தைத் தனது இலக்காகவும், அது கூறும் நடைமுறைச் செயற்பாடுகளை தனது வழிகாட்டியாகவும் ஒரு நாட்டி னால் மேற்கொள்ளப்படுவது இதுவே முதற்தடவையாகும். ரஷ்யாவில் புரட் சிகர மாற்றங்கள் தோன்றத் தொடங் குவது ஏறத்தாழ 1905லிருந்தே காணப் படுகின்றன எனினும் பெப்ரவரி 17ல் ஓர் ஆட்சி மாற்றமே ஏற்படுகின்றதெனி னும் (கெரென்ஸ்கியின்) இடைக்கால அரசாங்கம் ஏற்படுகின்றதெனினும் அக் டோபர் புரட்சியே அந்த ஆட்சி மாற்ற நடைமுறையின் சிகரமாக அமைந்தது. அந்த வகையில் 1917இன் அக்டோபர் புரட்சி உலக விடுதலை வரலாற்றின் ஒரு முக்கிய கட்டமாக அமைகின்றது.

இந்த சாதனை ஏற்படுத்துவதற்கு கார ணமாக அமைந்தவர் விளாடிமீர் இலிச் லெனின் என்பவராவார். அக்டோபர் புரட்சிக்கு அவர் வழங்கிய தலைமை மிக முக்கியமானதாகும். இருபதாம் நூற்றாண்டின் உலகின் மிகச் சிறந்த அரசியல் தலைவர்களெனப் போற் றப்பட வேண்டியவர்கள் இருவராவர். ஒருவர் மகாத்மாவெனப் போற்றப்பட்ட மோகனதாஸ் கரம்சந் காந்தி, மற்றவர் லெனின் ஆவார். இவர்களிருவரும் தத்தம் நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்களாவர்.

இவர்கள் இருவரும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட அரசியல் யுக்திகளைக் கையாண்டவர்களாவர். சத்தியாக்கிர கம் எனும் நடைமுறையை காந்தியும், மார்க்சிய புரட்சிகர முறைமையை லெனினும் கையாண்டனர். அடிப்ப டையை நோக்கும் பொழுது இரண்டு நாடுகளும் வேண்டி நின்ற விடுத லைகள் வெவ்வேறு நிலைப்பட்டவைக ளாகும். ஒன்று காலனித்துவ ஆட்சிக் கெதிரான சுதந்திரப் போராட்டமாகும். மற்றது அந்நாட்டின் சுதேச ஆட்சி முறையே எனினும் அதன் கொடுங் கோன்மை காரணமாக எதிர்க்கப்பட்ட தாகும். இரு தலைவர்களுமே தமது கொள்கைகள் இலட்சியங்களுக்கேற்ப போராட்ட முறைமைகளை வகுத்துக் கொண்டனர்.

காந்தீயம் அரசியலையும், ஆன்மீகத் தையும் இணைக்க முனைந்தது. ஆனால் அவ்விணைவு பெருவெற்றியை ஈட்டி



பேராசிரியர்
கா. சிவத்தம்பி

யது எனக் கூறிவிடமுடியாது. சுதந்திர இந்தியாவிலே காந்தீயத்தை ஓர் அரசி யல் நடைமுறையாகக் கொள்வதிலே பல சிக்கல்கள் ஏற்பட்டன. காந்தியி னுடைய மிக நெருங்கிய சிஷ்யரான நேருவினாலே கூட காந்தீயத்தை ஓர் அரசியல் நடைமுறையாக்க முடிய வில்லை. ஆனால் லெனினை எடுத்துக் கொண்டால் லெனின் கையாண்ட நடைமுறை லெனினது மறைவின் பின் னரும் போற்றப்படுகிறது.

உலக வரலாற்றில் லெனினுக்குரிய இடம் அவர் மார்க்ஸீயத்தை செயல் சாத்தியமான அரசியல் நடைமுறை ஆக்கியமையாகும். அரசியல் சித்தாந் தங்கள் பற்றி மார்க்ஸ் குறிப்பிடும் பொழுது "தத்துவ ஞானிகள் உலகின் இயல்புகளை விளக்கியுள்ளனர். ஆனால் முக்கியப்படுவது யாதெனில் உலகத்தை மாற்றுவதேயாகும் 'மார்க் ஸீயம்" எனும் சித்தாந்தத்தை கையே ற்று அதனை ஆட்சி முறை நின்ற யதார்த்தமாக்கியது லெனினின் செயற் பாடுகளாகும். இதனாலேயே சோவி யத் ஒன்றியத்தின் தோற்றத்தின் பின் னர் தத்தம் நாடுகளிலே மார்க்ஸிய ஆட்சியைக் கொண்டுவர விரும்பிய தலைவர்கள் மார்க்சீயம் என்று மாத் திரம் கூறிவிடாது மார்க்ஸீயம் லெனி னிஸம் என்று கூறுவர்.

லெனினது சாதனை மார்க்ஸீயத்தை புரட்சிப் போராட்ட நிலையிலும் புரட்சி நிறைவேற்றப்பட்ட பின்னரும் அதனை ஒரு சமூக பொருளாதார முன்னேற்றத் துக்கான செயற்திட்டக் நடைமுறைக் கோவையாக்கியமையாகும். இது ஒரு முக்கியமான பங்களிப்பாகும். ஏனெ- னில் மார்க்ஸீய சித்தாந்த நிலையிலே கூறப்பெற்றிருந்த பலவற்றை லெனி னது தலைமை ரஷ்யாவின் தேவைக ளுக்கேற்ப திரிபு எதுவும் ஏற்படாமல் நடைமுறைப்படுத்தியதாகும். உண்மையில் லெனினின் மறைவின் பின்னரே சோவியத் ஒன்றியத்தின் ஆட்சி முறைபற்றிய விமர்சனங்கள் ஏற்படத் தொடங்கின.

ஏற்கனவே கூறியபடி மார்க்ஸீஸம் லெ- னினிஸம் ஆனதும் அது செயற் சாத் தியப்பாடுடைய ஒரு புரட்சிகர நடை முறையானது. உண்மையில் இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப் போக்கை நிர்ணயிப்பவர்களுள் லெனினது இடம் மிகப் பெரியதாகும்.

அக்டோபர் புரட்சி சோவியத் யூனியனிலே வலுவிழந்த நிலையிலே உள்ளதெனினும் உலக நாடுகளுக்கு குறிப்பாக மூன்றாவது உலக நாடுகள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு வரலாற்றுப் பாடமாக அமைகிறது.

தென்னாசிய சூழலில் காலனித்துவ அனுபவங்களினாலே பாதிக்கப்பட்ட நாடுகளிலே பொதுவுடைமைக் கட்சி மேலாண்மை மிக முக்கியமான ஓர் அம்சமாக உள்ளது. அதுவும் அந்தந்த பிரதேச மக்களின் நிலப் பகிர்வு வழியாகத் தோன்றிய பிரச்சினைகள் கூர்மையடைந்தவிடத்து பொதுவு- டமைக் கட்சிகள் நிர்வாக அதிகாரத் தைப் பெறும் நிலைமையை அடைந் தன. இந்தியாவில் மேற்கு வங்காளத் தில் ஏறத்தாழ ஒரு கால் நூற்றாண் டுக்கு மேலாக மார்க்ஸிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் ஆட்சியே தொடர்ந்து நடைபெறுகிறது. கேரளத்தில் பொதுவு டமைக் கட்சியின் தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அடிக்கடி மாநில நிர்வாகத்தை நடத்தி வந்துள்ளது.

**தொடர்ச்சி 30ம் பக்கம்....**

29ம் பக்க தொடர்ச்சி...

# அக்டோபர் 'ரசியப் புரட்சி"

அக்டோபர் புரட்சியின் ஆசிய ஆபிரிக்க தாக்கத்தைப் பற்றிப் பேசும் பொழுது 1960 களின் பிற்பகுதி 70 களின் தொடக்கத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இறுகிய பிடியை தளர்த்துவதற்காக சோவியத் யூனியன் மேற்கொண்ட அணிசேரா நாடுகளின் அரசுகளுக்கு வழங்கிய அடிநிலை ஆதரவு அணிசேரா நாடுகளிலே செயற்பட்ட பொதுவுடமைக் கட்சிகளுக்கு அவ்வவ் அரசுகளை ஆதரிக்க வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியது.

இப்படியான பல சம்பவங்களின் திரட்சி காரணமாக பல்வேறு நாடுகளின் பொதுவுடமைக் கட்சிகளிடையே பிளவு ஏற்பட்டது. இது சோவியத் சார்ந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் என்ற அடிப்படையிலேயே வேறுபாடுகள் ஏற்பட்டன.

இக்கட்டத்தில் சீனாவின் சோசலிச புரட்சிப் பற்றியும் அது மாவோ சேதுங்கினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைமை சோவியத் ஒன்றியத்திற்கும் சீன பொதுவுடமை இயக்கத்திற்கு முள்ள உறவு பற்றியும் ஒரு சிறு குறிப்பாவது வருதல் அவசியமாகிறது.

ரஷ்ய புரட்சியின் பொழுது ரஷ்ய சூழ்நிலைகள், உந்துதல்கள், யாவற்றுக்கும் மேலாக கிடைத்த தலைமை ஆகியன ஒன்றிணைந்தே சோவியத் வெற்றியையும் நிலைப்பாட்டையும் தீர்மானித்தன. சீனாவிலே, சீனாவின் வரலாறும் குறிப்பாக அதன் அடிப்படையான பொருளாதார சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்ட முறைமையையும் சீனா வுக்கு பக்கத்திலே உள்ள ஜப்பான் செயற்திறன் மிக்க ஒரு நாடாக மேற்கிளம்பியமையும், சீனப் பொதுவுடமை இயக்கத்தின் வளர் நிலைகளை பாதித்தன. இன்று பின்னோக்கி பார்க்கும் போது மாவோ சேதுங்கின் மிகப் பெரிய சாதனை அவர் சீனாவில் பொதுவுடமை ஆட்சியொன்றினை சீனப் பாரம்பரிய நிலமைகளுக்கும் தேவைகளுக்குமேற்ப அமைத்துக் கொண்டமையாகும்.

இதற்கான சிறந்த உதாரணம் மாவோவின் எண்ணக்கருக்களை (Thought of Mao) மாவோவின் சிந்தனைகள் என்றே சொல்வர். சீன மரபில் கொன்பியூசியஸ்ச் (Conficius) பற்றிக் குறிப்பிடும் போது Thoughts of conficius என்றே குறிப்பிடுவர். ரஷ்யப் புலமை மரபில் Thoughts of Lenin vd;Nwh Thoughts of Stalin என்றோ சொல்கிற மரபு கிடையாது. சீனப்புரட்சி விவசாய நிலைப் புரட்சியாகவே கருக்கொண்டு நிறைவேற்றப்பட்டது. உண்மையில் உலக கம்யூனிஸ வளர்ச்சி நிலையில் மார்க்ஸ், லெனின், (ஸ்ராலின்) ஆகியோருக்குள்ள முக்கியத்துவம் மாவோ சேதுங்கிற்கும் உண்டு. அவரது சாதனை சீனாவில் ஒரு சோசலிஸ புரட்சியை சீனப்புரட்சியாகவே வழி நடத்தி வெற்றியீட்டியமையாகும். பொதுவுடமை இயக்கம் பற்றிய வேறுபாடுகள் இறுதியில் கருத்து நிலை வேறுபாடுகளாக மாறும் நிலைமை மிக நுண்ணியதாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

அந்தந்த நாடுகளின் புரட்சி போராட்ட நிலைமை, வர்க்க உணர்வு நிலைமை ஆகியவற்றிலும் பார்க்க சோவியத் யூனியன் அல்லது சீனா சம்பந்தப்பட்ட நாட்டின் அரசியலில் பெற்றிருந்த இடத்தைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதாயிற்று. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இடதுசாரிக் கட்சிகளின் ஒற்றுமைக்கு வழிவகுத்த அதேவேளையில் அரசாங்க கட்சிகளாக இருந்த சக்திகளை ஆதரிக்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தியது.

இந்தியாவிலேயும் இப்பண்பு காணப்படுகின்றதென்றாலும் அங்கு நிலவும் மாநில மத்திய அரசுகளின் வேறுபாடுகள் அடிநிலைப் பொதுவுடமை இயக்கத்தைப் பாதிக்கவில்லை. இதற்கான நல்ல உதாரணம் இந்திய லோக்சபையிலுள்ள இடதுசாரி ஐக்கிய முன்னணியாகும். ஏறத்தாழ 60க்கும் மேற்பட்ட இடதுசாரி எம். பிக்கள் உள்ளனர்.

ஆனால் இலங்கையில் இந்தக் கூட்டுறவு பொதுவாக இடதுசாரிக் கட்சிகளையும் தாக்கியுள்ளது. இப்பொழுதுள்ள பாராளுமன்றத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி எம். பிக்கள் ஒரு சிலரைத்தவிர எவருமிலர். ஆனால் ஏறத்தாழ 25 வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் 20, 25 இடதுசாரி எம்.பிக்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இலங்கையின் அரசியலின் இன்றைய நிலைமையில் பெரிய இடதுசாரிக் கட்சிகள் இனக் குழும யுத்தம் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றித் தீர்க்கமான தீர்மானங்களை கொண்டிருக்கவில்லை என்பது நன்கு புலனாகிறது.

இலங்கைத் தீவின் ஒருங்கு நிலைப்பட்ட ஒற்றுமைப் பற்றி நோக்கும் பொழுது சிங்கள நிலைப்பாடு அதன் எதிர்விளைவான தமிழ் நிலைப்பாடு என அரசியற் களம் இரண்டு கூறுகளாகக் கிழிக்கப் பெற்றுள்ளது என்ற உண்மையை மறைத்துவிட முடியாதுள்ளது. இத்தகைய ஒரு சூழலில் மார்க்ஸீயக் கட்சிகளே சிங்களவர்களையும் தமிழர்களையும் சகத்தோழர்களாகப் பேணும் அமைப்புக்களைக் கொண்டவையாக இந்த அமைப்புக்கள் இன்று முற்று முழுதாக அரசாங்கத்துடன் நிற்பதுமல்லாமல் தமிழர் நிலைப்பட்ட தேசப் பிரச்சினைகளுக்கு தமக்கெனத் திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டினைக் கொண்டிருப்பதாகவும் தெரியவில்லை. சர்வகட்சி மாநாட்டுக்கு கூட சமசமாஜக் கட்சியினரும் பொதுவுடமைக் கட்சியினரும் தத்தமது நிலைப்பாடுகளைத் தெளிவாக பகிரங்கமாகக் கூறவில்லை என்ற குற்றசாட்டு உண்டு.

இத்தகைய ஒரு சூழலிலேதான் 1917 அக்டோபர் புரட்சியும் அதில் லெனின் வகித்த இடமும் மிக முக்கியமாகின்றன. அக்டோபர் புரட்சியில் இடம் பெற்ற ஒரு சுலோகம் இலங்கைக்கு இன்று பொருத்தமாகவுள்ளது. அது Peace, Land and bread என்பதாகும். சமாதானம், நிலம், உணவு என இதனை மொழிபெயர்க்கலாம். இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கு இலங்கையிலுள்ள சகல இனத்தினரும் இலங்கையர் என்ற வகையில் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் உரியவர்களாவார்.

அக்டோபர் புரட்சியின் வரலாறு சோவியத் ஒன்றியத்தின் வரலாற்றில் இதனைச் சாத்தியமாக்கிற்று. அத்தகைய ஒரு நடைமுறையை மேற்கொள்வது அக்டோபர் புரட்சியின் வரலாற்று முக்கியத்துவத்தினை ஏற்றுக் கொண்ட ஒவ்வொருவரினதும் பணியாகின்றது.

“ 25 வருடங்களுக்கு முன்னர் குறைந்த பட்சம் 20, 25 இடதுசாரி எம்.பிக்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இலங்கையின் அரசியலின் இன்றைய நிலைமையில் பெரிய இடதுசாரிக் கட்சிகள் இனக் குழும யுத்தம் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் பற்றித் தீர்க்கமான தீர்மானங்களை கொண்டி ருக்கவில்லை என்பது நன்கு புலனாகிறது. ”


தமிழரின் நிர்வாகத்தில்...
WING MACHINE
கோடைகால சுற்றுலாக்களை குதூகலத்துடன் சுவையான உணவுடன் கொண்டாடி மகிழ...
அழையுங்கள் பபி 416 493 8050
3123 Sheppard Ave, East (South side west of pharmacy) Scarborough ON

# from bad credit to Creating Wealth

*for the best rate & only the best rate!*




CMP Canadian Mortgage Awards 2010

கனடிய மோட்கேஜ் விருது

* 90% வரை இரண்டாம் அடமானம் பெற்றுத் தருகிறோம்
* கிறடிற் ஸ்கோர் குறைவானாலும் மோட்கேச் தருகிறோம்.
* அதி குறைந்த வட்டி வகிதத்தில் மோட்கேச் எடுக்கும் வசதி.
* கடன் அனைத்துக்கும் ஒரு சுமூகமான தீர்வு!.



**SUGANTHAN THAVARAJASINGAM**
Business Development Manager

**416-283-2377 Ext 216**

OBSIDIAN

35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9 **MORTGAGE AGENT #M08010501**

Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic # 10473

| 1.85% | 3.85% | 3.75% |
|---|---|---|
| VARIABLE 3 YRS | FIXED 3 YRS | LINE OF CREDIT |

# கனடிய நாடாளுமன்றத்தின் உள்ளே கனடிய தமிழர் பேரவை மே நினைவேந்தல் அனுட்டிப்பு




சிறிலங்காவில் இடம்பெற்ற போரில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் நினைவாக மே 11, 2010 அன்று நடத்தப்பட்ட நினைவேந்தல் நிகழ்ச்சியில் எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த கனடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



முள்ளிவாய்க்கால் போரின் கடைசிக் கட்டத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவு கூரும் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியை கனடிய தமிழர் பேரவை

ஒழுங்கு செய்திருந்தது. எல்லா சமயத்தையும் சேர்ந்த குருமார்கள் பிரார்த்தனை வழிபாடு நடத்தினார்கள். புதிய மக்களாட்சிக் கட்சித் தலைவர் யக் லேய்டன், லிபரல் கட்சியின் வெளியுறவு அமைச்சின் விமர்சகர் பொப் றே, பற்றிக் பிரவுண் நா.உ. (Barrie - பழமைவாதக் கட்சி) பன்னாட்டு மனிதவுரிமைகள் அமைப்பின்உபகுழுவின் துணைத் தலைவர் ஜேன் டோறியன் நா.உ. (Longueuil-Pierre-Boucher புளக் கியூபெக்வா) ஆகியோர் தங்கள் கட்சிசார்பாக சிற்றுரை நிகழ்த்தினார்கள். போர்க்குற்றங்கள் பற்றிப் பக்கசார்பற்ற விசாரணையின் அவசியம் மற்றும் மறுவாழ்வு உதவிகள் தமிழர் பகுதிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய தேவை போன்றவை உள்ளிட்ட பல விடயங்கள் பற்றிப் பேசினார்கள். அன்று காலை பிறம்ரன் மேற்கு நா.உறுப்பினர் அன்றூ கானியா போர்க்குற்றங்கள் பற்றி பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் விண் ணப்பம் ஒன்றை கனடிய நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்தார். டொன்வலி மேற்கு நா.உறுப்பினர் பொப் ஒலிபந்தும் பேசினார்.




கனடிய நாடாளுமன்றத்துக்கு உள்ளே நடந்த இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் 30கும் கூடுதலான நாடாளு மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண் டார்கள். பல பிரமுகர்கள் படுகொலைகளை நினைவு கூருமுகமாக சிவப்பு நாடாக்களை அணிந்து கொண்டு சிவப்பு நாடா பரப்புரையில் கலந்து கொண்டார்கள்.

இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியில் கனடாவுக்கு விரைவில் வருகை தர இருக்கும் அய்யன்னாவின் செயலாளர் நாயகம் பன்




கீ மூன் அவர்களை போர்க்குற்றங்களை விசாரிக்க ஒரு ஆணைக்குழுவை நியமிக்குமாறு கனடிய அரசு வேண்டுகோள் விடுக்க வேண்டும் என்று கனடிய தமிழர் பேரவை கனடிய அரசைக் கேட்டுக் கொண்டது. 'பன்னாட்டு குற்றங்களை இழைத்தவர்கள் அவர்களது செயலுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதை கனடா நிச்சயப்படுத்த வேண்டும்" என கனடிய தமிழர் பேரவையைச் சேர்ந்த திரு குபேஸ் நவா கேட்டுக் கொண்டார்.

